November 2023

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

14 YEARS ANNIVERSARY

## தீபாவளி மலர்




VARSHA™
தீபாவளி
வாழ்த்துக்கள்

# ஐ தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

November 2023

சுவடி— 13
ஓலை— 8

உள்ளே...

## வணக்கம் பல

போரில் ஈடுபட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்ற ஒரு சித்தாந்தமோ வேதாந்தமோ மனிதனுக்குள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது போலும்! தனது புறநிலையில் பிறரிடத்தோ விலங்குகளிடத்தோ போரிடுவதும், அகநிலையில் தன் அறிவினுக்கு எட்டியோ எட்டாமலோ அவன் ஒரு யுத்தத்தில் இருக்கிறான்! தன் அகநிலையில் நடக்கின்ற போரில் வெற்றி கண்டால் அமைதி அடைந்து மனம் ஒருநிலைப்பட்டு உயர்வதோடு, வாழ்வில் தனக்கான இடத்தை உறுதி கொள்பவன், ‘மனிதன் என்பவன் தெய்வமாகலாம்!’ என விடைபெறுகிறான்! புறநிலையில் தொடர்கின்ற போரிலோ, பொதுவெளியில் கலந்து, தன்னையும் சுற்றியுள்ளவர்களையும் பங்கெடுக்கச் செய்து, எண்ணற்ற அப்பாவி உயிர்கள் காவு கொடுப்பதற்கு காரணியாகி விடுகிறான்!

காசா மீது இஸ்ரேல் கொடுத்திருக்கும் போர், உலகில் பேசுபொருளாகி போரின் தீவிரத்தைப் பொதுமக்களுக்கு எடுத்துக்காட்டுவதாக அமைந்திருக்கிறது. அப்பாவி மக்கள் கொல்லப்படுவது தவிர்க்க முடியாதது என்ற வாதத்தை இன்னமும் சொல்லிக் கொண்டிருப்பது மனிதகுல நாகரிகத்திற்கும் வளர்ச்சிக்கும் நல்லதல்ல! போரின் கோர முகத்தை உலகின் பல நாடுகள் காட்டத் தொடங்கி இருக்கின்றன. போரினால் பலி வாங்கப்படுவது மனித உரிமைகள் மட்டுமல்ல! நிலவியலும், சுற்றுச்சூழலும் கூட! எனவே போர் அறவே ஒழிக்கப்பட்ட பூவுலகில் அமைதி நிலவட்டும்! உலக மாந்தர் அனைவரும் இதனையே வேண்டுதலாக கொள்ள வேண்டும்! சீனாவின் கரங்களுக்குள் பூட்டான், தனித்துவமான நாடாக, பகைமை பாராட்டாமல் நட்பு நாடுகின்ற ஒரு நல்ல சிந்தனையை விதைக்க போகிறதா என்பதையும், அடுத்து வரும் காலங்கள் நமக்குச் சொல்லக்கூடும்!

இது தீப ஒளித் திருநாள் மலர்கின்ற பொழுது!... உலகெங்கும் வசந்தத்தை வரவேற்பதற்குத் தயாராகக் கூடிய கார்த்திகை, மார்கழி மாதங்களில் மண் குளிரும்! மரம் குளிரும்! அதனால் மக்களின் மனம் குளிரும்! தீபத்திருநாளை வரவேற்கும் முகமாக, வழக்கத்தை விடவும் கூடுதலாக கதை, கவிதை, இலக்கியம் எனப் பலவற்றை உள்ளடக்கியவாறு தீபாவளி மலராக மலர்கிறது நமது ‘அய் தமிழ்.’தீபத்திருநாளில் அறியாமை இருள் நீங்கி அறிவு ஒளி உலகெங்கும் பரவிட, இயற்கை நம்மை வழி நடத்தட்டும்! மனிதமும் இணைந்து கரம் கொடுக்கட்டும்! என்ற சிந்தனையோடு மலர்கின்ற நமது ‘அய் தமிழ்’ தீபாவளிச் சிறப்பிதழை வரவேற்று வாசித்து நேசித்து மகிழுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு




**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

ஆப்பிழுத்த மந்தி !

நன்றி கடன்

யுத்தம் இல்லா
காலம் வேண்டும்

நினைவு அலைகள்

யோக யோகம் !

மரபு வழி நிற்போம்

# உள்ளே


தமிழே தமிழே
தல வலம்
தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்
மருத்துவ தமிழ்

கவிதைகள்

சிறுகதைகள்

சினிமா
பாலிவுட், கோலிவுட், டோலிவுட், மாலிவுட்

# ஆப்பிழுத்த

## இஸ்ரேல் – ஹமாஸ் யுத்தம் : ஏன் தாக்கியது ஹமாஸ்?

அக்டோபர் 7—ம் தேதி நடத்தியது மிகக் கொடூரமானது. ராணுவ நிலைகளைத் தாண்டி குடியிருப்புப் பகுதிகளிலும் நுழைந்து அப்பாவி பொதுமக்கள் பலரைக் கொன்றனர். ஹிட்லர் கால ஜெர்மனியில் யூதர்கள்மீது நாஜிக்கள் நடத்திய தாக்குதலுக்குக் கொஞ்சமும் குறைவில்லாத கொடூரம், இஸ்ரேல் வலிமையான ராணுவத்தை வைத்திருக்கும் ஒரு நாடு என்பது தெரியும். இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் வரிந்து கட்டிக்கொண்டு வரும் என்பது தெரியும். இஸ்ரேலை யாராவது தாக்கினால், அவர்களுக்குப் பேரழிவு காத்திருக்கிறது என்பது தெரியும்.




இதன் விளைவுகள் தெரியும்போது, இஸ்ரேல் ராணுவத்துடன் கடந்த 30 ஆண்டுகளாக மோதிக்கொண்டிருக்கும் ஹமாஸ் அமைப்புக்கு இது தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. இருந்தாலும், ஹமாஸ் ஏன் இப்படி ஒரு தாக்குதலைத் தொடுத்தது?

யூதர்களுக்கு சனிக்கிழமை 'சபாத் தினம்'. தங்கள் மத நம்பிக்கைகள்படி அன்று அவர்கள் வேலை செய்யாமல் ஓய்வெடுப்பார்கள். இப்படி ஒரு ஓய்வுநாளான அக்டோபர் 7—ம் தேதியை தெற்கு இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கான நாளாகத் தேர்வு செய்தது ஹமாஸ். அரபு நாடுகள் பலவும் கூட்டணி அமைத்தோ, தனியாகவோ இஸ்ரேலுடன் சண்டை போட்டிருக் கின்றன. ஆனால், இஸ்ரேல்மீது ஒரு தனிப்பட்ட பயங்கரவாத அமைப்பு நடத்திய மிகப்பெரிய தாக்குதல் இதுதான். பாலஸ்தீனத்தின் காஸா பகுதியிலிருந்து அதிரடியாக இஸ்ரேலுக்குள்





# மந்தி!

நுழைந்த நூற்றுக்கணக்கான ஹமாஸ் அமைப்பினர், கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தினர்.

இதற்குமுன்பு சின்னச் சின்னதாக ஹமாஸ் பல தாக்குதல்களை இஸ்ரேலில் நிகழ்த்தியிருந்தாலும், அக்டோபர் 7—ம் தேதி நடத்தியது மிகக் கொடூரமானது. ராணுவ நிலைகளைத் தாண்டி குடியிருப்புப் பகுதிகளிலும் நுழைந்து அப்பாவி பொதுமக்கள் பலரைக் கொன்றனர்.

பல மணி நேரம் வீடுவீடாகத் தேடுதல் வேட்டை நடத்தி பலரையும் கொன்றனர். குழந்தைகளின் கண்ணெதிரே கொல்லப்பட்ட பெற்றோர்கள், இளைஞர்களைப் பணயக்கைதிகளாகப் பிடித்துக்கொண்டு அவர்களின் பெற்றோரைக் கொன்றது, சில இடங்களில் குழந்தைகள் மற்றும் மூதாட்டிகளைக்கூட விட்டுவைக்காதது என்று ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களைக் கொன்றனர் ஹமாஸ் தீவிரவாதிகள்.




150 பேரைப் பணயக்கைதிகளாக சிறைபிடித்துக்கொண்டு காஸா திரும்பினர்.

இந்தத் தாக்குதல், காஸா பகுதியில் வசிக்கும் சுமார் 23 லட்சம் பாலஸ்தீனர்களை பேராபத்தில் தள்ளியிருக்கிறது. எப்போதும் இஸ்ரேல் பகுதியில் பாலஸ்தீனர்கள் மீது முரட்டுத்தனமாக தாக்குதல் நடத்தி உலக நாடுகளின் கண்டனத்துக்கு ஆளாவது இஸ்ரேலின் வழக்கமாக இருந்தது. ஹமாஸ் நிகழ்த்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்குப் பின் முதல்முறையாக இஸ்ரேலின் பக்கம் நின்று பல நாடுகள் பேசின.




எல்லாவற்றையும் தாண்டி தங்களது ராணுவ வல்லமையால் அரபு நாடுகளை மிரட்டிக்கொண்டிருந்த இஸ்ரேலுக்கு இந்தத் தாக்குதல் பெரும் அவமானமாக அமைந்தது. அதனால் உடனடியாக அது போர் முழக்கம் செய்தது. 'காஸாவில் இருக்கும் பொதுமக்கள் எல்லோரும் 24 மணி நேரத்துக்குள் தெற்கு காஸாவை அடைய வேண்டும். வடக்கு காஸாவில் இருக்கும் ஹமாஸ் தீவிரவாதிகளை அழிக்கப் போகிறோம்' என்றது. ஆனால், அதற்கு முன்பாகவே காஸா முழுக்க பேரழிவு ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல்களைத்




தொடங்கிவிட்டது இஸ்ரேல்.

கடந்த இரண்டு வாரங்களாக காஸாவில் நடைபெறும் தாக்குதல்களில் மிக மோசமானது, உலகையே பதைபதைக்க வைத்தது, காஸா நகரில் இருக்கும் அல் அஹ்லி மருத்துவமனை மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல். அங்கு சிகிச்சை பெற்று வந்த குழந்தைகள் உள்பட 400 பேர் இந்தத் தாக்குதலில் இறந்தனர்.

'இஸ்ரேல் ராணுவத்தின் தாக்குதல்தான் இது' என்று பாலஸ்தீனர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆனால், 'காஸா பகுதியில் ஹமாஸ் போலவே செயல்படும் இஸ்லாமிக் ஜிகாத் தீவிரவாத அமைப்பின் வேலைதான் இது. அவர்கள் இஸ்ரேலில் தாக்குதல் நடத்த முயன்றபோது தவறுதலாக மருத்துவமனையில் குண்டு விழுந்திருக்கிறது. நாங்கள் இதைச் செய்யவில்லை' என்று இஸ்ரேல் மறுத்திருக்கிறது.

இதுபோன்ற தாக்குதல்கள் இனி நடக்காது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்பதுதான் வேதனை. இந்த சந்தர்ப்பத்தைக் காரணமாக வைத்து ஹமாஸ் அமைப்பை வேரோடு அழித்துவிட்டு, காஸா பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கு முனைப்பு காட்டுகிறது இஸ்ரேல். 'ஹமாஸ் அமைப்பில் ஒருவரையும் மிச்சம் வைக்கமாட்டோம்' என்று கொந்தளிக்கிறார் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு. ஹமாஸ் அமைப்பு இப்படி இஸ்ரேல் ராணுவத்தின் முழுமையான தாக்குதலை இதுவரை சந்தித்தது கிடையாது. பணயக்கைதிகளை வைத்துக்கொண்டும், காஸா பொதுமக்களுடன் கலந்தும் அந்த அமைப்பினர் இஸ்ரேல் ராணுவத்தை சமாளிக்கப் பார்க்கக்கூடும். சர்வதேச போர் நியதிகளை இஸ்ரேல் ராணுவமே சர்வசாதாரணமாக மீறும்போது, ஹமாஸ் அமைப்பிடம் அதை எதிர்பார்க்க முடியாது. எனவே, இந்தப் போர் ஒருபக்கம் இஸ்ரேலில் வாழும் யூதர்கள், காஸா மற்றும் மேற்குக்கரையில் வாழும் பாலஸ்தீனர்கள் என்று பொதுமக்களையே ஆபத்தில் தள்ளியிருக்கிறது.




நாடுகளுடனான நேரடிப் போரில் இஸ்ரேல் எளிதில் வென்றுவிடும். நவீன தொழில்நுட்பமும் அதிநவீன போர் ஆயுதங்களும் அவர்களிடம் உள்ளன. ஆனால், கெரில்லா தாக்குதல் நடத்தும் ஆயுதக்குழுக்களை இஸ்ரேல் சமாளிக்க முடியாமல் தடுமாறும் என்பதுதான் கடந்த கால வரலாறு. லெபனான் நாட்டில் இருந்தபடி தங்களுடன் மோதிக்கொண்டிருக்கும் ஹிஸ்புல்லா அமைப்பை ஒழிப்பதற்கு இஸ்ரேல் ராணுவம் 18 ஆண்டுகளாக ஏதேதோ செய்கிறது. ஆனால், ஹிஸ்புல்லா அமைப்பு முன்பைவிட வலிமையாகவே வளர்ந்திருக்கிறது. இப்போதும் அது இஸ்ரேலை தாக்கியபடி இருக்கிறது.




ஹமாஸ் கதையும் இப்படித்தான். சின்னச்சின்ன தற்கொலைப்படை தாக்குதல்களை நடத்திய அமைப்பு, இப்போது பெரிதாக வளர்ந்திருக்கிறது. அல் கொய்தா போலவோ, ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு போலவோ அது வெறுமனே ஆயுதப்பயிற்சி பெற்ற தனிநபர்கள் மட்டுமே இருக்கும் அமைப்பு கிடையாது. பாலஸ்தீன மக்களிடம் கணிசமான செல்வாக்கு பெற்ற அமைப்பு. எப்படி ஆப்கானிஸ்தானில் மக்களுடன் தாலிபன்கள் கலந்திருந்து அமெரிக்க தாக்குதலை 20 ஆண்டுகள் சமாளித்தார்களோ, அப்படி ஹமாஸ் அமைப்பும் சமாளிக்கக்கூடும்.

இந்தச் சூழல்தான் இஸ்ரேல் — ஹமாஸ் யுத்தத்தினை இன்னும் சிக்கலானதாக மாற்றியிருக்கிறது. உலகின் மிகுந்த மக்கள் நெரிசல்மிக்க நகர்ப்புறப் பகுதி ஒன்றில் நீண்ட காலத்துக்கு நடக்கப் போகும் யுத்தமாக இது மாறக்கூடும். இவ்வளவு ஆபத்தான பின்விளைவுகள் வரக்கூடும் என்று தெரிந்தும், ஹமாஸ் ஏன் தாக்குதலைத் தேர்வு செய்தது? காரணம், இஸ்ரேலுக்கு இப்போது கிடைத்திருக்கும் அங்கீகாரம்.

மத்தியக் கிழக்கு ஆசியாவில் அரபு நாடுகளுக்கு மத்தியில் யூதர்களின் தேசமாக இஸ்ரேல் உதயமான நாளிலிருந்து அதை விரோதியாகவே அரபு நாடுகள் பார்த்தன. அதை ஒரு தேசமாகவே யாரும் அங்கீகரித்ததில்லை. இஸ்ரேலுடன் அங்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ யுத்தம் செய்யாத நாடுகளே இல்லை என்று சொல்லலாம். ஆனால், எவ்வளவு நாட்களுக்குத்தான் பக்கத்தில் இருக்கும் ஒருவரை விரோதியாகவே பார்த்துக் கொண்டிருக்க முடியும்?! கடந்த ஐம்பது ஆண்டுகளில் இஸ்ரேலுடன் எந்த அரபு நாடும் யுத்தம் செய்ததில்லை. மாறாக இயல்பான உறவு வட்டத்துக்குள் இதுவரை ஆறு நாடுகள் வந்துவிட்டன. அமெரிக்காவின் ஏற்பாட்டில் முதன்முதலில் எகிப்து பேச்சுவார்த்தை நடத்தி இஸ்ரேலுடன் ராஜ்ஜிய உறவுகளை ஏற்படுத்திக்கொண்டது. அடுத்து ஜோர்டான் இதைச் செய்தது. 'ஆப்ரஹாமிக் ஒப்பந்தங்கள்' என்று அழைக்கப்படும் இதேபோன்ற ஒப்பந்தங்களை மற்ற நாடுகளும் படிப்படியாக ஏற்படுத்திக்கொண்டன.




'அரபு அமைதி முயற்சி' என்ற பெயரில் சவூதி அரேபியா கடந்த 2002—ம் ஆண்டில் ஒரு அமைதி முயற்சியை எடுத்தது. 'கடந்த 1967—க்குப் பிறகு ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும். பாலஸ்தீன அகதிகள் பிரச்னையைத் தீர்க்க வேண்டும், சுதந்திர பாலஸ்தீனத்தின் தலைநகராக கிழக்கு ஜெருசலேமை ஆக்க வேண்டும். இதை ஏற்றுக்கொண்டால் அரபு நாடுகள் இஸ்ரேலுடன் உறவு பாராட்டும்' என்றது. அரபு லீக் அமைப்பும் இதை வழிமொழிந்தது. ஆனால், இந்த நிபந்தனைகளை இஸ்ரேல் ஏற்கவில்லை. இதற்கிடையே அமெரிக்கா தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு அரபு நாட்டுக்கும் நிர்ப்பந்தம் கொடுத்து, இஸ்ரேலுடன் இணக்கமாகப் போகச் சொன்னது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பஹ்ரைன்,




சூடான், மொராக்கோ என்று அடுத்தடுத்து பல நாடுகள் இஸ்ரேலுடன் இணக்கமாகப் போயின. கடைசியாக இப்போது இஸ்ரேலின் பரம எதிரியாக இருந்த சவூதி அரேபியாவும் பேச்சுவார்த்தையில் இறங்கியது. பாலஸ்தீனம் தொடர்பாக எந்த உறுதிமொழியும் கொடுக்காமலே அரபு நாடுகளுடன் இஸ்ரேல் நட்பாகப் போக முடிவது, பாலஸ்தீனர்களை கோபப்படுத்தியது. இந்தக் கோபத்தையே இப்போது தாக்குதல் மூலம் ஹமாஸ் வெளிப்படுத்தியது. இந்தத் தாக்குதலுக்குப் பிறகு அரபு உலகமே கொந்தளித்து நிற்க, சவூதி அரேபியா பேச்சுவார்த்தையை நிறுத்திவிட்டது.

பாலஸ்தீனர்களுக்காக எல்லைகளைக் கடந்து பல அரபு நாடுகளிலும் மக்கள் வீதிக்கு வருவார்கள் என்று ஹமாஸ் எதிர்பார்த்தது நடந்துவிட்டது. ஏன் அப்படி எல்லோரும் வர வேண்டும்? பாலஸ்தீனத்துக்கு என்ன ஆனது?

இஸ்ரேல், பாலஸ்தீனம் என்று இரண்டு பிரதேசங்களும் முக்கியமாகக் கருதுவது ஜெருசலேம் நகரை! உலகின் மிகப் பழைமையான நகர்களில் ஒன்றான ஜெருசலேம், ஆபிரகாமிய மதங்களான யூத மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாமிய மதம் என மும்மதங்களாலும் புனித பூமியாகக் கருதப்படுகிறது.




பழைய ஜெருசலேமில் கோயில் மலை என்ற யூதர்களின் வழிபாட்டுப் பகுதி உள்ளது. இங்கிருக்கும் ஞிஷீனீமீ ஷீயீ மீலீமீ ஸிஷீநீளீ யூதர்களின் புண்ணியத்தலம். இதையொட்டி இருக்கும் மேற்குச் சுவர் எனப்படும் அழுகைச்சுவர், கி.மு காலத்தைய கட்டுமானம். பழைமையான யூத தேவாலயத்தின் எஞ்சிய பகுதியாக இது கருதப்படுகிறது. 'நான் உங்களுடன் இருக்கிறேன்' என்று தங்களுக்கு இறைவன் இந்த சுவர் வழியாக உணர்த்துவதாக யூதர்கள் நம்புகிறார்கள். இந்த சுவரில் சாய்ந்து அழுவதை ஒரு புனித யாத்திரை போல யூதர்கள் கருதுகிறார்கள்

இந்த மேற்குச்சுவரை ஒட்டியிருக்கிறது அல் அக்சா மசூதி. ஜெருசலேமின் மிகப் பழைமையான, மிகப்பெரிய மசூதி இது. இந்த மசூதி இருக்கும் மலைப்பகுதியிலிருந்துதான் நபிகள் நாயகம் விண்ணுலகிற்குச் சென்று வந்ததாக நம்பிக்கை. அதனால், இஸ்லாமியர்களுக்கு மெக்கா மற்றும் மதீனாவை அடுத்து மூன்றாவது முக்கியமான புனிதத்தலமாக இது இருக்கிறது.

ஜெருசலேமில் இருக்கும் Church of the Holy Sepulchre, உயிர்த்தெழுந்த தேவாலயம் எனப்படுகிறது. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது, அவர் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தது ஆகிய நிகழ்வுகள் நடந்ததாக நம்பப்படும் பகுதிகள் இந்த தேவாலய வளாகத்தில் உள்ளன. உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள்

மிகவும் புனிதமாகக் கருதும் புண்ணியத்தலம் இது. கடந்த கி.பி நான்காம் நூற்றாண்டிலிருந்து இங்கு புனித யாத்திரை வருவதை கிறிஸ்தவர்கள் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஜெருசலேம், அதைச் சுற்றியிருக்கும் நிலப்பரப்பு ஆகியவற்றுக்காக மோதல் தொடர்வதில் வியப்பில்லை. இஸ்ரேலின் ஆதிகுடிகளாக இருந்தவர்கள் யூதர்கள். ஆனால், தொடர்ச்சியாக அசிரியன் பேரரசு, பாபிலோனியப் பேரரசு மற்றும் ரோமப் பேரரசுடன் நடந்த போர்கள் அவர்களை சின்னாபின்னமாக்கின. பலர் கட்டாயமாக நாடு கடத்தப்பட்டனர், பலர் மத்திய தரைக்கடலைத் தாண்டிச் சென்று பல்வேறு பகுதிகளில் குடியேறினர். மத்தியக் கிழக்கு ஆசியாவிலும் ஐரோப்பா முழுக்கவும் இப்படி யூதக் குடியேற்றம் நிகழ்ந்தது. காலப்போக்கில் அந்தப் பிரதேசம் பாலஸ்தீனமாக மாறியது.

பாலஸ்தீனத்தில் பணக்கார யூதர்கள் எங்கெங்கோ இருந்துவந்து நிலங்களை வாங்கிக் குவிக்க ஆரம்பித்தனர். இதன் உள்நோக்கம் தெரியாத பாலஸ்தீனர்கள், குறைந்த விலைக்கு நிலங்களை விற்றனர். படிப்படியாக யூதர்கள் குடியேற்றம் நிகழ ஆரம்பித்தது.

இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரின் ஜெர்மனி நிகழ்த்திய போர்க்குற்றங்களில் அதிக இழப்பைச் சந்தித்த யூதர்களுக்குத் தனி நாடு உருவாக்குவதை ஐ.நா சபையே ஏற்றது. 1947 நவம்பரில் பாலஸ்தீனத்தை யூதர்கள் பகுதி, அரபுப் பகுதி என்று பிரித்து ஒரு வரைபடத்தை ஐ.நா உருவாக்கி ஏற்றது. அரபு நாடுகள் பலவும் இதை எதிர்த்தன. இஸ்ரேலுக்கு எதிராக பல நாடுகளும் போர்க்கொடி உயர்த்தின. இப்படி முரண்பாடுகள் முற்றிய சூழ்நிலையில், 1948 மே 14—ம் தேதி பாலஸ்தீனத்தில் தங்கள் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டதாக அறிவித்தது. யூதர்களின் அரசியல் தலைவரான டேவிட் பென்குரியன், இஸ்ரேல் என்ற தேசம் உருவாகிவிட்டதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

இந்த அறிவிப்பு வெளியான மறுநாளே எகிப்து, ஜோர்டான், சிரியா மற்றும் லெபனான் ஆகிய நான்கு நாடுகளும் இணைந்து இஸ்ரேல் மீது போர் தொடுத்தன. 1949 ஜூலையில் போர் முடிந்தபோது, அரபு நாடுகள் நான்கும் தோல்வியை ஒப்புக்கொள்ள நேர்ந்தது. பழைய பாலஸ்தீனத்தின் 80% நிலப்பரப்பை இஸ்ரேல் பிடித்துவிட்டிருந்தது. தற்போது பாலஸ்தீன சுயாட்சிப் பிரதேசத்தின் தலைமையகமாக இருக்கும் மேற்குக்கரையை ஜோர்டான் கைப்பற்றியது. காஸா நிலப்பரப்பை எகிப்து கைப்பற்றியது. சுமார் ஏழரை லட்சம் பாலஸ்தீனர்கள் வீடிழந்து, நாடிழந்து அகதிகளாக








இஸ்ரேலிலிருந்து வெளியேற நேர்ந்தது. அவர்களில் பெரும்பாலானவர்கள் காஸாவில் போய்க் குடியேறினர். 'நக்பா' என தங்களுக்கு நேர்ந்த பேரழிவாக இதை பாலஸ்தீன மக்கள் வரலாற்றில் பதிவிடுகின்றனர்.

இஸ்ரேல் உருவானபிறகு, மத்தியக் கிழக்கு ஆசியாவில் தொடர்ந்து சண்டைகள் நடக்கத்




தொடங்கின. சூயஸ் கால்வாய் தொடர்பான பிரச்னையில் எகிப்து மீது போர் தொடுத்தது இஸ்ரேல். பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் அதற்கு உதவின. காஸா பகுதி இதன்பின் இஸ்ரேல் ஆதிக்கத்தில் வந்தது.


1973—ம் ஆண்டு யோம் கிப்புர் போர் எனப்படும் நான்காவது இஸ்ரேல் — அரபுப் போர் நடைபெற்றது. அதுவரை எல்லாப் போர்களிலும் ஆதிக்கம் செலுத்திய இஸ்ரேல், முதல்முறையாக இதில் கடும் இழப்புகளை சந்தித்தது. எகிப்து மற்றும் சிரியா தலைமையிலான அரபுப் படைகள் நடத்திய தாக்குதலில் 2,700 இஸ்ரேல் வீரர்கள் இறந்தனர். ஆயிரக்கணக் கானவர்கள் காயமடைந்தனர். அரபுப்படைகளுக்கு ரஷ்யாவும், இஸ்ரேல் படைகளுக்கு அமெரிக்காவும் ஆயுத சப்ளை செய்ய, கிட்டத்தட்ட இரண்டு வல்லரசுகளின் வலிமையை




சோதிக்கும் யுத்தக்களமாக இது மாறியது. கடைசியில் ஐ.நா தலையிட்டு அமைதியை நிலைநிறுத்தியது.

போரில் சந்தித்த இழப்புகளுக்குப் பிறகே, பாலஸ்தீனர்கள் வசிக்கும் பகுதியில் அவர்களுக்கு சுயாட்சி வழங்குவது குறித்து யோசிக்க ஆரம்பித்தது இஸ்ரேல். அதற்கான பேச்சுவார்த்தைகள் 20 ஆண்டுகள் நடைபெற்று, கடைசியில் 1993—ம் ஆண்டு ஆஸ்லோ ஒப்பந்தம் கையெழுத்தாகியது. அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் முன்னிலையில் இஸ்ரேல் பிரதமர் யிட்ஷாக் ராபினும், பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அராபத்தும் கையெழுத்திட்டனர். மேற்குக்கரை மற்றும் காஸா பகுதிகள் பாலஸ்தீன தேசிய ஆணையத்தின் கட்டுப்பாட்டில் சுயாட்சிப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டன. அது தனி நாடாக இல்லாமல், இஸ்ரேலின் ஆளுகைக்கு உட்பட்ட சுயாட்சிப் பிரதேசமாக அமைந்ததில் பெரும்பாலான பாலஸ்தீனர்களுக்கு அதிருப்தி. இன்னொரு பக்கம் இஸ்ரேலின் தீவிர வலதுசாரிகளும் இதை எதிர்த்தனர். ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்ட இஸ்ரேல் பிரதமர் யிட்ஷாக் ராபின் இரண்டே ஆண்டுகளில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

2005—ம் ஆண்டு யாசர் அராபத் மரணமடையும் வரை, அவரின் ஆளுமைக்காக அடங்கியிருந்த பாலஸ்தீனர்கள் கிளர்ந்தெழத் தொடங்கினர். அதற்கு முன்பே ஹமாஸ் அமைப்பு அங்கு ஆழமாக வேரூன்றி இருந்தது. இந்த அரசியல் மற்றும் ஆயுதப் போராட்டங்களுக்கு மத்தியில் பாலஸ்தீனர்கள் பல நாடுகளுக்கு அகதிகளாகப் போய்க் குடியேற





நேர்ந்தது. இன்று உலகிலேயே அதிக அகதிகளை உருவாக்கிய மண்ணாக பாலஸ்தீனம் திகழ்கிறது.

ஒரு பக்கம் இஸ்ரேலுக்கு ராணுவ உதவிகளும் ஆயுதங்களும் வழங்கிக்கொண்டிருக்கும் அதே நாடுகள்தான், இன்னொரு பக்கம் பாலஸ்தீன அகதிகளுக்கான நிவாரணப் பணிகளுக்கு நிதியுதவியும் செய்கின்றன என்பதுதான் முரண்பாடுகள் நிறைந்த உண்மை.

ஒரு புள்ளிவிவரம்ஞ் காஸா பகுதியில் முதல் 12 நாள்களில் இஸ்ரேல் நிகழ்த்திய தாக்குதல்களில் பலியானவர்கள் 4,000 பேர். இவர்களில் நூற்றுக்கணக்கான குழந்தைகளும் அடக்கம். 11 ஆயிரம் பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இதுதவிர, ஹமாஸ் தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தில் நூற்றுக்கணக்கானவர்களைக் கைது செய்துள்ளது இஸ்ரேல் ராணுவம்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க ராணுவம் ஓராண்டு காலத்தில் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதல்களைவிட காஸாவில் ஒரே வாரத்தில் இஸ்ரேல் நிகழ்த்திய குண்டுவீச்சுகளின் எண்ணிக்கை அதிகம். காஸாவின் பரப்பளவு 365 சதுர கி.மீ. ஆப்கானிஸ்தானின் பரப்பளவு 652,864 சதுர கி.மீ. ஒப்பிடும்போது காஸாவை விட ஆப்கானிஸ்தான் 178,770% பெரிய நிலப்பரப்பு. இவ்வளவு சிறிய நிலத்துண்டில் இஸ்ரேல் நிகழ்த்தும் குண்டுவீச்சுக்கு மருத்துவமனைகள், ஐ.நா கட்டுப்பாட்டில் இருக்கும் அகதிகள் முகாம்கள், மசூதிகள், தேவாலயங்கள் என்று எதுவுமே தப்பவில்லை.




ஹமாஸை வீழ்த்துவதற்கு இஸ்ரேலுக்கு தார்மீக நியாயங்கள் உண்டு என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், இப்படிக் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தும் இஸ்ரேல் யுத்தம் செய்வது ஹமாஸுக்கு எதிராகவா? அல்லது ஒட்டுமொத்த பாலஸ்தீன மக்களுக்கு எதிராகவா? அல்லது ஐ.நா சபைக்கு எதிராகவா?

ஹமாஸ் இப்போது நிகழ்த்தியது மிகப்பெரிய தாக்குதல் என்பதால் உலகத்துக்கே தெரிந்தது. ஆனால், கடந்த 15 ஆண்டுகளாக இஸ்ரேல் ராணுவத்துக்கும் பாலஸ்தீன மக்கள் மற்றும் குழுக்களுக்கும் இடையே நடந்த மோதல்களில் பாலஸ்தீனத் தரப்பில் ஏற்பட்ட உயிரிழப்புகள் 6,407. இஸ்ரேல் தரப்பில் உயிரிழப்புகள் 308. ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு எனில், இஸ்ரேல் அரசுக்கும் ராணுவத்துக்கும் என்ன பெயர் வைப்பது?

இன்னொரு பக்கம், அகதிகளுடன் ஆயுதம் தாங்கிய போராளிகளும் கலந்து வந்துவிடுவதும் பிரச்னையாக உருவெடுக்கிறது. லெபனான் நாட்டில் இருக்கும் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் அடிக்கடி இஸ்ரேல் ராணுவத்தைத் தாக்குவதால்,




இஸ்ரேலின் கடுமையான தாக்குதலை லெபனான் எதிர்கொள்ள நேரிடுகிறது. இதேபோல ஹமாஸ் அமைப்பினர் அகதிகளுடன் கலந்து வந்து எகிப்து அல்லது ஜோர்டானில் தங்கியிருந்து இஸ்ரேல் மீது தாக்குதல் தொடுத்தால், அந்த நாடுகளின் அமைதி குலையும். அதையும் எகிப்தோ, ஜோர்டானோ விரும்பவில்லை.ஏற்கெனவே, 'போதும்ஞ் போதும்ஞ்' என்று சொல்கிற அளவுக்கு அகதிகள் இந்தப் பிரதேசத்தின் எல்லா நாடுகளிலும் நிறைந்திருக்கிறார்கள். சொந்த நாட்டில் அகதிகளாக வாழ்வது ஒருவகை துயரம், சொந்த மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்டு வேற்று நாடுகளின் அகதி முகாம்களில் முடங்கி வாழ்வது இன்னொரு வகை துயரம். பாலஸ்தீனர்கள் அளவுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாக வாழும் சமூகம் வேறெதுவும் இருக்க முடியாது.

பாலஸ்தீன அகதிகளுக்கான நிவாரணப் பணிகளுக்கு அதிக நிதியுதவி செய்வது ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும்தான். அரபு நாடுகளும் கணிசமான உதவிகளை வழங்குகின்றன. குறிப்பாக, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், சவுதி அரேபியா, ஸ்வீடன், இங்கிலாந்து, நார்வே, ஜப்பான், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா, டென்மார்க், குவைத், பிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி ஆகிய நாடுகள் கணிசமாக நிதியுதவி வழங்குகின்றன.




இவற்றில் அமெரிக்கா, நெதர்லாந்து, பெல்ஜியம், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் அவ்வப்போது நிதியுதவியை நிறுத்தி வைக்கும். ஐ.நா முறையிட்ட பிறகு திரும்பக் கொடுக்கும். திடீரென நிதியுதவி தொகையைக் குறைக்கும். இதெல்லாம் நிவாரணப் பணிகளைச் சீராகச் செய்யவிடாமல் ஐ.நா—வை தடுமாற வைக்கும்.கடந்த 1993 முதல் நாடுகள் பலவும் ஐரோப்பிய யூனியன் மூலமாகவும், தனித்தனியாகவும் கொடுத்த பங்களிப்புதான் பாலஸ்தீனர்களுக்கான உதவிகளில் அதிகம். அரபு நாடுகள் பலவும் பாலஸ்தீன சுயாட்சிப் பிரதேச அரசுக்கும் நிதியுதவி செய்ய வேண்டியிருப்பதால், அகதிகளுக்குக் குறைவாகவே கொடுக்கின்றன.


கடந்த 2021—ம் ஆண்டு பாலஸ்தீன அகதிகளுக்காக என்று ஐ.நா செலவிட்ட மொத்த தொகை 9,811 கோடி ரூபாய். இதில் அமெரிக்காவின் பங்கு மட்டுமே 2,810 கோடி ரூபாய். 2022—ம் ஆண்டில் ஐ.நா நிதியுதவியாகப் பெற்ற மொத்த தொகை 9,728 கோடி ரூபாய். இதில் அமெரிக்கா கொடுத்தது 2,860 கோடி ரூபாய்.

ஒருபுறம் இஸ்ரேலின் தாக்குதலை ஆதரித்து பாலஸ்தீன அகதிகளின் துயரை அதிகமாக்கிவிட்டு, அந்த அகதிகளுக்கு நிவாரணமும் வழங்கும் இந்த நாடுகளின் உளவியல்தான் புரிந்துகொள்ள முடியாத புதிர். அந்தப் புதிரே, காஸா துண்டு

நிலத்தில் வாழும் 23 லட்சம் பாலஸ்தீனர்களுக்கு அந்த நிலத்தை திறந்தவெளி சிறைச்சாலை ஆக்கியுள்ளது.

ஹமாஸ் என்ற அமைப்பை ஒடுக்குவதற்காக கடந்த 17 ஆண்டுகளாக காஸாவின் 23 லட்சம் மக்களை நிரந்தரமாக முற்றுகையில் சிறைப்படுத்தி வைத்திருக்கிறது இஸ்ரேல். ஐ.நா சபையின் ளிசிபிகி வெளியிட்ட அறிக்கை ஒன்று, "இந்தத் தடை காரணமாக காஸா மக்கள் உணவு, தண்ணீர், கல்வி, மருத்துவம் என்று எல்லா தேவைகளுக்கும் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்திருக்கிறார்கள். அங்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது. காஸா மக்களுக்கு ஒட்டுமொத்தமாக தண்டனை கொடுத்திருக்கிறது இஸ்ரேல்" என்று வருந்துகிறது.

ஐ.நா சிறப்புத் தூதர் ஃபிராங்காஸா அல்பனீஸ்




என்பவர்தான் காஸாவை 'திறந்தவெளி சிறைச்சாலை' என்று முதலில் குறிப்பிட்டார். பிரிட்டன் முன்னாள் பிரதமர் டேவிட் கேமரூன் வரை பலரும் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இஸ்ரேல் இந்தக் குற்றச்சாட்டை தொடர்ச்சியாக மறுத்துவருகிறது.முற்றுகை, தடைகள், நெருக்கடி என்று ஆண்டுக்கணக்கில் அடக்குமுறைக்கு ஆளாவதால், இஸ்ரேல் மீதான பாலஸ்தீனர்களின் கோபம் பெருமளவு அதிகரித்துள்ளதே தவிர, இணக்கமான அமைதிக்கு இது உதவவில்லை.

காஸா நகர மருத்துவமனையின் மீது இஸ்ரேல் படை விமானங்கள் குண்டுகளை வீசியதில் ஏறத்தாழ 500 பேர் உயிரிழந்திருக்கின்றனர். காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களில் காயமுற்றவர்களும் மற்றவர்களும் அடைக்கலமாகத் திரண்டிருக்கும் ஒரு மருத்துவமனையின் மீது கண்மூடித்தனமாக இஸ்ரேல் விமானங்கள் குண்டுகளை வீசியிருக்கின்றன.அல் அஹ்லி மருத்துவமனை வளாகத்தில் தீப்பற்றியெரிகிற, கண்ணாடிகள் நொறுங்கிக் கிடக்கிற, மனித உடல்களின் பாகங்கள் சிதறிக் கிடக்கிற புகைப்படங்கள் வெளியாகியிருக்கின்றன. ஆனால், இதுபற்றிய தகவல்கள் தெரியவில்லை என்றும் இஸ்ரேலியே விமானத் தாக்குதல்தானா? என்றும் சொல்லத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார் இஸ்ரேலின் ராணுவ செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி.

காஸாவில் மின்சாரம் இல்லை, தண்ணீர் இல்லை, உணவு இல்லை. வீடுவாசல்களை விட்டு வெளியேறி அகதிகளாக மக்கள் தங்கியுள்ள முகாம்களும் குண்டுவீசித் தாக்கப்படுகின்றன. ஆனால்,




ஹமாஸ் மறைவிடங்களையும் கட்டமைப்புகளையும்தான் தாக்குகிறோம் என்று இஸ்ரேலிய ராணுவம் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. உலகமும் பார்த்துக் கொண்டிருக்கிறது.

ஹமாஸ் படையினர் தங்கியிருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்தைக் கூறிக்கொண்டு, காஸாவின் பொதுமக்கள் மீது இவ்வளவு பெரிய தாக்குதலை இஸ்ரேல் நடத்திக் கொண்டிருப்பதற்கு அரசியல்ரீதியாகவும் உளவியல்ரீதியாகவும் முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் படையினர் நடத்திய தாக்குதலை இன்னமும் இஸ்ரேலிய அரசு அமைப்புகளாலும் ராணுவ, உளவு அமைப்புகளாலும் நினைத்தும் பார்க்க முடியவில்லை. கெட்ட கனவாக இதை மறக்கவும் முடியாது.

உலகின் மிகத் திறமையானவை என்பதாக, இஸ்ரேலைப் பற்றியும் அதன் ராணுவ, உளவு



அமைப்புகளைப் பற்றியும் இவ்வளவு காலம் உலகம் கொண்டிருந்த அனைத்து நம்பிக்கைகளையும் அண்மையில் ஹமாஸ் நடத்திய திடீர் தாக்குதலும் பிணைக் கைதிகளைப் பிடித்துச் சென்றதும் உடைத்தெறிந்திருக்கிறது. இஸ்ரேலில் முற்றிலும் செல்வாக்கு இழந்துபோய், எதிர்க்கட்சிகளின் கடும் விமர்சனங்களுக்கும் மக்களின் எதிர்ப்புக்கும் உள்ளாகி, எப்போது வெளியேறப் போகிறார் என்ற நிலையில்தான் இருந்தார் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு. தேச பக்தியின் பெயரால் காஸா மக்கள் மீதான இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து நடத்தி, பெரும் வெற்றி பெற்றதாகக் காட்டிக் கொள்வதன் மூலம் இஸ்ரேல் வென்றதாகவும் கூடவே தானும் வென்றதாகத் தம்மை முன்னிறுத்திக் கொள்ளும் அரிய வாய்ப்பை நெதன்யாகுவுக்கு ஹமாஸ் அமைப்பினர் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். உத்தியிலும் உளவுத் திறனிலும், ராணுவரீதியாகவும் என எல்லாவகையிலும் இஸ்ரேல் ராணுவம் தோற்றுப் போய்விட்டிருக்கிறது என்ற ஓய்வுபெற்ற இந்திய வெளியுறவுத் துறை அலுவலர் தல்மிஸ் அகமதுவின் அவதானிப்பு குறிப்பிடத் தக்கது.

உருப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் இல்லாமல் இஸ்ரேலின் எல்லைப் பகுதியில் காஸாவுக்கு மிக அருகில் இசை விழா நடத்தப்பட்டிருக்கிறது. மேற்குக் கரையில் பாலஸ்தீனர்கள் தாக்கப்படுவதும் இந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் புனிதமான அல் அக்ஸா மசூதி அவமரியாதை செய்யப்படுவதும் தொடர்ச்சியாக நடந்துகொண்டிருக்கும் நிலையில், ஹமாஸ் அமைப்பினர் திருப்பித் தாக்குவார்கள் என்று இஸ்ரேல் எதிர்பார்த்திருக்க வேண்டாமா?




தங்கள் பகுதிக்குள் நுழைந்து பெரும் தாக்குதலை நடத்திவிட்டுச் சென்றுவிட்ட ஹமாஸினரை விட்டுவிட்டு, சண்டையைத் தொடங்குவதற்கு முன்னரே முற்றிலுமாகத் தோற்றுப் போய்விட்ட இஸ்ரேல், கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதைப் போல, தற்போது காஸாவிலுள்ள ஒன்றுமறியா மக்கள் மீது குண்டுகளை வீசிக்கொண்டிருக்கிறது. தாக்குதல் நடத்திய ஹமாஸ் அமைப்பினரை ஒழிப்பதாகச் சொல்லிக் கொண்டு வான்வழியும் தரைவழியும் குண்டுகளை வீசி மக்களைக் கொன்றுகொண்டிருக்கிறது இஸ்ரேல்.இத்தகைய தாக்குதல்களால் மட்டுமே ஹமாஸ் படையினரை ஒழித்துவிட முடியுமா? முடியாது என்று இஸ்ரேலுக்கும் தெரியும், நெதன்யாகுவுக்கும் தெரியும். ஆனால், இந்தத் தாக்குதலை நடத்தி, ஆபத்து ஆபத்து என சொந்த நாட்டு மக்களையும் பதற்றத்தில் வைத்திருக்க வேண்டிய கட்டாயம் நேரிட்டிருக்கிறது. மக்கள் மத்தியில் இழந்துவிட்ட நம்பிக்கையைப் பெறக் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் கள் இஸ்ரேலும் நெதன்யாகுவும்

யார் யாரோ பயன்பெறுவதற்காக,ஹமாஸ் ஒழிப்பு என்ற பெயரில், ஒட்டுமொத்தமாக ஒன்றுமறியா மக்களை அழித்தொழித்து, அகதி முகாம்களுக்குத் துரத்தி, காஸாவையும் பாழடைந்த பிரதேசமாக மாற்றும் நடவடிக்கையைத்தான் வெவ்வேறு பெயர்களில் செய்துகொண்டிருக்கிறது இஸ்ரேல். இவ்வளவு மரண ஓலம் கேட்டுக்கொண்டிருக்கும் நிலையில், மருத்துவமனையின் மீதே குண்டுகள் வீசப்பட்டு நூற்றுக்கணக்கில் மக்கள் கொல்லப்படும் நிலையில், ஏனோ உலகத் தலைவர்கள் எல்லாரும் பேசாமல் இருக்கின்றனர்.

கேட்பதற்கு யாருமில்லாத நிலையில் ஐக்கிய நாடுகளின் அவையின் குரல் ஈனஸ்வரத்தில் ஒலித்துக் கொண்டிருக்க, இவ்வளவு பெரிய மனிதப் படுகொலை நடந்துகொண்டிருக்கும்போது ஒட்டுமொத்த உலகமும் கள்ள மௌனம் சாதித்துக் கொண்டிருக்கிறது! அல்லற்பட்டு ஆற்றாது அழும் மக்களின் கண்ணீர் உலக வரைபடத்தில் வெள்ளமாகப் பெருக்கெடுத்தோடிக் கொண்டிருக்கிறது!

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




# சொல்றாங்க... சொல்றாங்க...



இஸ்ரேல் உட்பட ஒவ்வொரு நாடும் தன்னை தற்காத்துக் கொள்ள உரிமை உண்டு, ஆனால் அந்த உரிமை போர் அல்ல! பேச்சுவார்த்தைதான்!"

**ஜோர்டான் ராணி ரானியா அல் அப்துல்லா**

*(ஜோர்டான் ராணி... ஜோரா சொன்னீங்க ராணி!..)*



"பிரதமர் மோடி முகமது பின் துக்ளக்கை போல ஆட்சி நடத்துகிறார். பணமதிப்பிழப்பு, ஜிஎஸ்டி மூலம் மக்களைக் குழப்பியவர், தற்போது இந்தியாவின் பெயரை மாற்றுவதாக குழப்புகிறார்!"

**மம்தா**

*(மக்கள் பா(ப)டுற இந்தப் பாட்டைத்தான் நீங்களும் பாடுறீங்க!... 'என்னமோ நடக்குது! மர்மமாய் இருக்குது! ஒன்னுமே புரியலே உலகத்திலே!')*



"மகளிர் இடஒதுக்கீடு, சாதிவாரி கணக்கெடுப்பு, கிழக்கு ராஜஸ்தான் கால்வாய் திட்டம் அனைத்தும் வெற்று வாக்குறுதிகள்தான்."

**பிரியங்கா**

*(ஒன்பது ஆண்டுகளை ஓட்டிட்டாங்க... இதுக்கு மேலே ஓட்டை வாங்க இப்படி எதாவது ஓட்டித்தானே ஆகணும்!)*



"தமிழ்நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தி, அரசியல் ஆதாயம் தேட நினைக்கும் சக்திகள் ஆளுநரைப் பயன்படுத்துகின்றனர். இத்தகைய முயற்சிகள் முறியடிக்கப்படும்!"

**வைகோ**

*(இவர் களத்தில்தான் இருக்கிறதை யாரும் மறந்துடாதீங்க! இருக்கிறதைக் காட்டறதுக்காகவாவது அப்பப்போ கூவிடணும்!)*

கட்டுரை

# நன்றி

## இந்தியாவை புறக்கணித்து சீனா பக்கம் சாய்கிறதா பூடான்?

பூடான் வெளியுறவு அமைச்சரின் சீனப்பயணத்தை தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையேயும் பல வருடங்களாக இருந்துவரும் எல்லைப் பிரச்னை முடிவுக்கு வரலாம் என ஊகங்கள் எழுந்து வருகின்றன.






மேலும், சீனவுக்கும் பூடானிற்கும் இடையே விரைவில் தூதரக உறவுகள் ஏற்படுவதற்கான அறிகுறிகளும் தெரிகின்றன.

இந்த இரண்டு விஷயங்களும் இந்தியாவிற்கு மேலும் தலைவலியைதான் தரப்போகின்றன. சீனாவிற்கும் பூடானிற்கும் இடையேயான எல்லைப் பிரச்சனையில் சமரசம் ஏதும் ஏற்பட்டால் அது நேரடியாக டோக்லாம் எல்லையில் பாதிப்பை ஏற்படுத்தும்.

2017ம் ஆண்டு இந்திய மற்றும் சீன ராணுவங்களுக்கு இடையே 73 நாட்களுக்கு மோதல் நிலவியது. பூடானால் தங்களது பகுதி என சொல்லப்படும் இடத்தில் சீனா சாலை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதால் இந்த மோதல் ஏற்பட்டது.

தற்போது பூடான் உடனான எல்லை பிரச்சனையில் சீனா தீர்வை எட்டிவிட்டால் இந்தியாவின் அண்டை நாடுகள் அனைத்துடனும் சீனா நட்புறவில் உள்ளது என்ற சூழல்



# கடன்

ராகேவேந்திர ராவ்

உருவாகிவிடும். சமீபத்தில், சீனா தனது அண்டை நாடுகள் தொடர்பாக வெளியுறவு கொள்கை குறிப்பு ஒன்றை வெளியிட்டிருந்தது.

அதில், 12 அண்டை நாடுகளோடு தனக்கிருந்த தரை வழி எல்லைப் பிரச்சனையை பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்துக் கொண்டதாக சீனா தெரிவித்தது. மேலும், 9 நாடுகளோடு நட்புறவில் இருப்பதற்கான ஒப்பந்தமும் கையெழுத்திட்டுள்ளதாக சீனா தெரிவித்தது. அந்த நாடுகளின் பட்டியலில் இந்தியாவின் பெயர் இல்லை.




சீனா — பூடான் இடையே அதிகமாகும் நெருக்கம்

கிழக்கு லடாக்கில் உள்ள இந்தியா—சீனாவின் எல்லைப்பகுதியில் இரு நாடுகளுக்கும் நடந்துவரும் மோதல் இன்னும் தொடர்கிறது. இந்த நிலையில், சீனாவிற்கும் பூடானிற்கும் இடையே தூதரக உறவுகள் ஏற்பட்டால் கண்டிப்பாக அதை இந்தியா தீவிரமாக கண்காணிக்கும்.

தனது நலனுக்காக இராணுவ மற்றும் பொருளாதார பலத்தை பயன்படுத்தி




சிறிய நாடுகளை கட்டுப்படுத்துவதாக சீனா மீது அடிக்கடி குற்றச்சாட்டுகள் எழுகின்றன. பூடானிற்கும் சீனாவிற்கும் இடையே 25வது கட்ட எல்லைப் பேச்சுவார்த்தை பெய்ஜிங்கில் அக்டோபர் 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் நடந்தது.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு சீனா தரப்பில் அதன் வெளியுறவு இணையமைச்சர் சுன் வீடாங்க் மற்றும் பூடானின் வெளியுறவு மற்றும் வர்த்தக அமைச்சர் தண்டி டோர்ஜி தலைமை தாங்கினர். இந்த பேச்சுவார்த்தையில் இரு நாட்டு பிரதிநிதிகளும் பூடான் — சீனா எல்லையை தீர்மானிப்பது குறித்த கூட்டுறவு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

அக்டோபர் 23ம் தேதி தண்டி டோர்ஜியை சந்தித்த பின் சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி பேசுகையில் சீனாவும் பூடானும் மலைகளாலும், நதிகளாலும் ஆழமான கலாச்சார நட்புறவால் பிணைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். மேலும், இரு நாடுகளுக்கும் இடையேயான இராஜ தந்திர உறவுகள் பூடானின் நீண்டகால திட்டங்களுக்கு உதவியாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

சீனாவின் உதவிக்கும் வலிமையான ஆதரவிற்கும் நன்றி தெரிவித்த பூடானின் வெளியுறவுத்துறை அமைச்சர் தண்டி டோர்ஜி, “சீனா—பூடான் இடையே பாரம்பரியமான நட்பு இருகிறது. சீனாவின் ஒரு பகுதிதான் தைவான் என்பதை வலியுறுத்தும் ‘ஒரே சீனா’ கொள்கையோடு நாங்கள் முற்றிலும் உடன்படுகிறோம். சீனாவோடு விரைவாக இராஜ தந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கு தயாராக இருக்கிறோம்” எனத் தெரிவித்தார்.

சீனா — பூடான் எல்லைப் பிரச்னையின் பின்னணி என்ன?

சீனா—பூடான் எல்லையானது 400 கிலோமீட்டருக்கும் அதிகமானது. இரு நாடுகளும் தங்களது எல்லைப் பிரச்சனையில் தீர்வு காண 1984ல் இருந்து தற்போது வரை 25 கட்டங்களாக பேச்சுவார்த்தை நடந்துள்ளது.

சீனாவிற்கும் பூடானுக்கும் இடையே பெரும் சர்ச்சைக்குரியதாக இருக்கும் இரண்டு பகுதிகளில் ஒன்று இந்தியா—சீனா—பூடான் முச்சந்திக்கு அருகில் உள்ள 269 சதுர கிலோமீட்டரிலுள்ள பகுதி, மற்றொன்று பூடானின் வடக்கே 495 சதுர கிலோமீட்டரில் உள்ள ஜகர்லுங் மற்றும் பாசம்லுங் பள்ளத்தாக்குகள். 495 சதுர கிமீ பகுதியை பூடானிடம் விட்டுக்கொடுத்துவிட்டு 269 சதுர கிமீ பகுதியை எடுத்துக்கொள்ள சீனா விரும்புகிறது.




பூடானின் மேற்கு எல்லையில் சீனா சொந்தம் கொண்டாடும் இரண்டு பகுதிகளில் ஒன்று சும்பி பள்ளத்தாக்கு. இதற்கு அருகில்தான் உள்ள டோக்லாம் பகுதியில்தான் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் மோதல் ஏற்பட்டது. இந்த சும்பி பள்ளத்தாக்கை தான் வைத்துக்கொண்டு பூடானிற்கு அதைவிட பெரிய ஒரு பகுதியை வழங்க சீனா தயாராக உள்ளது.

இதில் இந்தியாவிற்கு என்ன பிரச்சனையென்றால், பூடானிடம் இருந்து சீனா கேட்கும் அந்தப்பகுதி இந்தியாவின் சிலிகுரி பாதை அல்லது ‘சிக்கன்ஸ் நெக்’ எனப்படும் பகுதிக்கு அருகே உள்ளது. இந்த சிலிகுரி பாதை வடகிழக்கு மாநிலங்களுக்கு செல்வதற்கு முக்கியமான வழித்தடமாக உள்ளது.

சிலிகுரி பாதைக்கு சீனா வந்துவிட்டால் அது வட கிழக்கு மாநிலங்களுக்கான தொடர்பிற்கு பெரும் ஆபத்தாகவும் இந்தியா வியூகம் அமைப்பதற்கு பெரும் சவாலாகவும் அமையும்.

சில வாரங்களுக்கு முன்பு பேசிய பூடான் பிரதமர் லோடேய் ஷெரிங், “பூடான் எடுக்கக்கூடிய முடிவால் சீனாவும் இந்தியாவும் மகிழ்ச்சியடைவார்கள் என்பதை உறுதி செய்வோம். சீனா உடனான பிரச்னையை முடித்துவிட்டு இந்தியாவுடன் புதிய பிரச்சனையை ஆரம்பிக்க




VARSHA™
GOOD WISHES FOR PROSPERITY
AND HAPPINESS THIS DIWALI
HAPPY DIWALI
தீபாவளி வாழ்த்துக்கள்
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு



பூடான் விரும்பவில்லை” எனத் தெரிவித்தார்.

சீனா — பூடான் உறவில் இந்தியாவிற்கு என்ன பிரச்னை?

புது தில்லியில் உள்ள அப்சர்வர் ரிசர்ச் பவுண்டேஷனின் ஆய்வுகள் மற்றும் வெளியுறவுக் கொள்கைத் துறையின் துணைத் தலைவராக உள்ள பேராசிரியர் ஹர்ஷ் வி பந்த் கூறுகையில், “டோக்லாம் எல்லையில் ஏற்பட்ட நெருக்கடியை நாம் பார்த்தோம். அந்தப் பிரச்னைக்கான தீர்வு முத்தரப்பு வழியில் செய்யப்பட வேண்டும் என்பதே பூடானின் நிலைப்பாடு. பூடானிற்கு தனது நலன்களைப் பாதுகாக்க எந்தவொரு நாட்டுடனும் பேச்சுவார்த்தை நடத்த முழு உரிமை உள்ளது என்றும், அதை பகிரங்கமாக எதிர்க்க இந்தியா விரும்பாது.

சீனாவிற்கும் பூடானிற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் இந்தியாவிற்கு சொந்தமான பகுதிகளின் ஏதேனும் பாதிப்பை ஏற்படுத்துமா என்பதுதான் இந்தியாவின் கவலையாக இருக்கும். பூடானின் பார்வையில் இருந்து பார்த்தால், இந்தியா—சீனா சர்ச்சை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை பூடான் பார்த்து வருகிறது. இந்தியா—சீனா இடையேயான எல்லைப்பிரச்சனையில் மேலும் சிக்கிக்கொள்ள பூடான் விரும்பவில்லை என்றும் இந்தியா—சீனா இடையேயான எல்லைப்பிரச்னை பெரிதாவதற்கு முன்பே தங்களுக்கு சீனா உடன் இருக்கும் எல்லைப் பிரச்னையை முடித்துக்கொள்ள பூடான் விரும்புவதாகவும் கூறுகிறார்.




முச்சந்தி பிரச்னைக்கு முக்கோண தீர்வு

இந்திய ராணுவத்தின் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் எஸ்பி அஸ்தானா, பாதுகாப்பு மற்றும் வியூக விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்றவர். அவர் கூறுகையில், “பூடானின் வெளியுறவு அமைச்சரின் சீன பயணத்தை தொடர்ந்து சீனா—பூடான் இடையேயான எல்லைப் பிரச்னைக்கு தீர்வு கிடைத்து விடும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஏனென்றால், இந்தியாவும் சீனாவும் கூட அவ்வப்போது தங்களது எல்லைப் பிரச்னைகளை தீர்க்க பேச்சுவார்த்தை நடத்துவார்கள் ஆனால் அதன் பின்பு பிரச்சனை தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்.

எனவே சீனா—பூடான் விவகாரத்தில் பிரச்னை தீர்ந்துவிட்டதாக நாம் கூற முடியாது! சீனாவும் பூடானும் வெளியிட்ட கூட்டறிக்கையில் எல்லைப்பகுதியில் பிரச்னைக்குரிய நிலத்தை சீனாவிற்கு வழங்க பூடான் ஒப்புக்கொண்டதாக குறிப்பிடப்படவில்லை. சீனா அந்த கூட்டறிக்கையை தங்களுக்கு ஏற்ற மாதிரி திரித்துக்கொண்டது. 25 கட்டங்களாக நடந்த பேச்சுவார்த்தைக்கு பிறகு தற்போதுதான் சீனாவும் பூடானும் எல்லையை தீர்மானிப்பதை நெருங்கியுள்ளார்கள்.

கடந்த காலத்தில் இந்த முச்சந்தி விவகாரத்தை



மூன்று நாடுகளும் சேர்ந்துதான் தீர்க்க வேண்டும் என்பதுதான் பூடானின் நிலைப்பாடு என்றும் இப்போதும் இந்தியாவை பகைத்துக்கொண்டு பூடான் எந்த முடிவையும் எடுக்காது என்றும் தெரிவித்தார்.

பூடானோடு இராஜ தந்திர உறவு வைத்துக்கொள்ள சீனா விரும்புவது ஏன்?

தைவான் போல் அல்லாமல் சீனாவின் எந்த விதமான இருப்பும் இல்லாத நாடு பூடான் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். தவிர, பூடானுக்கும் இந்தியாவுடன் சிறப்பான உறவு உள்ளது. எனவே பூடானுடன் சீனா தூதரக உறவை ஏற்படுத்திக் கொண்டால், அது சீனாவிற்கான ஒரு விளம்பரமாக இருக்கும்.

பேராசிரியர் பந்த் கூறுகையில், ஐநா பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்புநாடுகள் எதனுடனும் பூடானிற்கு தூதரக உறவுகள் இல்லை. இந்த நிலையில் சீனாவோடு பூடான் தூதரக உறவு ஏற்படுத்திக்கொண்டால் அது நிச்சயம் இந்தியாவை பாதிக்கும். ஆனால், அந்த அளவிற்கு பூடான் செல்லாது. பூடான் சீனாவோடு மட்டும் உறவு வைத்துக்கொண்டால் நிச்சயம் அதை அமெரிக்க ஏற்றுக்கொள்ளாது. பூடானோடு வெளியுறவு சிக்கல்களையும் அமெரிக்கா உருவாக்கும். பூடான் மீது சீனா அழுத்தம் கொடுக்கிறதா என்பதையும் பார்க்கவேண்டும். ஏனென்றால் தங்களோடு தூதரக உறவு வைத்துக்கொண்டால் அதற்கு பதிலாக எல்லைப் பிரச்சனையை தீர்த்துக்கொள்ளலாம் என சீனா பூடானிடம் கூறும். இந்த விஷயத்தில் இந்தியா கண்டிப்பாக பூடானோடு பேசும். பூடானும் சீனாவுடன் தாங்கள் என்ன செய்கிறோம், செய்யவில்லை என்பதை இந்தியாவிற்கு தெரிவிக்கும்” எனத் தெரிவித்தார்.




இந்த விவகாரம் குறித்து மேஜர் ஜெனரல் அஸ்தானா கூறுகையில்,

“பூடான் இறையாண்மையும் ஜனநாயகமும் கொண்ட நாடு. அவர்கள் எந்த நாட்டுடனும் இருதரப்பு உறவை ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் அப்படி செய்வார்களா என்பதுதான் கேள்வி! கோட்பாட்டு அளவில் பூடான் சீனாவோடு எப்படி எந்த இருநாட்டு உறவும் வைத்துக் கொள்ளாமல் இருக்க முடியும். எப்போது மற்றும் எந்த விதத்தில் அந்த உறவை வைத்துக் கொள்ள போகிறோம் என்பதுதான் கேள்வி” என தெரிவித்தார்.

பூடானில் மன்னராட்சி இருந்தபோது ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பினர்களில் ஏதேனும் ஒருவருடன் பூடான் இருதரப்பு உறவுகளை ஏற்படுத்திக் கொண்டால், மீதமுள்ள நான்கு நாடுகளுடனும் இருதரப்பு உறவுகளை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பூடான் இருந்ததாக கூறப்படுகிறது. ஆனால் பூடானில் ஜனநாயகம் வந்த பிறகு, பூடானின் அந்த நிலைப்பாட்டில் மாற்றம் வந்திருக்கலாம்.

கட்டுரை




# தமிழே

## மனித உயிர்கள் மலிவுப் பதிப்பல்ல

மானிடப்பிறவி மகத்தானது. “அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது’ என்றார் ஔவையார். “மனித்த பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே’ என்றார் அப்பரடிகள்.

“பிறவிகளிலேயே மனிதப்பிறவி அதிசயமானது’ என்றார் மார்க்ஸிம் கார்க்கி. புல்லாகி, பூடாகி, புழுவாகி, குரங்காகிப் பின் மானுடம் வந்துற்றது. அப்பொழுது சார்லஸ் டார்வினைப் பார்த்து, “மனிதப் பிறவிக்கு அடுத்த பரிமாணம் என்ன’ எனக் கேட்டனர். அதற்கு டார்வின், “பரிமாணக் கொள்கையின் இலட்சியமே மனிதப்பிறவியை அடைவதுதான்’ என்றார்.


அப்படிப்பட்ட மனித உயிர்கள் இன்று புழுக்களைப்போல் கொல்லப்படலாமா?

1930—இல் ஹிட்லரால் ஐந்து லட்சம் யூதர்கள் கொல்லப்பட்ட பிறகும், மானுடம் பாடம் கற்கவில்லையே! மும்பையிலிருக்கும் இஸ்ரேலிய தூதரகம் 1960—இல் ஒரு கையேட்டை வெளியிட்டது. அந்தக் கையேடு, உலகம் முழுதும் உயிருக்குப் பயந்து ஓடிய யூதர்களில், இந்தியாவிற்கு வந்த யூதர்கள் மட்டுந்தான் எந்தவிதப் பாதிப்புக்கும் ஆளாகாமல் நாடு திரும்பியதாகச் சொல்லுகிறது.

காஸாவில் நிகழ்த்தப்பட்ட படுகொலையில் 500 பேர் கொல்லப்பட்டார்கள். 700 குழந்தைகள் கூர்மையான ஆயுதங்களால் வெட்டிச் சிதைக்கப்பட்டிருக்கின்றனர். காஸல மருத்துவ மனையில் படுக்கைகளே இல்லை; நோயாளிகளுக்கு மருந்துகள் இல்லை; பச்சைக் குழந்தைகள் தாய்ப்பாலின்றித் தவிக்கின்றன. இதைப்போலவே அக்டோபர் 7—இல் இஸ்ரேல் மீது 250 கி.மீ. வேகத்தில் ஏவப்பட்ட ஏவுகணைகளால் 1,500 யூதர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பெணகளும் குழந்தைகளும் கொல்லப்பட்டிருக்கின்றனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்சாரம் கிடையாது. இரண்டு நாட்டின் எல்லைகளும் முற்றுகையிடப்பட்டிருக்கின்றன.

அக்டோபர் முதல் வாரம் யூதர்கள் “சுகோத் விழா’ என்ற விழாவை மகிழ்ச்சியோடும், அழுகையோடும் கொண்டாடுகின்றனர். அங்கிருக்கும் மலைப்பாதையில் தலை சாய்ந்துத்










பேராசிரியர்

## தி. இராசகோபாலன்

தங்களுடைய தேவன் எப்பொழுது வருவார் எனக் கண்ணீர் விட்டு அழுவார்களாம். அங்கிருக்கும் மலை மூன்று மதத்தவர்களும் போற்றி வணங்குகின்ற மலை. ஆனாலும் இருதரப்பினரும் ஏவுகணைகளை ஏவிப் போராடுகின்றபோது, அந்த மலை பாதிக்கப்படாதா? அங்கு தெய்வங்கள் வந்து தங்கியதாக, தங்குவதாக நம்பப்படும் மலையை இருதரப்பினரும் போற்றிப் பாதுகாக்க




வேண்டாமா? இத்தனைக் கொடுமைகளுக்கு இடையிலும் ஐ.நா. சபை, நிராயுதபாணியாக நிற்பது பரிதாபமல்லவா?

இருதரப்பினரும் அடைபட்டுக் கிடக்கும் இந்தச் சூழ்நிலை, சங்க காலத்திலும் இருந்திருக்கிறது. சோழர்கள் நலங்கிள்ளியும் — நெடுங்கிள்ளியும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். நலங்கிள்ளி உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான்; நெடுங்கிள்ளி ஆவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான். மண்ணாசையாலும், பதவியாசையாலும் இருவருக்கும் இடையில் போர் மூண்டது. நலங்கிள்ளி படைபலம் வாய்ந்த மன்னன்; நெடுங்கிள்ளி பலவீனமான மன்னன்.

நலங்கிள்ளி, நெடுங்கிள்ளியின் ஆவூர் மீது படையெடுத்தான். போருக்குப் பயந்து நெடுங்கிள்ளி ஆவூர்க் கோட்டையை மூடிவிட்டான். பல நாட்கள் ஆகியும் திறக்கவில்லை. அதனால், பசி மிகுந்த யானைகள் உணவு பெறாது, கட்டிய கம்பத்தைச் சாய்த்து, நிலத்தில் புரண்டுப் பிளிறின. வீடுகளில் குடிநீர் இல்லாமல் மக்கள்




தவித்தனர். மங்கையர் பூவில்லாமல் கூந்தலை முடிந்தனர் (புறநானூறு — 44).


இந்த நிலையைக் கேள்விப்பட்ட கோவூர்க்கிழார் எனும் புலவர் நெடுங்கிள்ளியை நோக்கி "நெடுங்கிள்ளியே! நீ அறவாழியாக இருந்தால் கோட்டைக் கதவைத் திற! வீரனாக இருந்தால் போருக்குப் புறப்படு! கோட்டைக் கதவை மூடி வைப்பது வெட்கப்பட வேண்டிய ஒன்றாகும்' எனக்கூறிவிட்டு, நலங்கிள்ளியிடம் செல்லுகிறார்.

"நலங்கிள்ளியே! நீ அணிந்திருப்பது சேரமன்னனுடைய பனைமாலை அன்று; பாண்டியனுடைய வேப்பமாலையும் அன்று; நீங்கள் இரண்டு பேரும் அணிந்திருப்பது ஆத்திமாலையே! உங்களில் ஒருவர் தோற்றாலும், தோற்பது சோழர் குடியே! இரண்டு பேரும் வெல்லுதல் நடக்காத ஒன்று! அதனால் போரைத் தவிருங்கள் (புறநானூறு — 45) என அறிவுறுத்தியவுடன், நலங்கிள்ளியும் போரைக் கைவிட்டான்; நெடுங்கிள்ளியும்

கோட்டையைத் திறந்தான். ஆவூர் மக்களுக்கு மகிழ்ச்சியான வாழ்வு கிட்டியது. அன்று ஆவூர் மக்களைக் கோவூர்க்கிழார் காப்பாற்றியதுபோல், இன்று இஸ்ரேல் மக்களையும் — காஸல மக்களையும் காப்பாற்றுவதற்கு யாரும் இல்லாமல் போனது ஏன்?

எனும் பெண்பாற் புலவர் பாடியிருக்கிறார்.

இளங்கோவடிகள் காலத்திலும் இந்த அறம் கடைப்பிடிக்கப் பட்டதைக் கண்ணகி வாக்குமூலமாகத் தருகிறார் காப்பிய ஆசிரியர். கண்ணகி மதுரையை எரிப்பதற்கு அங்கியங்கடவுள் ஏவல் கேட்டு நிற்கிறது. அப்பொழுது யார் யாரை




அன்றிருந்த போர் தருமங்கள் எதுவும் இன்று இல்லை. அன்று ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் போர் வந்தால், முன்கூட்டியே தூது அனுப்பித் தெரிவிப்பார்கள். திருவள்ளுவர் தூதுக்குரிய தகுதிகளைச் சொல்லுவதற்கு ஓர் அதிகாரத்தையே ஒதுக்கியிருக்கிறார். சேரமானுக்கும் — அதியமானுக்கும் போர் மூளுகின்ற தருவாயில், ஔவையாரே தூது போய் நடக்கவிருந்த போரை நிறுத்தியிருக்கிறார்.

பண்டைக் காலத்தில் எந்தெந்த உயிர்கள் போர்க்காலங்களில் காக்கப்பட வேண்டும் என்ற நியாயம் இருந்தது. சங்க காலத்தில், “பசுமாடுகள், அந்தணர்கள், நோயாளிகள், இறந்தவர்களுக்கு வருடந்தோறும் செய்ய வேண்டிய திவசங்களைச் செய்வதற்குக் கடமைப்பட்டவர்கள், பிள்ளைகளைப் பெறாதவர்கள் ஆகிய அனைவரும் பாதுகாப்பான இடத்திற்குச் சென்று சேருங்கள்’ என முரசறைந்து தெரிவிப்பார்கள் (புறநானூறு — 9) என நெட்டிமையார்





எல்லாம் எரிக்கக்கூடாது எனப் பட்டியல் தருகின்றாள் கண்ணகி.

‘பார்ப்பார் அறவோர் பசுப் பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க’ —என்று தெய்வத்திற்கே வேண்டுகோள் விடுகிறார். இவற்றைத் தவிர, எழுத்தில் வராத சில நெறிமுறைகளும் பின்பற்றப்பட்டிருக்கின்றன. போர்க்களத்தில் ஒரு வீரன் தன்னுடைய குடுமியை இழுத்து முடிகின்ற நேரத்தில், அம்பு போடக்கூடாது. புறமுதுகிட்டு ஓடுவோர் மீது அம்பு போடக்கூடாது. எந்த ஆயுதமும் இல்லாமல் நிராயுதபாணியாக நிற்கின்றவர்கள் மீதும் ஆயுதங்களை ஏவக்கூடாது. இராமாயணத்தில் இராவணன் நிராயுதபாணியாக நிற்கின்றபோது, அவன்மீது அம்பு போடாமல், “இன்று போய் நாளைக்கு வா’ எனச் சொல்லியனுப்புகிறான் இராமன்.

மகாபாரதத்தில் கண்ணன் துணை வேண்டி, தருமனும் துரியோதனனும் துவாரகைக்கு விரைகின்றனர். கண்ணன் அனந்தசயனத்தில் இருந்ததால், கர்வம் பிடித்த துரியோதனன் கண்ணனின் தலைமாட்டில் அமர்கிறான். தருமன் கண்ணனின் திருவடி பக்கத்தில் அமர்கிறான். அப்பொழுது முதலில் கண்விழித்துத் தருமனின்

முகத்தில் விழித்து, தருமனுக்குத் தன்னையே தருகிறான். துரியோதனன் கேட்டபொழுது, “நான் பாண்டவர்களுக்குக் குதிரை, தேரை ஓட்டுவேனேயன்றி, ஆயுதம் ஏந்தி போர் செய்ய மாட்டேன்’ என வாக்குக் கொடுக்கிறான். அந்த வாக்குறுதியைக் கடைசி வரையில் காப்பாற்றுகிறான்.

மேலும், போர்க்களத்தில் ஒரு வீரனின் இடுப்புக்குக் கீழே ஆயுதங்களை ஏவக்கூடாது





எனும் அறநெறியும் அக்காலத்தில் இருந்தது. அதனால்தான் தன்னுடைய உயிர், தொடையில் இருக்கும்படியாக வரம் வாங்குகின்றான், துரியோதனன். நம்முடைய இலக்கியத்தில் வேறோர் நயமான செய்தியும் உண்டு. போர்க்களத்தில் ஒரு வீரன் ஈட்டி ஏந்தி, எதிர்த்து வரும் யானையின் மேல் எறிய நினைக்கிறான். கடைசியில் அந்த யானை ஒரு கையோடு, துதிக்கையோடு வருகிறது. இரு கையோடு இருக்கும் தான், அதன் மீது ஈட்டி எய்யக்கூடாது எனத் தவிர்த்து விடுகிறான்.

மானிடப் பிறவியின் மகத்துவத்தை மற்று எவரைக் காட்டிலும் மிகச் சிறப்பாக எடுத்துரைத்தவர், கம்பர். மனிதனாக வந்த இராமனைப் பார்த்தவுடன் சுக்கிரீவன், “நான்முகன், சிவபெருமான் மற்றுமுள்ள தெய்வங்கள் அனைத்தையும் மானுடம் வென்றுவிட்டது’ என்பான். “ஆறுகொள் சடிலத்தாலும் அயலும் என்று இவர்களாதி, வேறுள குழுவை எல்லாம் மானுடம் வென்றது’ என்பது கம்பர் வாக்கு.

இன்றைக்கு உலகத்து மக்கள் அனைவரும் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு மண்ணுலகில் நிறைய வாய்ப்புகள் இருந்தாலும், பேராசையாலும், போர் வெறியாலும் மனிதப் பிறவிகள் மலிவுப்பதிப்புகளைப் போல் தெருவில் கிடக்கின்றன. “எத்தனைக் கோடி இன்பம் வைத்தாய் இறைவா! எங்கள் இறைவா’ எனப் பாரதி எவ்வளவு எதிர்பார்ப்புகளோடு பாடியிருக்கிறார்.

மண்ணுலகில் பொறுமை யோடும் சகிப்புத்தன்மையோடும் வாழத் தெரியாத மக்கள் வானுலகிலும் சந்திரமண்டலத்திலும் இடம் தேடுவது நியாயமில்லையே! மகா அலெக்சாண்டர் எப்போதும் நாடு பிடிப்பதிலேயே நாட்டம் கொண்டிருந்தபோது, அவனைத் திருத்துவதற்கு ஒரு வழி கண்டார்,




அவனுடைய குருநாதராகிய டையோஜினியஸ். போருக்குப் புறப்படும்போதெல்லாம் குருநாதரின் ஆசி பெற்றுச் செல்வது, அலெக்சாண்டரின் பழக்கம்.

அப்படியொரு முறை சென்றபோது, நான்கு மனித கபாலங்களை அடுக்கி வைத்து, “அலெக்ஸ்! இவற்றுள் உன் அப்பா பிலிப்பின் கபாலம் எதுவென்று சொல்லிவிட்டுப் போ’ என்றார். சோதனையின் பொருளைப் புரிந்து கொண்ட அலெக்சாண்டர் அன்றிலிருந்து போருக்குப் போவதையே நிறுத்திவிட்டான் தானும் வாழாது, பிறரையும் வாழவிடாமல் செய்கின்ற மனிதர்களைப் பார்த்து, “ஒருபொழுதும் வாழ்வது அறியார், கருதுப கோடியும் அல்ல பல’ என நெஞ்சில் நிற்கும்படியாகப் பாடியுள்ளார், திருவள்ளுவர்.

மனித உயிர்கள் மனிதனால் படைக்கப்பட்டவை அல்ல. இறைவன் கொடுத்த உயிரைப் பறிப்பது நியாயமன்று. இந்த உலகில் எடுத்தபின், திருப்பித் தர முடியாதது உயிர் ஒன்றே!

# இரண்டு மனம் வேண்டும்

அலுப்பான மாலை நேரப் பேருந்து
பயணத்தில்
திடீரென சுகந்தம் வீசியது
எனக்கு முன்பான இருக்கையில்
நீ நடமாடும் நந்தவனமாய்
மையம் கொண்டாய்...

ஆசுவாசப்படுத்திக்கொள்ள
நீ தண்ணீர் குடித்த அழகில்
எனக்கும் தாகம் எடுத்தது
உன் தயாள குணம்
காற்றைக் கண்டித்து கதவடைக்காமல்
ஓயாது முடிக்கற்றை
ஒதுக்கி கொண்டே இருக்கிறது!

சுடிதார் எங்கும் வியாபித்திருக்கும்
யோக நிலை புத்தர் சிலை உருவங்கள்
உன் அங்கங்களில் படுவதாலோ
என்னவோ
சில சலனங்களுக்கு உட்படுவதை
என்னால் உணர முடிகிறது!

ஆசையை விட்டொழித்த புத்தருக்கே
அப்படியென்றால்...
நானெல்லாம் எம்மாத்திரம்?
இப்போதும் உன்னைப் பார்க்கும்
நாளில் எல்லாம் —எனக்கு
சர்க்கரை அளவு கூடிப்போவதன் ரகசியம்
அறிய முடியாமல் மருத்துவ உலகம்
தலையை பிய்த்துக் கொண்டிருக்கிறது!

வழக்கம் போலவே
என்னை மூர்ச்சையாக்கிக் கிடத்திவிட்டு
புறப்பட்டு விட்டது
உன் சுடிதாரின் துப்பட்டா!
இனியுன் நினைவுகளின் துணைகொண்டு
என்னை நான் எழுப்பியாக வேண்டும்!

இரண்டு மனமிருந்தால்
உன் நினைவுகளோடு வாழவும்
மற்றொன்றைக் கொண்டு
உலகத்தோடு ஒன்றியும் இருக்கலாம்!
என்ன செய்வது
ஒன்றைக் கொண்டு?

புவனகிரி கல்யாண்


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
தீபாவளி
வாழ்த்துக்கள்
HAPPY
Diwali
FESTIVAL OF LIGHTS
VARSHA™

**சிறப்புச் சிறுகதை**

# பொன்னியின் காவலன்

## கொற்றவன்

சோழ நாட்டுக் காவிரியின் தென்கரையோரம் உள்ளடங்கி இருந்தது அந்தச் சோலைவனம்!

மாங்கனிகளும் பலாவும் இன்னும் பல தேன்கனிகளும் குலுங்கும் பெரும் மரங்களிடையே தேக்கும் சந்தனமும் செண்பகமும் பலவித நறுமண மலர்களும் பூத்துக் குலுங்கிய அச்சோலையின் நடுநாயகமாக விளங்கியது ஓர் எழில்மிகு வாவி!

மாலை மயங்கும் நேரத்தில், ஆளை மயக்கும் வண்ணம் கண்களுக்கு விருந்தாக இருந்த அவ்வாவியின் மத்தியில் ஆங்காங்கே இலைகளுக்கு நடுவே சிறிதும் பெரிதுமாயும், ஆம்பலும் அல்லியும் முகம் கவிழ்ந்தும், இதழ் விரிந்தும், சில சிவந்தும் கிடந்தன.

கதிரவன் மறையும் நேரம் என்பதனால் தாமரைகள் தலைக்கவிழத் தொடங்கியிருந்த அத்தடாகத்திலே ஆசை தீர நீந்திக் கொண்டிருந்தாள் ஓர் ஆரணங்கு!




பொன் மஞ்சள் நிறம் பட்டு அந்தப் பொன்மேனியாளின் முகம் செந்நிறமாய் மின்னியது.

ஒரு கடல் கன்னியைப் போல் நேர்த்தியுடன் தனது அழகிய உடலை வளைத்தும் வாளிப்பான கைகளால் துடுப்புபோல் தள்ளியும் நீருக்குள்ளேயும் வெளியேயும், நீந்தியும் புரண்டும் மூழ்கியும் களித்தாள்.

அன்றையப் பகற்பொழுது கடும் வெப்பத்தைக் கொட்டியதால், ஏற்பட்ட உடற்சூடு தணிய நீராடுவது அவளுக்குப் பேரின்பம் அளித்ததால் நேரம் போவதே தெரியாமல் நீந்திக் கொண்டிருந்தாள்.

மேகங்களற்று தெளிவாகத் தெரிந்த பொன்னந்தி வானத்தில் சிறகடித்த புள்ளினங்களில் ஒன்று, கீழே குனிந்து வாவியில் நீந்தியவளைக் கண்டு அவளிடமிருந்து பார்வையை விலக்காமலே பறந்து சென்றது.

அதைக் கண்டவளுக்குள், ‘பொல்லாதப் பறவை! அது ஆண் பறவையாகத்தான் இருக்கும்!’ என்ற நினைப்பு ஓடியதால், இதழ்களில் குறுநகை ஓடியது.

ஆனால் அடுத்த சில கணங்களில் அவளது புன்முறுவல் மறைந்து புருவங்கள் நெரிந்தன.

அவளுக்குள் திடீரென எழுந்தவொரு நினைப்பால் மூச்சின் வேகம் அதிகரித்ததன் விளைவால், அவளது மார்பு மேலும் கீழுமாக ஏறி இறங்க, அவளது நினைவு அன்று மதியம் நடந்தவொரு நிகழ்ச்சியில் மையம் கொண்டது.


காவிரிக் கரையோரம் கல்லணையின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிடும் கூட்டத்தில் ஒருத்தியாய், ஒரு குயவப் பெண் போன்ற தோற்றத்தில் அவள் நின்றிருந்தாள்.

"என்னம்மா, நிலைத்த விழி நிலைத்திருக்க, நிலை மறந்து நின்றுவிட்டாய்?" அவளருகே நின்றிருந்த நரைமுடிக் கிழவர், தன் கரகரத்த குரலில் தொடுத்த வினா அவள் செவிகளில் விழுந்ததாகவே படவில்லை!

கல்லணை கட்டுமானத்துக்காக வந்திறங்கிக் கிடக்கும் பிரம்மாண்டமான பாறைகளையும், ஆனைகளைக் கொண்டு அவற்றை நகர்த்தும் விதமும், களிமண் மற்றும் கலவைச் சாந்து கொண்டு உருட்டும் அழகும், பல்லாயிரக் கணக்கானோர் கடப்பாரையும் மண்வெட்டியும் கொண்டு வேலை செய்யும் உழைப்பும், மண்கூடை சுமந்து கொண்டு செல்லும் பெண்களின் அணிவகுப்பும் பார்க்கும்போது, உலகின் பெரும் அதிசயம் ஒன்று அங்கு உருவாகப் போவதற்கான கட்டியம் கூறியதை உணர்ந்தாள் அவள்.



"இந்தாம்மா! நான் கேட்பது உன் செவியில் விழவில்லையா?" மீண்டும் கேட்டார் பெரியவர்.




அதையும் அவள் தன் செவிகளில் விழுந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை! அவள் விழிகள் அந்தக் கட்டுமானப் பணிகளின் மீதே இருந்தாலும், அவள் உள்ளத்தில் ஏதேதோ காட்சிகள் ஓடுவதை நிலைத்த அவளது விழிகள் இயம்பின.

அவளையே கூர்ந்து நோக்கிய நரைமுடிக் கிழவர், தன் கையில் வைத்திருந்த தடியால் அவள் தோள்களில் மெதுவாகத் தட்டி, "தங்கம்!..." எனச் சற்றே குரல் உயர்த்திக் கூவினார்.

அந்தத் தீண்டலுக்குப் பிறகே சுயவுணர்வு பெற்றவளாய், "என்ன பெரியவரே?" எனத் திரும்பினாள்.

"இவ்வளவு நேரம் நான் கூறியதெல்லாம் உன் காதில் விழவில்லையா?"

“விழுந்தது விழுந்தது! ஆனால்... எங்கே அந்த அழகன்? அவன் ஏன் இன்னும் இங்கு வரவில்லை?” கண்களில் உக்கிரம் ஏறியவளாய் கேட்டாள்.


“அதுதானம்மா எனக்கும் புரியவில்லை!” எனத் தன் நரைதாடியை வருடிக் கொண்டு சிந்தித்தவர்,“இன்றைக்குப் பார்த்து ஏன் அந்தக் அட்டைப் பயல் வரவில்லை என்றுதான் புரியவில்லை!” எனக் குழம்பினார்.

“அழகன் என்றீர்கள்! இப்போது அட்டைப் பயல் என்கிறீர்கள்!”

“அட நீ வேறு ஏனம்மா வேடிக்கைக் காட்டுகிறாய்? அந்தக் கரிகாலனை விட்டு கணநேரமும் பிரியாமல் அட்டைபோல் ஒட்டிக் கொண்டிருப்பவன் எனச் சொல்ல வந்தேன். அவன் இப்போது எங்கு போனான் எனத் தெரியவில்லை!”

“கரிகாலன் இங்கிருக்கையில்....” என இழுத்தவள், அடுத்த வார்த்தையைத் தொடங்குமுன் பதறினார் பெரியவர்.

“எங்கே? எங்கே?” எனத் தன்னைச் சுற்றுமுற்றும் பார்த்தபடி ஒளிய இடம் தேடினார்.



“ஏனய்யா பதறுகிறீர்? நீர்தானே அக்கரையில் கரிகாலன் இருக்கிறான் என்று கூறினீர்! அதோ அங்கே பரிவாரங்கள்கூட முகாமிட்டிருக்கிறதே...” என காவிரியின் மறுகரையைக் கைகாட்டினாள்.

“ஆமாம்! அது... அங்கே!...”

“அப்படியானால் அவனும் அங்குதானே இருக்க வேண்டும்!”

“இருக்க வேண்டும்! ஆனால் இல்லையே! ஒருவேளை ஏதேனும் காரியமாய் அவனைக் கரிகாலன் எங்கேனும் அனுப்பியிருப்பானோ?”

“எனக்கென்னவோ அவனால் நாம் காரியம் சாதிக்க முடியுமா என்ற ஐயம் தோன்றுகிறது! நீங்கள் வரச் சொல்லியே வராதவன், நம் திட்டத்துக்குச் சரிப்பட்டு வருவான் என என்ன நிச்சயம்?”




“என்னம்மா இப்படிக் கூறிவிட்டாய்? அவன் ஓயாமல் உன் முதலாளியம்மா பெயரைத்தான் மந்திரம்போல் சொல்லிக் கொண்டிருக்கிறான்!”

“என்ன உளறுகிறீர்? அவன் எப்போது கனகதாராவைப் பார்த்தான்?”

“இரண்டு முறை கனகதாராவின் நாட்டியத்தைப் பார்ப்பதற்காகவே இங்கிருந்து கிளம்பி, புகார் நகருக்குச் சென்றும்கூட, நாட்டியம் காணமுடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தவன் அவன்!”

“ஏன்? நீங்கள் என்னைப் பற்றிக் கூறவில்லையா?”

“என்னம்மா நீ?” என்ற பெரியவர் சுற்றுமுற்றும் பார்த்தபின், “நான் யார் என்பதை மறந்தும் யாரிடமும் கூறக் கூடாதென்று என் வாயைத்தான் கட்டிப் போட்டுவிட்டாயே!”

“ஐயா பெரியவரே! நீரென்ன இவ்வளவு விவரம் புரியாதவராய் இருக்கிறீர்!”



"என்ன நானா?"

"பிறகென்ன நானா?"

"எனக்கென்ன விவரம் போதவில்லை என்கிறாய்?"

"அவன்தான் கனகதாராவின்மீது பித்தாய் கிடக்கிறான் என்றால், கனகதாராவின் தோழி உன்னைக் காண வேண்டுமாம் என்று கூறியிருந்தால், இந்நேரம் அவன் இங்கே ஓடிவந்திருப்பானே!"

"அடடா!... இந்த யோசனை எனக்குத் தோன்றாமல் போய்விட்டதே!" எனத் தலையைத் தடவிக் கொண்டார் பெரியவர்.

"சரி, இப்போது என்ன செய்யலாம்? அவனில்லாமல் வேறு ஆள் தெரியாதா உங்களுக்கு?"

"எனக்கு நிறைய பேரைத் தெரிந்து என்னம்மா பயன்? கரிகாலனைக் குறிவைக்க உனக்கேற்ற ஆள் அவன்தான்! இந்தத் திட்டத்தில் நீதான் சதி! உனக்கு அவன்தான் பதி! அவனை விட்டால் உனக்கு வேறில்லை கதி!"

"விட்டால் அவனுக்கும் எனக்கும் நீங்களே முன்னின்று முடிச்சு போட்டு விடுவீர்கள் போலிருக்கிறதே!"

"அப்படி ஏதும் நடந்து விட்டால் இந்தக் கிழவனை நீ மறந்து விடாதேயம்மா!" எனத் தன் தாடியைத் நீவியவாறே குனிந்தபடி சிரித்தார் பெரியவர்.

"மூடுங்கள் வாயை! கரிகாலன் கதையை முடிக்கக் கேட்டால், எனக்கு ஒரு புதுக்கதையை எழுதி விடுவீர்கள் போலிருக்கிறதே! கரிகாலனிடத்தில் என்னைக் கொண்டு போய்ச் சேர்க்க என்ன வழி? முதலில் அதைப் பாருங்கள்!" எனக் கோபத்துடன் கூறினாள் அந்தக் கட்டழகி.



"சரி! சரி! கோபப்படாதே! அந்த அட்டைப் பயலைப் பிடிப்பதற்கு ஒரு வழி இருக்கிறது!" என்றவர், தங்களை யாரேனும் நோட்டமிடுகிறார்களா எனச் சுற்றுமுற்றும் பார்த்தபின், சற்றே அவள் அருகில் நெருங்கி காதில் ஏதோ கூறத் தொடங்கினார்.

அதன்பின் அவள் முகம் மாறியது.

"இந்தக் கல்லணை கட்டி முடிவதற்குள், இதே காவிரிக் கரையில் கரிகாலன் கதை முடியும்!" என்றவளின் வார்த்தைகளில் இருந்த உக்கிரம் பெரியவரின் விழிகளை விரிக்கச் செய்தது.

"அதை நான் முடித்து வைப்பேன்!" என்றவளின் விழிகளில் உக்கிரம் தகித்தது.

அந்தக் காட்சி...

மனத்தடாகத்தில் ஓடியதால், மலர்த்தடாகத்தில் நீந்தியவளின் விழிகளிலும் அதே உக்கிரம் குடிகொண்டதால், அவள் அதரங்கள் அனிச்சையாய் அசைந்தன.

"ஆம்! அதை நான் முடித்து வைப்பேன்!"

மல்லாந்து நீந்திக் கொண்டிருந்தவளின் மலர்க் கரங்கள் இரண்டும் தாளத்துக்குட்பட்ட துடுப்பாய் அசைந்தபடி இருந்தன.

அந்த நேரம்...

நந்தவனத்துக்குள் நுழைந்த அழகன், வாவிக்கரையை வந்தடைந்ததும், தான் கண்ட காட்சியால் நிலை குலைந்து சட்டென நின்றான். அடுத்த அடியை முன்னே எடுத்து வைக்காமல் சற்றே பின்வாங்கி, ஒரு வாகை மரத்தின் மறைவில் ஒடுங்கினான்.

வாவியில் கண்ட காட்சி அவனது கண்களில் பிரமிப்பாய் பிரதிபலித்தது.

தடாகத்தில் தங்கத் தாமரையென நீந்திய அந்தக் கட்டழகியின் பேரழகு முழுதும் தெரியாவிடினும், அறைகுறையாய் வெளிப்பட்ட அந்தப் பெண்மையே அவனைப் புத்தி பேதலிக்கும்படிச் செய்தது. அவன் கண்கள் இன்ப வெள்ளத்தில் நீராடியதால், கண்ட காட்சியில் இருந்து விலக முடியாமல் தவித்தன.

நேரம் ஓடியது!...

ஒருவழியாக கட்டழகியின் நீராடல் முழுமையடைந்ததில், படித்துறையை நோக்கி நீந்தி வந்து கரையேறியவளின் மொத்த அழகும் அவளது ஈரஆடையை மீறிப் பளிச்செனத் தெரிந்தது. துறையில் களைந்து போட்டிருந்த துகிலினை எடுத்து முகம் கைகளைத் துடைத்துக் கொண்டும், கார்குழலை நீர் போக உதறியும், ஈர ஆடையைப் பிழிந்து விட்டபடியும் நின்றவளின் மீதே நிலைத்திருந்த அழகனின் கண்கள், இமைக்க மறந்து அவளை விருந்தாக்கிக் கொண்டன.

கன்னங்கள் செந்தாமரையெனவும், வரிகள் ஓடிய அதரங்கள் தேன்சுளையெனவும், கருநாவற்பழமென உருளும் கயல்விழிகளுமாய், அந்தக் கட்டழகியின் முகம் அளவெடுத்து வடித்த சிலையின் கனக்கச்சிதத்துடன் இருந்தது. நீண்டு படர்ந்திருந்த குழல் நன்றாக அடர்ந்து அவளது பின்னழகைத் திரை போட்டு மறைத்திருந்தது.

அவளது வாழைத்தண்டொத்த வழுவழு கால்களின் திண்மையும், துகில் மறைத்தபோதிலும் தெரிந்த தொடையழகின் திரட்சியும், எழில் பொங்கும் வளைவுகளுடனான பவழக்கொடியிடையும், முற்றாய் நனைந்திருந்ததால், ஆடையை திமிறிக்கொண்டு எழுந்த அவளது முன்னழகுமாய், பருவத்தின் மொத்த வனப்புடன் தன் முன்னே நின்றவளைக் கண்டதாலோ என்னவோ அழகனின் நெஞ்சு படபடக்க, நிலைமறந்து நின்றதனால், தன்னை அவள் கவனித்து விட்டதைக்கூட அவன் உணரவில்லை!

"ஏய்! யார் நீ?" என அவள் குரல் எழுப்பிய போதுதான் தனது அசட்டுத்தனம் உணர்ந்து தடுமாறி, மரத்தில் மறைந்திருந்தவன், அவளை நோக்கி நடக்கத் தலைப்பட்டான்.

"கேட்டது உன் காதில் விழவில்லையா? யார் நீ? இங்கெப்படி வந்தாய்?" என்றவளின் கண்கள் கனலைக் கக்கியது.

"அந்தக் கேள்வியை நானல்லவா கேட்க வேண்டும்!" என்றபடி அழகன் அவளை நெருங்கி வந்து நின்றான்.

"ஒரு குமரிப்பெண் குளிக்கையில், மறைந்திருந்து பார்க்கும் நேர்மையை இந்தச் சோழநாட்டில்தான் பார்க்கிறேன்."

"ஓகோ! உங்கள் நாட்டில் என்ன கிழவிகள் குளிக்கும்போது வந்து பார்ப்பார்களோ? இங்கே அத்துமீறி வந்து குளிப்பது யார் என்று பார்த்தேன்! இது தவறா?"

"பார்த்ததோடல்லாமல் அதற்கு நியாயம் வேறு கூறுகிறீரோ? யாரய்யா நீர்? இங்கு உமக்கென்ன வேலை?"



"அடடே! அதிகாரம் அதிகமாய் பறக்கிறதே... அனுமதி இல்லாமல் நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள்? அதைக் கூறுங்கள் முதலில்!" என்றவனை ஏறெடுத்தவளின் இதழ்களில் எள்ளல் நகை படர்ந்தது.

"சரிதான்! நான் நினைத்து சரியாகிவிட்டது. நீர்தான் இந்தச் சோலைக்கு காவலாளியோ?"

"ஓகோ! அப்படியா தெரிகிறது? இருக்கட்டும்! யார் அனுமதி பெற்று வந்து நீராடினீர்கள்?"

"நான் நீராட யார் அனுமதி தரவேண்டும்?"





“நீங்கள் நீராட அனுமதி தேவையில்லை! ஆனால் இங்கு வந்து நீராட அனுமதி வேண்டும்!”

“ஓ!... இங்கு நீராடுவதற்கு அனுமதி வேண்டுமா? இயற்கையை யாரும் எங்கும் ரசிக்கலாம்! அனுமதி பெற்று வந்து நீராட இது என்ன உமது பாட்டன் வீட்டு வாவியா?”

“இப்படித் துடுக்கத்தனமாகப் பேசாமல், உடனடியாக வெளியேறி விடுங்கள்! இல்லாவிடில் நானே வேண்டாம் என்று நினைத்தாலும்கூட உங்களுக்கான தண்டனையை யாரும் தடுத்து நிறுத்திட முடியாது!”

“ஏனய்யா? இந்த வாவியில் குளித்தது என்ன தண்டனைக்குரிய குற்றமா?”

“ஆமாம்! இது பொதுமக்களுக்கு உரியதல்ல! தேவகன்னிகள் வந்து நீராடும் வாவி என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்!” என்றவனைச் சில நொடிகள் கூர்ந்தவள், பின் அலட்சியமாகக் கூறினாள்.

“அப்படியானால் தண்டனை எனக்கல்ல! உங்களுக்குத்தான் கிடைக்கும்!” என்றவளின் குறுநகை அவனைக்




கிறங்கடித்தது. ஆயினும் அவன் அசராமல் கேட்டான்.

“என்ன? எனக்குத் தண்டனையா?”

“ஆம்! ஒரு தேவகன்னி குளிப்பதை மறைந்திருந்து பார்த்து விட்டீர்கள் அல்லவா?”

“என்ன உண்மையாகவா? நீ... நீங்கள்...” எனத் தடுமாறியவன், “நான்... ஒரு தேவகன்னியிடமா உரையாடிக் கொண்டிருக்கிறேன்?” என வியப்பை வெளிப்படுத்தியவன், தன்னைக் கிள்ளிக் கொண்டு “ஓ!.. உண்மைதான்!” என்றவன், அவளையும் சட்டெனக் கைநீட்டி கிள்ளிப் பார்த்தான். அவளும் “ஆ!..” என அலறியபடி சில அடிகள் பின்னால் போக எத்தனித்தவளின் கால்கள் ஈரத்தால் வழுக்கிவிடவே, நிலைதடுமாறி விழத் தொடங்கினாள்.

அழகன் சட்டெனப் பாய்ந்து, அவளது இடையில்

ஒரு கரம் கொடுத்தும், மறுகரத்தால் அவளது வலக்கையைப் பற்றிக் கொண்டும் அவளைத் தாங்கிப் பிடித்தான்.

மறுகணமே சரேலென மின்னல் தாக்குதலுக்கு உட்பட்டவளானாள் அவள். தன்னைத் தாங்கியவனின் வலுமிகு கரங்களில் ஒரு தளிர்க் கொடியென வளைந்தபடி கிடந்தவள், அவனது விழிகளைக் கூர்ந்து நோக்கினாள்.

இருவரது விழிகளும் இமைக்க மறந்து இன்பக் கடலில் நீந்தின.

அதுவரை எந்த ஆடவனும் தொட அனுமதித்திடாதவளுக்கு, அழகனின் கரம் தன் இடையில் பதிந்ததும், திடீர் இன்பத் தாக்குதலில் திக்குமுக்காடி நிலை குலைந்தவளுக்குள் உணர்ச்சிகள் பிரவாகமெடுத்தன. அவனது மெல்லிய பிடியில் இருந்துகூட தன்னால் விடுபடமுடியவில்லையே என்ற எண்ணம் அவளுக்கே வியப்பாய் இருந்தது.

அந்தக் கட்டழகியை ஏந்தியவனின் நிலையும் பெரும் தடுமாற்றமாகவே இருந்தது. பார்வை பரிமாற்றத்தினூடே அவன் மெலிதாய் முணுமுணுத்தான்.

“இந்த தேவகன்னியின் பெயர் என்ன? ரம்பையா? மேனகையா? ஊர்வசியா?”

“ஏன் அவர்களைத் தவிர வேறு ஒருவர் பெயரும் உங்களுக்குத் தெரியாதா?” நாணத்துடன் கேட்டவளின் விழிகளைக் கூர்ந்தவாறே ‘இல்லை’ என்பதாகத் தலையாட்டினான்.

“என் பெயர் தங்கம்!”

“கச்சிதமான பெயர்!”

“உங்கள் பெயர்?”

“அழகன் என்று அழைப்பார்கள்!”

அவன் அவ்விதம் கூறியவுடன், ‘அழகன்... மட்டுமல்ல பேரழகன்தான்!’ என அவளது மனக்குரல் ஒலித்ததன் விளைவாக, அவள் அதரங்கள் “அழைப்பது சரிதான்!” என அசைந்தன.

அவனது முகத்தில் தெரிந்த கள்ளங்கபடமற்ற தன்மை அவளை மிகவும் ஈர்த்தது. விசாலமான நெற்றியும் அதில் பிறைவடிவத் திலகமும், கூரிய நாசியும், குவிந்த செவ்விதழும், அரும்பு மீசையும் அவன் பேரழகன்தான் என மீண்டும் அவள் காதில் ஓதியது.

இடையில் தொங்கிய நீண்ட வாளும், கச்சையில் மார்புக்குக் குறுக்காக புலிமுகக் கைப்பிடியுடன் குறுவாளும், திரண்ட தோளும், திண்ணிய நெஞ்சும், வலுமிகு கரங்களும் அவன் பெருவீரன் என்பதையும் அவளுக்குப் பறைசாற்றியது.

“இப்படியொரு நிலை வருமென்று...” என அவள் இழுக்க, அழகன் முடித்தான்.

“நானும் நினைக்கவில்லை! இதுவல்லவோ யோகநிலை!”

அவன் அவ்வாறு கூறிய அதேநேரம்... பெரியவர் கூறிய வார்த்தைகள் அவளது செவியில் எதிரொலித்தது.

“உனக்கு ஏற்ற ஆள் அவன்தான்! உனக்கு அவன்தான் பதி! அவனை விட்டால் உனக்கு வேறில்லை கதி!”

அந்தக் குரல் ஒலித்ததில், நாணம் குடிகொள்ள, “ஐயோ!.. விடுங்கள் என்னை!” எனச் சிணுங்கலுடன் அவனது பிடியிலிருந்து விலக விருப்பமில்லாவிடினும், விலகினாள் தங்கம்.


இவ்வளவு நேரமாக அழகனது பிடியில் இருந்ததை நினைத்தவளுக்கு மேனி சிலிர்க்கவே, நாணத்துடன் தலைக் கவிழ்ந்தாள். அழகன் நெருங்கி வந்து நின்றான்.



அப்போது சற்று தூரத்தில் ஒரு குதிரையின் கனைப்பொலி கேட்கவே தங்கம் கலவரம் அடைந்தவளாய், “நாளை இதேநேரம் மீண்டும் இங்கே சந்திப்போம்! இப்போது நான் கிளம்புகிறேன்.” என்றவாறு அவனது பதிலைக் கூட எதிர்பாராதவளாய் சரேலெனத் தண்ணீருக்குள் பாய்ந்தாள்.

இப்படித் திடுமென வாவியில் பாய்ந்து மறைவாள் எனச் சற்றும் எதிர்பாராததால், திடுக்கிட்டுப் போன அழகன், “தங்கம்!...” என அழைத்தபடி,





அவள் நீருக்குள் பாய்ந்த இடத்தையே பார்த்தவாறு அதிர்ச்சி விலகாமலே நின்றிருந்தான்!

மறுநாள் மட்டுமல்ல, அடுத்தடுத்து வந்த நாட்களில் அழகனும் தங்கமும் ஒருவரையொருவர் நிறையவே சிந்தித்தார்கள். அதனால் அந்த நந்தவனத்தில் அடிக்கடிச் சந்தித்தார்கள்.

அப்படியொரு நாளின் ரம்மியமான மாலைப் பொழுதொன்றில் வாவியின் படித்துறையில் அவ்விருவரும் அமர்ந்திருந்தார்கள்.

"நான் ஒன்று கேட்டால், மறைக்காமல் உண்மையைச் சொல்வீர்களா?" என்றவளை வியப்புடன் நோக்கினான் அழகன்.

"இதுநாள்வரை உன்னிடத்தில் ஏதேனும் நான் மறைப்பதாக நினைக்கிறாயா தங்கம்?"

"இல்லை! கேள்வி உங்களைப் பற்றியதில்லை!"


"பிறகு?"

"கரிகாலரைப் பற்றியது! நேற்று முன்தினம் அரசவை மண்டபத்திலேயே மன்னரைக் கொல்வதற்கு சதி நடந்ததே! ஏன் அக்கூட்டம் மாமன்னரைக் குறிவைத்தது?"

"கரிகாலரைக் குறிவைக்க காரணம் தேவையா? பகையரசர்க்கெல்லாம் சிம்ம சொப்பனமாக இருப்பவர்! இமயம்வரை சென்று வெற்றிக்கொடி நாட்டியவர்! இளம் வயதிலேயே வஞ்சகத்தை வீழ்த்தி பட்டத்துக்கு வந்தவர். துரோகங்களை நிறையச் சந்தித்தவர்! இப்போதும் சந்தித்துக் கொண்டே இருப்பவர்! அவரைக் குறிவைக்க பலருக்கும் ஒரு காரணம் இருக்கிறது. ஆனால் அந்தக் காரணத்தில் நியாயம் இருக்க வேண்டுமல்லவா? பகை இருக்கிறது! பகுத்தறிவு இல்லை! நீசத்தனம் செய்கிறார்கள்! நீதியை மறந்து விடுகிறார்கள்! நேற்று முன்தினம் வந்ததும் அப்படியொரு கூட்டம்தான்! அக்கூட்டத்துக்கு உதவி செய்த சோழநாட்டின் பெரியவர் ஒருவர் பிடிபட்டு விட்டார்!"

"அப்படியா?" என்றவளின் முகம் கலவரமடைந்து சிந்தனையில் ஆழ்ந்தாள்.

அமைதி குடிகொண்ட அவளது முகத்தையே ஆசைதீரப் பார்த்துக் கொண்டிருந்தவன், அவள் வதனத்தைக் கைகளில் ஏந்தியவாறு கேட்டான்.




"தங்கம்!... என்ன சிந்தனை? ஏன் இந்த அமைதி?"

"தெய்வீகமான காதல் சோகத்தில் முடியும் என்கிறார்களே! அது நிஜம்தானே?"

"தங்கம் ஏனிந்த திடீர் கேள்வி! சரி, கேட்டுவிட்டாய் என்பதால் சொல்கிறேன். காவியங்கள்தான் அப்படிச் சொல்கின்றன! ஆனால் எத்தனையோ காதலர்கள் உயர்ந்த உன்னத காதல் வாழ்வை எய்தியதை நான் கண்டிருக்கிறேன்!"


"இல்லை! என் கேள்வியை மடைமாற்றம் செய்யாதீர்கள்! ஒரு உண்மையான காதலை, அவர்கள் இறந்த பிறகுதான் இந்த உலகம் ஏற்குமா?"

"காதலில் நேரும் மரணத்துக்கு இரண்டு வகை உண்டு! ஒன்று அவர்களது காதலை ஊருலகம் ஏற்காத நிலை! இன்னொன்று ஒருவருக்கொருவர் உண்மையாகக் காதலித்தாலும் கூட, அவர்களுக்குள் சில உண்மையை மறைக்கும்படி சூழல் நேர்ந்தால், ஒருவரை ஒருவர் விலகிட நேரிடுமோ என்ற ஐயமே, பயமாக மாறி, தங்களை மாய்த்துக் கொள்வது!" என்றவனை கவலை கவ்விய கண்களுடன் பார்த்தாள் அவள்.

"ஒருவேளை நான் தங்களிடம் உண்மையை

மறைக்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள்! என்னை நீங்கள் ஏற்பீர்களா? ஒதுக்குவீர்களா?" என்றவளை கூர்ந்து பார்த்தவன், புன்னகைத்தவாறே கூறினான்.

"எப்போதும் காதலில் உண்மையைச் சொல்ல வேண்டும் என்றாலும்கூட, சுத்தமான பத்தரை



மாற்றுப் பொன்னை ஆபரணம் செய்ய இயலாது. அதில் தாமிரம் சேர்ப்பார்கள். சுத்தமான தங்கத்துக்கே அந்த நிலை! எனது இந்தத் தங்கத்தின் காதலில் சிறிது பொய்மை கலந்திருந்தாலும், நான் நிச்சயம் ஏற்பேன்!" ஏந்திய அவள் வதனத்தைத் தன் கன்னங்களோடு இணைத்துக் கொண்டு கூறியபோது அவள் விழிகள் கசிந்தன.

"அப்படியானால், என்னிடத்தில் ஏதேனும் பிழையிருந்தாலும் என்னை நீங்கள் மனமுவந்து மன்னித்து ஏற்றுக் கொள்வீர்கள் அல்லவா?"




"இதே கேள்வியை நானும் உன்னிடம் கேட்கலாம் அல்லவா?"

"நிச்சயமாக ஏற்றுக் கொள்வேன்! காரணம், உங்கள் மீது நான் வைத்திருக்கும் பேரன்பை என்னால் வார்த்தையில் விவரிக்க முடியாது! நீங்கள் இல்லாமல் என்னுடைய வாழ்க்கையை நான் நினைத்துப் பார்க்கவே முடியாது!"

"அதையேதான் நானும் உனக்குச் சொல்கிறேன்! ஆயிரம் களங்கம் இருந்தாலும் உன்னை நான் ஆனந்தமாக ஏற்றுக்கொள்வேன்! அதற்கான காரணம், நீ என்னுடைய உயிர்! உன்னையன்றி நான் வாழத் தயாராக இல்லை!" என்றவனின் கரங்களைப் பற்றிக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

"இந்நேரத்தில் இன்னொன்றையும் சொல்ல வேண்டும்! நான் ஒரு சாதாரண பெண்ணல்ல!"

"தெரியுமே! நீ தேவகன்னிகை! அப்படித்தான் உன்னை வாவிக் கரையில் நான் முதன்முதலில் பார்த்தபோது நினைத்தேன்!"


"இல்லை! நான் ஒரு நடனத் தாரகை! என் நடனக் கலையின் புகழ் இவ்வுலகமெல்லாம் ஒளி வீசவேண்டும் என்று கனவு கண்டேன்! ஆனால் இந்தச் சோழ நாட்டுக்கு நான் வந்த நோக்கம் வேறு! இப்போது எனது ஏக்கம் வேறு! தங்களைக் கைப்பிடித்த மனைவியாய், இந்தச் சோழ நாட்டிலேயே உங்களை விட்டுப் பிரியாத நிலையுடன் வாழவேண்டும் என்றுதான் உள்ளம்

உருகுகிறது!" வழிந்த கண்ணீரோடு அவள் அவ்விதம் கூறியதும், நெஞ்சம் கலங்க அவளை இறுகத் தழுவிக் கொண்டான் அழகன்.

அப்போது தூரத்தே ஏதோ அரவம் கேட்கவே அவர்கள் இருவரும் திரும்பினர். அவர்களை நோக்கி சில காவலர்கள் ஓடிவந்தனர்.

அதைத் தொடர்ந்து, "அழகா! அவளை விட்டுவிடாதே பிடி!" என்ற ஒரு குரல் ஒலித்தது.

என்ன நடக்கிறது என்பதை ஊகிப்பதற்குள்ளாகவே வீரர்கள் இருவர் நெருங்கி வந்து அவளைப் பிடிக்க முனைய, சரேலென வாளை உருவிய அழகன், "அங்கேயே நில்லுங்கள்!



தங்கத்தைத் தொட்டால், தொட்ட கை அங்கத்தில் இருக்காது!" என உறுமினான் அழகன்.

அதைக் கேட்டதும், வீரர்கள் பயந்து விலகி நின்றனர்.

கரிகாற்சோழ மாமன்னரின் அரசவையில் ஆன்றோர் பெருமக்கள் அமர்ந்திருந்தனர். அங்கே அழகனும், பெரியவரும், தங்கமும் நின்றிருக்க, மேலும் நால்வர் கைகள் கட்டப்பட்ட நிலையில் நின்றிருந்தனர்.

அமைச்சர் இரும்பிடர்த்தலையர் எழுந்து பேச்சைத் தொடங்கினார்.

"இந்த விசாரணையில் மாமன்னர் கலந்து கொள்ளாதிருக்க காரணம், இதுநாள் வரையில் தன் மெய்க்காப்பாளனாக இருந்த அழகன்மீது விசாரணை செய்வதை மாமன்னர் விரும்பவில்லை! எனவேதான் மன்னரைக் கொலை செய்ய முயன்றவர்கள் மீதான இந்த வழக்கை நான் விசாரிக்க அனுமதித்திருக்கிறார்!"

அமைச்சர் கூறியதைக் கேட்டதும், அவையினர் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அனைவரின் முகத்திலும் கவலையும் கோபமும் கலந்து ஓடியது. அமைச்சர் விசாரணையைத் தொடங்கினார்.

"பெண்ணே! நீ பிரதாப ருத்ரன் மன்னனின் சதிக்கூட்டத்தைச் சேர்ந்தவள்தானே?" அமைச்சர் கேட்டதும், அழகன் மிகுந்த அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தான். அவளோ தரைபார்த்தபடி 'ஆம்' என்பதாகத் தலையசைத்தாள்.

"சோழநாட்டுக்கு நீ வந்தது




எங்கள் மன்னரை கொலை செய்வதற்காகத் தானே!"

"இல்லை! அவள் குற்றம் ஏதும் செய்யவில்லை!" என அழகன் பதற்றத்துடன் கூறினான். ஆனால் அவளோ அமைதியாகத் தலைகுனிந்தபடியே நின்றாள்.

"அழகா! நீ இப்போது குற்றவாளி! இந்தக் கொலைகாரக் கூட்டத்துக்கு நீயும் உடந்தை! உன்னைக் கேட்கும்போது மட்டும் நீ பேசினால் போதும்!" என்ற அமைச்சரின் குரல் அதிகாரத்துடன் ஒலித்ததில், அழகன் அமைதியாய் தலைக் கவிழ்ந்தான். அமைச்சரின் பார்வை மீண்டும் அவள்மீது திரும்பியது.

"இதுநாள் வரையிலும் மன்னரின் நம்பிக்கைக்குரிய மெய்க்காப்பாளனாக விசுவாசத்துக்கு பெயர்பெற்ற அழகனையே, நீ குற்றம் ஏதும் செய்யவில்லை எனக் கதறும் அளவுக்கு மயக்கி வைத்திருக்கிறாய்! பலே ஆள்தான் நீ!" என்ற அமைச்சர், அழகனின் பக்கம் திரும்பி, "அழகா! இவள்தான் கனகதாரா என்று தெரிந்தும், நீ பழகியது குற்றம் என்பதை

ஒப்புக் கொள்கிறாயா?” என்றார்.

“இல்லை! அவள் பெயர் தங்கம் என்றுதான் அறிவேன்! ஆனால் கனகதாரா என்பதே இன்றுதான் அறிந்தேன்!” என்றான் அழகன்.

“இதை என்னை நம்பச் சொல்கிறாயா?

“நான் சொல்வது உண்மை! நம்புவதும் நம்பாததும் தங்கள் விருப்பம்!”

“நமது மன்னரைப் பற்றியோ, அல்லது முகரி மன்னனைப் பற்றியோ இவள் உன்னிடம் ஏதேனும் கூறியதுண்டா?”

“நமது மன்னர், முகரி மன்னனின் நெற்றிக் கண்ணை அழித்தது எப்படி என்பது பற்றி ஒருமுறை கேட்டதுண்டு! அதற்கு நான் விளக்கம் கூறிய போது, இப்போதுதான் எனக்கு சில உண்மை விளங்கியது எனத் தங்கம் கூறியதுண்டு!”

“இன்னும் இவளை நீ தங்கம் என்றா கூறுகிறாய்?”

“நான் அறிந்ததைத்தானே கூறமுடியும்! தங்கம் எனக்கு என்றும் தங்கம்தான்!”

“உன் புத்தி பேதலித்துவிட்டதென நினைக்கிறேன். சரி, உன்னிடம் பிறகு வருகிறேன்.” என கனகதாராவிடம் திரும்பிய அமைச்சர், “நீ சொல்! அழகன் எப்படி உனக்கு அறிமுகமானான்?” என்றார்.

“அதை நான் கூறுகிறேன் அமைச்சரே!” என்றார் கிழவர்.

“கிழவா! நீ வாயை மூடு! எல்லாம் உன்னால் விளைந்த வினை!” என உக்கிரமானார் இரும்பிடர்த்தலையர்.

“நான் கிழம் என்றால், நீர் என்னைவிட பழுத்த கிழம்!” என்ற கிழவர் பலமாகச் சிரிக்க, அவையில் ஆங்காங்கே சிரிப்பலையும், கூடவே எதிர்ப்பலையும் கிளம்பியது.

“என்ன திமிர்!”

“அமைச்சரையே ஏளனம் செய்கிறதே இந்தக் கிழம்!”

“அந்தக் கொலைகாரியை ஏவியவனே இவன்தான்!”

அமைச்சர் அனைவரையும் கையமர்த்தினார். “அமைதியாய் இருங்கள்!” என்றவர், கிழவரை நோக்கி, “பெரியவரே!..” என அழைத்தார்.

“இது அழகு!” என்றார் கிழவர்.

“எது அழகு?”

“பகைவனே ஆயினும் மரியாதை கொடுத்துப் பேசுவது அழகு!”

“நீர் பேசும் அழகு இருக்கட்டும்! நமது மன்னரைக் கொல்வதற்கு சோழ நாட்டில் புகுந்த பெண்ணுக்கு உடந்தையாய் இருந்தீரே! அதற்கு என்ன தண்டனை தெரியுமா?”

“அன்று கொலை முயற்சியே நடக்கவில்லை அமைச்சரே! அது தெரியுமா உமக்கு?” என்றார் பெரியவர்.

“என்ன உளறுகிறீர்? தப்பிப்பதற்கு கூறும் உமது வார்த்தை ஜாலம் இங்கே எடுபடாது!” என அமைச்சர் உறுமியபோது, அமைதியாகப் பேசினாள் கனகதாரா.

“அமைச்சரே! அவர் கூறுவது உண்மைதான்! அன்று நாட்டியத்தின்போது, அரசரைக் கொல்ல நான் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை! என் நடனம் முடிந்ததும், அரசர் எனக்குப் பரிசில் வழங்கும்போது, நான் விடம் தோய்ந்த புலிநகம் அணிந்து அவரது கரங்களை தெரியாமல் பட்டதுபோல் கீறிவிட வேண்டும். அந்த கடும்நஞ்சு வேலை செய்ய அரைநாள் ஆகும்! அதற்குள் நாங்கள் புகார் நகரைவிட்டுக் கிளம்பிவிட வேண்டும் என்பதுதான் திட்டம்! ஆனால் நான் அதைச் செயல்படுத்தியதாக நாடகமாடி, என் கூட்டத்தாரைத் தப்புவிக்கச் செய்தேன். உண்மையில் நான் அன்று கரிகாலரைத் தொடவே இல்லை!”



“ஏன் அவ்வாறு நாடகம் ஆடினாய்? ஏன் நீ மட்டும் இங்கே தங்கினாய்?” என அமைச்சர் வினவ, அவள் பதில்



சொல்ல வகையற்றவளாய் கண்களில் தளும்பும் நீருடன் அழகனைப் பார்த்தாள்.

“அமைச்சரே! அதற்கு நான் விளக்கம் தருகிறேன். உங்கள் கேள்விகளுக்கு காரணம் அழகன்தான்!” என்ற பெரியவர், மேலும் விளக்கினார்.

“அழகனும் கனகதாராவும் ஒருவர் மனதார விரும்புகிறார்கள். அவனைவிட்டுப் பிரிந்து போகமுடியாமல் இவள் தவிக்கையில், தப்பியோடிய இவளது கூட்டம் ஊருக்கு வெளியே பிடிபட்டுவிட்டது.”

“என்ன தாரா, பெரியவர் கூறுவது...” என அமைச்சர் முடிப்பதற்குள், “முற்றிலும் உண்மை!” என்றாள் கனகதாரா.



“சரி! குற்றத்தை நீயே ஒப்புக் கொள்கிறாய்! மன்னரைக் கொலை செய்யும் முயற்சியில் இருந்து ஏன் பின்வாங்கினாய்?”

“சோழ மன்னர் கரிகாலரின் இமயப் படையெடுப்பில் எங்கள் மன்னர் பிரதாப ருத்திரரை அடிமைப்படுத்தினார். அத்துடன் நில்லாமல், சமீபத்தில் திடீரென அவரது நெற்றியில் உள்ள விசேட கண்ணையும் அழித்து அவரை அவமானப்படுத்தினார். அதற்குப் பழிவாங்கும் நோக்கில்தான் நான் இங்கு அனுப்பப்பட்டேன். ஆனால் பொன்னி நதிக்குக் கரையெழுப்பும் பணியில் கரிகாலரை அவமதிக்கும்படி எங்கள் மன்னர் நடந்து கொண்டதையும், அதனாலேயே அவரது நெற்றிக் கண்ணை அழித்ததையும் அழகன் கூறினார். மேலும் கரிகாலர் நினைத்திருந்தால், எங்கள் மன்னரைச் சிறையில் அடைத்திருக்கவோ, அழித்திருக்கவோ முடியும்! ஆயினும் நாட்டை ஆள்கின்ற மன்னருக்கு அகந்தை கூடாது எனும் நோக்கில் நெற்றியில் உள்ள ஒரு விழுப்புண்ணையே நெற்றிக் கண்போலக் காண்பித்து வரும் பிரதாப ருத்திரருக்கு படம் புகட்டவே கரிகாலர் அவ்விதம் செய்ததை அழகன் விளக்கியதும், கரிகாலரின் மேன்மையான உள்ளமும் புரிந்தது. ‘மக்கள் தொண்டே மகேசன் தொண்டு!’ என்று பல்லாண்டுகளாக கல்லணையை எழுப்பும் அந்த உயர்ந்த உள்ளம் கொண்டவரை கொலை செய்யும் எண்ணத்தைக் கைவிட்டேன். அத்துடன் மாமன்னரின் உயிரைக் காத்து வரும் என் மனதுக்கு உகந்தவரின் மனதுக்கு என்னால் துன்பம் நேரக் கூடாது என்பதும் என் எண்ணம்! அனைத்துக்கும் மேலாய் ஒரு உயிரைக் கொல்லும் எண்ணமோ துணிவோ என்றும் எனக்குக் கிடையாது! ஆனால் இதனைச் செய்யவேண்டும் என்றதொரு நெருக்கடியை எனக்கு ஏற்படுத்தி இங்கே அனுப்பி வைத்தார்கள்.”

“இதை நாங்கள் நம்ப வேண்டுமா? இது எதுவும் தெரியாமல்தான் அழகன் உன்னைக் காதலித்தான் என்று எங்களை நம்பச் சொல்கிறாயா?” என்ற அமைச்சரின் கேள்விக்கு மறுமொழி பகர்ந்தார் பெரியவர்.




“நம்பத்தான் வேண்டும் அமைச்சரே! ஒருவகையில் பார்த்தால் கரிகாலரின் உயிரைக் காப்பாற்றிய பெரும் பங்கு அழகனுக்குத்தான் உண்டு! பல சந்தர்ப்பங்களில் தன் வாளின் துணை கொண்டு கரிகாலரைக் காத்தவன், இப்போது தனது வார்த்தைகளின் துணை கொண்டு கனகதாராவின் மனமாற்றத்துக்குக் காரணமாகி கரிகாலரைக் காப்பாற்றியிருக்கிறான். எனவே அவர்கள் இருவருக்கும் தண்டனை வழங்குவது சரியாக இருக்காது!”

பெரியவரின் பேச்சில் இருந்த நியாயம் அரசவையில் ஆர்ப்பரிப்பை ஏற்படுத்தியது.

“ஆம்! பெரியவர் கூற்று சரிதான்!”

“ஆம்! அழகனையும் கனகதாராவையும் விடுவிக்கலாம்!”

“பெரியவரே! கரிகாலரைக் கொலை செய்யும் முடிவைக் கைவிட்டதற்காக கனகதாராவையும், அவளது மனமாற்றத்துக்குக் காரணமான அழகனை மன்னித்தாலும், சோழநாட்டில் பிறந்து ராஜதுரோகம் புரிந்த உம்மையும், கனகதாராவின் கூட்டத்தையும் இந்த அரசவை மன்னிக்காது!” என உரத்த குரலில் கூறினார் அமைச்சர்.

“அமைச்சரே! கல்லணை கட்டுமானப் பணிக்கு மேலும் நால்வர் கிடைத்திருக்கிறார்கள் என்றெண்ணி அந்தக் கொலைகாரக் கூட்டத்தையும் மன்னிப்பதுடன், மூப்பு காரணமாக, மூளை குழம்பிய இந்தக் கிழவனையும் மன்னிக்க வேண்டுகிறேன்!” எனக் கரம் கூப்பினார் பெரியவர்.



“இந்தக் கிழவனை மட்டும் மன்னிக்கவே கூடாது!” அவையில் இருந்த புலவர் எழுந்து கூவினார்.

“ஆம்! கிழவனை மன்னிக்கவே கூடாது!” என்றது ஒரு குரல்.

“ஆமாம்! ஆமாம்!” மேலும் ஆங்காங்கே குரல்கள் எழவே, பெரியவர் அங்கிருந்து ஓடத் தொடங்கினார்.

“பிடியுங்கள் அவனை! தப்பிக்கப் பார்க்கிறான்!”

ஓடிய பெரியவர் சட்டென நின்றார். அதுவரை தான் போர்த்தியிருந்த போர்வையை விலக்கி, அணிந்திருந்த நரைமுடி தாடியைக் கலைந்ததும், அங்கே கரிகால் பெருவளத்தார் தோன்றினார்.

“ஆ! மாமன்னர்!...”

“கரிகாலச் சக்கரவர்த்தி!”

“பொன்னிக் கரைகாணும் சென்னிக் காவலர்!”

“வாழ்க! வாழ்க!...” அரசவை எங்கும் வாழ்த்தொலிகள் ஒலித்திட, அரியாசனம் சென்று அமர்ந்த மாமன்னர் கரிகாலர், அனைவரையும் அமரும்படி கையமர்த்தினார்.

“நானும் அமைச்சரும் சேர்ந்து நடத்திய இந்த நாடகம் நன்மையில் முடிய வேண்டும் என்பதற்காகத்தான்! எனவே இங்கே சிலவற்றை விளக்க வேண்டிய கடமை எனக்கிருக்கிறது.” என்ற மாமன்னர், “இதோ நிற்கும் கனகதாரா வேறுயாருமல்ல! பிரதாப ருத்ரரின் அரசகுலத்தைச் சேர்ந்தவள். அதாவது அவரது தங்கை மகள்! என்னைக் கொலை செய்வதற்கு அந்நாட்டுத் தளபதியால் ஏவிவிடப்பட்ட அப்பாவிப் பெண்! அவள் வந்தபோதே ஒற்றர் படைத்தலைவர் மூலம் விவரம் அறிந்து கொண்டேன். என்பொருட்டு,ஒருவிவரமறியாத பெண்ணுக்கு, அதுவும் ஒரு நாட்டியத் தாரகைக்கு துன்பம் விளைந்திடக் கூடாதென்று முடிவெடுத்துத்தான் அவளுக்கு உதவியாக அழகனைக் கைகாட்டினேன். இது விஷயத்தில் அழகன் ஒரு நிரபராதி! அதுமட்டுமல்ல, கனகதாராவுக்கு என்மீதுள்ள அவப்பெயரை விலக்கி நன்மதிப்பைக் கூட்டியதோடு, அவளையும் திருத்தி நல்வழிப்படுத்தியதால், அழகன் பாராட்டுக்குரியவன்!” என மாமன்னர் கூறியபோது, அழகன் குறுக்கிட்டான்.




“அரசே! எல்லாம் தெரிந்திருந்தும் ஏதும் அறியாதவர்போல் என்னமாய் நடித்திருக்கிறீர்கள்! நன்றாய் இருக்கிறது உங்கள் நாடகம்!”

“அழகா!.. நாடகத்தை நாமே பாராட்டினால் அது அழகா!..” என்ற கரிகாலர், அவையோரைப் பார்த்தார். அவையில் சிரிப்பலை எழுந்தது.

“பிறர் மனம் மகிழ நல்லவர்கள் எதைச் செய்தாலும் அது அழகுதான்! ஆனாலும் கனகதாராவுக்கும் அழகனுக்கும் தண்டனை உண்டு!” என அங்கு நின்ற பெண்ணுக்குக் சைகை காட்ட, கையில் மலர் மாலைகளை ஏந்தியபடி இரு பெண்கள் வந்து நின்றனர்.

“அழகா! காதல் சிறையில் இருந்த உங்களிருவருக்கும் கல்யாணச் சிறையைப் பரிசளிக்கிறேன்.” என்றவாறே கரிகாலர் அழகனிடமும் கனகதாராவிடமும் ஆளுக்கொரு மலர்மாலையைக் கொடுக்க, அந்த அரசவை மண்டபம், திருமண மண்டபமாக மாறி வாழ்த்தொலி எழுந்தது.

கதைக்கு விழுந்த விதை:
தொழுது மன்னரே கரைசெய் பொன்னியில்
தொடர வந்திடா முகரியைப் படத்து
எழுது கென்று கண்டு இது மிகைக்கண் என்று
இங்கழிக்கவே அங்கழிந்ததும்“ —கலிங்கத்துப் பரணி—184
“மண் கொண்ட பொன்னிக் கரைகட்ட வாராதான்
கண் கொண்ட சென்னிக் கரிகாலன்” —குலோத்துங்க சோழன் உலா—34.6


படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

கட்டுரை

# யுத்தம் இல்லா காலம்


'விரோதி பணியாவிட்டால் என்ன செய்வது? அழித்தொழிக்க வேண்டியதுதான்' என்று கோபம் பொங்க எழுதியவர் மக்சிம் கார்க்கி; ஆனால் அவர்தான், 'யுத்தம் வேண்டாம்' என்றும் உலகத்து நாடுகளிடம் வேண்டினார். உலக இடதுசாரிகளின் இலக்கிய முகம் அவர். போரினால் ஏற்படும் அழிவைப் பார்த்த பிறகு அவர் விடுத்த கோரிக்கை, வேண்டுகோள், எச்சரிக்கை, அறிவுறுத்தல், படிப்பினை எல்லாம் அந்த இரண்டாம் சொற்களில் அடங்கியுள்ளன. இத்தனைக்கும் அவர் இரண்டாம் உலகப் போரைப் பார்க்காதவர், 1936இல் மறைந்துவிட்டவர்.

போர் என்னவோ இரண்டு நாடுகளுக்கு இடையில் நடந்தாலும், மடிவது என்னவோ இரண்டு பக்கத்திலும் மக்கள், மக்கள், மக்கள்தாம். பாதிப்போ உலக நாடுகள் முழுமைக்கும். போருக்கான முடிவை எடுக்கும் தலைவர்கள் எப்போதும் மடிவதேயில்லை. இன வெறுப்பு கொண்டோரும், வரலாறு அறியாதவர்களையும் தவிர, வேறு யாரும் போரை ஆதரிக்க மாட்டார்கள். ஆயுதம் தயாரிப்பவர்களையும் தனக்குப் பாதுகாப்பு செய்துகொண்டவர்களையும் இதில் இணைத்துக்கொள்ளலாம்.

போரும் சமூகமும்: இந்தியாவில் தமிழ்நாட்டுக்கு நேரடிப் போர் அனுபவம் சமீபத்தில் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. உள்நாட்டுக் கலகம், சாதி மோதல்களால் நேரும் தற்காலிக அழிவுகள் மட்டும்தாம். எனினும் உலகப் போர் காலத்தில் சென்னை நகரம் போரின் அச்சத்தை எதிர்கொண்டது. முதல் உலகப் போரின்போது, 1914 செப்டம்பர் 22இல் ஜெர்மனியின் எம்டன் போர்க்கப்பல் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியது. அது இன்றுவரை பேசப்படுகிறது.

இரண்டாம் உலகப் போர்க் காலத்திலும் (1939—45) சென்னையில் குண்டுவீச்சு நடத்தப்பட்டது. உயிர் அச்சம் கொண்டவர்கள் சென்னை நகரைக் காலிசெய்து வெளியேறலாம் என்கிற அறிவிப்பு, 1942 ஏப்ரல் 12 அன்று வந்தது. சென்னையிலிருந்து உள் தமிழ்நாட்டுக்கு மக்கள் இடம்பெயர்ந்தனர். அப்போதைய கணக்குப்படி, அப்படிச் சென்றவர்கள் 5 லட்சம் பேர். போர் அபாயம் முடிந்ததும் பலர் திரும்பினர்; சிலர் அங்கேயே தொடர்ந்தனர்; வேறு சிலரோ அங்கேயே மறைந்தும் விட்டனர்.

எழுத்தாளர் வ.ரா. தன் குடும்பத்தினரை மட்டும் வேலூருக்கு அனுப்பிவைத்தார். 48ஆவது வயதில் மணம் முடித்திருந்த அவருக்கு, இருந்திருந்து பிறந்த ஒரே குழந்தையும் வேலூரில் காலமானது. திருக்கழுக்குன்றம் சென்ற உ.வே.சாமிநாதர்






# வேண்டும்

## பழ. அதியமான்

சென்னைக்குத் திரும்பவே இல்லை. அங்கேயே 1942இல் காலமானார்.

சில பத்திரிகை அலுவலகங்கள் உள் தமிழ்நாட்டுக்கு இடம்பெயர்ந்தன. சென்னை வானொலி நிலையம் நடத்திய இதழின் ('வானொலி') பிரசுரம் திருச்சிக்குச் சென்றது. 'வானொலி'யின் 1940 ஜூலை மாதத்தின் இரண்டாவது இதழ் அங்கிருந்துதான் வெளியானது. சக்தி காரியாலயத்தின் அச்சு இயந்திரங்கள் புதுக்கோட்டைக்குச் (ராயவரம்) சென்றன. அந்தப் போர்க் காலத்தில் ஏ.ஆர்.பி. என்கிற சுருக்கச் சொல் பிரபலமாக இருந்தது. சென்னையை ஒட்டிய கிழக்குக் கடற்கரைப் பகுதியை வான் வழியாக ஜப்பான் தாக்கிடத் திட்டமிட்டது என்பது பொதுவான ஊகம்.

அப்படித் தாக்குதல் நடைபெற்றால், மக்கள் எப்படித் தப்பிப்பது என்பதற்கான முன்னெச்சரிக்கைப் பயிற்சியே ஏ.ஆர்.பி.


"எதுவுமே செய்ய உங்களுக்கு இல்லை என்றால், பயணத்தை மேற்கொள்ளாதீர்கள்" என்று எம்.எஸ்.எம். ரயில்வே விளம்பரமே வெளியிட்டது. அரிசி உள்பட உணவுப் பொருள்களுக்குக் கட்டுப்பாடு வந்தது. உணவுப் பொருளைச் சேமிக்கும் நோக்கத்தில், திருமணத்துக்கு 30 பேரை மட்டுமே அழைக்கலாம் என்ற விதி பிறந்தது.





சினிமாக்காரர்களுக்கு 11 ஆயிரம் அடிக்குமேல் படம் எடுக்க அனுமதி இல்லை. செப்பு உலோக உற்பத்தி தடைப்பட்டதால், செப்புக் காசுகளில் ஓட்டை போட்டு செப்பின் பயன்பாட்டைக் குறைத்தனர்; ஓட்டைக் காலணாக்கள் பிறந்தன. மாத இதழ்களுக்கு காகிதம் வழங்குவது குறைக்கப்பட்டது அல்லது நிறுத்தப்பட்டது.




சென்னையில் விழுந்த குண்டு: இந்தியர்களைக் கேட்காமல் அவர்களைப் போரில் ஈடுபடுத்தியதை காந்தி கண்டித்தார். நேச நாடுகள், அச்சு நாடுகள் என இரண்டு தரப்புகளாக உலகம் பிரிந்து அப்போது




மோதிக்கொண்டது. நேச நாடுகளின் தலைமை பிரிட்டனிடம் இருந்தது. பிரிட்டன் அதன் காலனி நாடான இந்தியாவையும் போரில் ஈடுபடுத்தியது. ராஜாஜி தலைமையிலான சென்னை மாகாணம் உள்பட காங்கிரஸின் பல மாகாண அரசுகள் ராஜினாமா செய்தன.




'ஜப்பான் வருவானா?' என்கிற தலைப்பில் சிறு நூலை எழுதி அச்சமயம் அச்சம் போக்க வ.ரா. முயன்றார். ஜப்பான் வரமாட்டான் என்பது வ.ரா—வின் எண்ணம், கருத்து; இன்னும் தெளிவாகச் சொன்னால் ஆசை. ஆனால், ஜப்பான் ஒருநாள் வந்துவிட்டான். இத்தனை முன்னெச்சரிக்கைகள், களேபரங்களுக்கு இடையில் ஜப்பான் விமானம், 1943 அக்டோபர் 11 அன்று காக்கிநாடா, விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் குண்டை வீசிவிட்டுச் சென்றது; சென்னையிலும் தான். ஆனால், மூன்று நாள்கள் கழித்துத்தான் அது அறிவிக்கப்பட்டது; பெரிதாய் நஷ்டமில்லை.

இந்த வரலாற்றுத் துயரம், கலை—இலக்கியங்களில் மிகக் குறைவாகவே பதிவாகியிருக்கின்றது. 'பராசக்தி' படம் இரண்டாம் உலகப் போர், பர்மா பின்னணியில் உருவானது நினைவில் இருக்கலாம். பர்மாவிலிருந்து நடந்தே இந்தியா வந்த வெ.சாமிநாத சர்மா அதைப் பதிவாக்கியுள்ளார். பர்மாவிலிருந்து திரும்பிவந்த பலர் தமிழ்நாட்டுக்குள் பரவி வாழ்ந்தனர்.




அவர்கள் வீடு 'பர்மா வீடு' என்று அழைக்கப்பட்டது. 'பினாங்கு அம்மா' என்று ஒரு அம்மையார் எங்கள் ஊரில் வாழ்ந்தார். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் தங்கள் சொத்துக்களை அப்படியே விட்டுவிட்டு, தாய்நாட்டுக்குத் திரும்பினர். சொத்துக்களை மீட்பதற்கான முயற்சிகள் 80 ஆண்டுகளுக்குப் பின்னர், இன்னமும் தொடர்கின்றன.

போர் உதவி நிதி சேகரித்துப் பெரியார் கொடுத்தார். மக்களின் பணத்தில் வாங்கப்பட்ட விமானங்களுக்கு அந்தந்த ஊர்ப் பெயரைக்கூட அரசு வைத்தது. யுத்த சஞ்சிகை ஒன்றும் வெளிவந்தது. அவ்விதழிலும் வானொலியிலும் ஜப்பான் தொடர்பான எழுத்துகள், பேச்சுக்கள் அதிகம் இடம்பெற்றன. அத்தகைய ஒரு வானொலிப் பேச்சின் தலைப்பு 'டோக்கியோவின் பாதைகள்' — பி.டி.ராஜன் அந்த உரையை நிகழ்த்தினார். இரண்டாம் உலகப் போர் நினைவுகள் குறித்து, தமிழில் சிறு நூல்கள் வந்திருக்கக்கூடும்.

என்.டி.வரதாச்சாரி என்கிற மயிலாப்பூர் வக்கீல், தன் நாள்குறிப்பில் இரண்டாம் உலகப் போரின் தினசரி நிகழ்வுகளை எழுதி வந்துள்ளார்; 'காசி டைரி' என ஆங்கிலத்தில் அது நூலானது. எம்டன் வக்கீல் என்று புகழ்பெற்றவர் அவர். எம்டன் என்பது அப்பெயர் கொண்ட கப்பலிலிருந்து உயர் நீதிமன்றக் கட்டிடம் அருகே வீசப்பட்ட குண்டை நினைவு படுத்துவது. 'எம்டன்' முதல் உலகப் போரின் சென்னையின் நினைவுச் சின்னம்!


VARSHA™
தீபாவளி
வாழ்த்துக்கள்

# தொழில்

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்திரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே!

மண்ணெ டுத்துக் குடங்கள்செய் வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே!
எண்ணெய் பால்நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்!
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே!

பாட்டும் செய்யுளும் கோத்திடு வீரே!
பரத நாட்டியக் கூத்திடு வீரே!
காட்டும் வையப் பொருள் களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்துடு வீரே!
நாட்டி லேயறம் கூட்டிவைப் பீரே!
நாடும் இன்பங்கள் ஊட்டி வைப்பீரே!
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வ மாக விளங்குவிர் நீரே!



**மகாகவி சுப்பிரமணிய பாரதி**


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा



நேர்காணல்

# நினைவு

### எம்.ஜி.ஆருக்கு சினிமா வாய்ப்பு தந்த புகைப்படம்!


சோ தெலுங்கு திரைப்பட உலகத்தின் ஜாம்பவான் என்.டி.ராமராவ் இரவு இரண்டு மணிக்கு எடுத்த மேக் அப் டெஸ்ட் போட்டோ, எம்.எஸ்.சுப்புலட்சுமியின் முதல் திரைப்படத்தின் புகைப்படம் என பல அரிய புகைப்படங்களை எடுத்தவர் பழம்பெரும் புகைப்பட கலைஞர் நாகராஜராவ். தற்போது இவர் எடுத்தசினிமா புகைப்படங்களை அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகம், மானியம் கொடுத்து பாதுகாக்க முன்வந்துள்ளது.

யார் இந்த நாகராஜராவ்? இவரது புகைப்படங்களில் அப்படி என்ன சிறப்பு? அமெரிக்கப் பல்கலைக் கழகம் இவற்றின்மேல் ஏன் இவ்வளவு ஆர்வமாக உள்ளது?

1950களில் இருந்து 1980கள் வரை வெளியான பல தென்னிந்தியத் திரைப்படங்களுக்கு முழுநேர புகைப்பட கலைஞராக இருந்தவர் சென்னையை சேர்ந்த நாகராஜராவ்.

அவர் எடுத்த பல்லாயிரம் புகைப்படங்கள் மற்றும் நெகட்டிவ் தாள்களைப் பாதுகாக்க, அவரது மறைவுக்குப் பின்னர் அவரது மகன் பிரேம்நாத் ராவ் பலமுயற்சிகள் எடுத்தார். பல ஆயிரம் நெகட்டிவ்கள், போட்டோ பிரிண்ட்கள் காலப்போக்கில் கரையானுக்கு இரையாகின.

மீதுமுள்ள நெகட்டிவ் தாள்களை, பாதுகாப்பதற்கு இப்போது ஒரு தீர்வு கிடைத்துள்ளது. புதுச்சேரியில் உள்ள பிரெஞ்சு நிறுவனத்தின் புகைப்படப்








**பிரமிளா கிருஷ்ணன்**

பிரிவின் தலைவர் ரமேஷ் குமார், கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் 'அழிந்துவரும் கலாசார ஆவணங்களை பாதுகாக்கும்' திட்டத்தின் கீழ் ஒரு விண்ணப்பம் அனுப்பியிருந்தார். அதில், தென்னிந்தியாவின் திரைப்படங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை பாதுகாக்கும் திட்டம் தேர்வாகியிருந்தது.

மிகவும் அரிதான 1 லட்சம் புகைப்பட நெகட்டிவ்கள்

பாதுகாப்பு பணி தொடங்கிய ஒரு மாத காலத்தில் சுமார் ஒரு லட்சம் நெகட்டிவ் தாள்களை தூய்மை செய்து, பத்திரப்படுத்தும் பணிகள் நிறைவுபெற்றுள்ளன. மேலும், இரண்டு லட்சம் நெகட்டிவ் தாள்கள் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

நாகராஜராவின் புகைப்படங்களை பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து பிபிசி தமிழிடம் பேசிய ரமேஷ் குமார், "நாகராஜராவின் படங்கள் மிகவும் அரிதானவை. சுமார் 35 ஆண்டுகள் முழுநேரமாக திரைப்படங்களில் புகைப்படங்களை அவர் எடுத்துள்ளார்," என்றார்.




"அதுவும் தமிழ் சினிமாவின் ஒரு முக்கியமான காலகட்டத்தில் அவர் படம் எடுத்திருக்கிறார். வெறும் சினிமாவில்





எடுத்த படங்கள் என்று பார்க்காமல், இவரது சேகரிப்பில் உள்ள படங்கள் பலவும் வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் எவ்வாறு இருந்தன, அரசியல் தலைவர்களின் வாழ்க்கை எப்படி இருந்தது, அன்றைய சமூகஅமைப்பு, பொது இடங்கள் எவ்வாறு இருந்தன என்று துல்லியமாக காட்டுகின்றன," என விவரிக்கிறார்.

சென்னை எழும்பூர் பகுதியில் நகராஜராவ் வசித்த வீட்டில் ஒரு பகுதியை அவர் புகைப்பட ஸ்டுடியோவாக மாற்றியிருந்தார். அந்த வீட்டில் தொடர்ந்து வசித்துவரும் அவரது மகன் பிரேம்நாத், தந்தையுடன் பயணித்தவர். அவரது உதவியாளராக இருந்தவர். அவரது தந்தை எடுத்த பல புகைப்படங்களுக்கு பின்னால் நடந்த சுவாரசியமான தகவல்களை பிபிசி தமிழிடம் பகிர்ந்துகொண்டார்.

## 'என் தந்தை எடுத்த படம் எம்.ஜி.ஆருக்கு மிகவும் பிடித்திருந்தது'




எம்.ஜி.ஆரின் முதல் மேக் அப் டெஸ்ட் படம் பற்றி பேசிய பிரேம்நாத், 1947 — இல் சினிமாவுக்காகத் தனது முதல் படத்தை எம்.ஜி.ஆர் எடுத்துக்கொண்டார், என்கிறார்.


“'பைத்தியக்காரன்' என்ற படத்தில் நடிப்பதற்காக எடுத்த புகைப்படம் அது. இந்தப் புகைப்படத்திற்காகச் சுமார் இரண்டு மணிநேரம் எம்.ஜி.ஆர் ஸ்டுடியோவில் செலவிட்டார். என்.எஸ். கிருஷ்ணன் லட்சுமிகாந்தன் கொலை வழக்கு பிரச்னையில் சிறையில் இருந்து வெளியே வந்த நேரத்தில் தயாரிக்கப்பட்ட படம் பைத்தியக்காரன். இதில் என்.எஸ்.கே கேட்டுக்கொண்டதால் எம்.ஜி.ஆர் நடித்திருக்கிறார்," என்கிறார் பிரேம்நாத்.

''அவருடன் வந்த மேக் அப் ஆர்ட்டிஸ்ட் சிகை அலங்காரம் செய்தார். அப்போதெல்லாம் எம்.ஜி.ஆர் கதர் வேஷ்டி மற்றும் ஜிப்பா தான் அணிவார். அவருக்கு தாடை பகுதிக்கு கீழ் ஒரு தசை தெரியும். அது தெரியாமல் எடுக்கவேண்டும் என்பார்," என்கிறார் அவர்.

மேலும், “என் தந்தை எடுத்த படம் எம்.ஜி.ஆருக்கு மிகவும் பிடித்திருந்தது. பெரும்பாலான எம்ஜிஆரின் திரைப்படங்களுக்கும் என் தந்தைதான் புகைப்படம் எடுத்திருக்கிறார். முதல்வராக ஆன பின்னர், பல செய்தித்தாளில் பணியாற்றும் புகைப்படக்காரர்களிடம் நாகராஜராவ் எடுப்பதுபோல என்னை படம் எடுங்கள் என சொல்லியிருக்கிறார்," என நினைவுகூருகிறார் பிரேம்நாத்.


KODAK SAFETY FILM






முகராசி

நடித்திருந்தார். ஒரு சில காட்சிகள், மீண்டும் படமாக்க வேண்டிய சூழலும் ஏற்பட்டது, என்கிறார் பிரேம்நாத்.

ரிக்ஷாக்காரன் ஷூட்டிங் பார்க்க குவிந்த உண்மையான ரிக்ஷாக்காரர்கள்

இந்த படம் 1971ல் வெளிவந்த ரிக்ஷாக்காரன் படத்தை விளம்பரப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட புகைப்படம் இது. இந்த படத்தில் ரிக்ஷாக்காரனாக நடிப்பதற்காக எம்.ஜி.ஆர் ஒரு சைக்கிள் ரிக்ஷா வாங்கி ஓட்டிப் பயிற்சி எடுத்தார்.

சில காட்சிகள் சென்னை அண்ணாநகர் பகுதியில் படமாக்கப்பட்டபோது, சென்னையில் இருந்த நூற்றுக்கணக்கான ரிக்ஷாக்காரர்கள் அங்கு குவிந்துவிட்டார்கள். அந்தப் படம் மாபெரும் வெற்றியைப் பெற்றது. நடிகை மஞ்சுளாவின் முதல் படம் இது. இந்த படத்தின் விளம்பர போஸ்டரை பலரும் விரும்பி சேகரித்தனர், என்கிறார் பிரேம்நாத் .



சிவாஜிக்கே சவால்விட்ட பானுமதி

மிகவும் புகழ் பெற்ற நடிகையாக திகழ்ந்த பானுமதி நடித்த ‘ராணி லலிதாங்கி’ திரைப்படத்தில், அவரது கதாபாத்திரம் இளவரசனுக்காகக் காத்திருக்கும் காட்சிக்காக எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

1957—இல் இந்த படம் வெளியான இப்படத்திற்கு முதலில் எம்.ஜி.ஆர் நடிப்பதாக முடிவு செய்யப்பட்ட சில காட்சிகள் எடுக்கப்பட்டன.

பின்னர், இந்தப் படத்தில் சிவாஜிதான் கதாநாயகனாக நடித்தார். இந்த படம் எடுக்கப்பட்ட சமயத்தில், பலமுறை ரிகர்சல் பார்க்கும்போது, இயக்குநர் சொல்லும் விதத்தில் நடித்து காட்டும் பானுமதி, உண்மையான காட்சி படமாக்கப்படும் நேரத்தில், தனது நடிப்பை வேறுவிதத்தில் வெளிப்படுத்துவதை வழக்கமாக வைத்திருந்தார்.




அதனால், இந்த படத்தில் பல காட்சிகளில், சிவாஜிக்கு சவால் விடும் விதத்தில் பானுமதி

சிவாஜியை கம்பீரமாக காட்டும் புகைப்படம்

மகாகவி காளிதாஸ் படத்தில் ‘கலைமகள் எனக்கு ஒரு ஆணையிட்டாள்’ என்ற பாடல் படமாக்கப்பட்ட போது எடுத்த புகைப்படம் இது.

இந்தப் பாடலில் சிவாஜி அணிந்துள்ள ஆடை மற்றும் அணிகலன்கள் மூலமாக அவரின் தோற்றம் புகழ்பெற்ற கவிஞர் என்று காட்டுவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. அவரின் அலங்காரத்திற்கு முக்கியத்துவம் தரவேண்டும், அதேநேரம், அவர் அமர்ந்துள்ள இடத்திற்கு பின்புறம் உள்ள செட் தனியாக தெரியவேண்டும் என்பதற்காக நான்கு நபர்கள் முழு வெள்ளை உடையில் நிறுத்தப்பட்டார்கள். மிக கம்பீரமாக அவர் காட்சியளிக்கும் விதத்தில் எடுக்கப்பட்ட படம், என்கிறார் பிரேம்நாத்.

ஜெயலலிதாவின் அபாரமான நடிப்பு

1967—இல் வெளியான ‘அரச கட்டளை’

படப்பிடிப்பின்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. 'என்னைப் பாட வைத்தவன் ஒருவன்' என்ற பாடலை ஜெயலலிதா பாடும் காட்சியின்போது எடுக்கப்பட்டது.

இத்திரைப்படத்தில், துணை நடிகையாக நடித்திருந்த போதும், ஒரு கிராமத்துப் பெண் வேடத்தில் தனது நடிப்பை வெகுசிறப்பாக வெளிப்படுத்தியிருப்பார் ஜெயலலிதா. இந்தப் படத்திற்கு பின்னர், அவர் லண்டனில் ஒரு நாட்டிய நிகழ்வில் கலந்துகொள்ள முடிவு செய்திருந்தார். ஆனால் ஏதோ சில காரணங்களால் அவர் அதில் கலந்துகொள்ளவில்லை. ஆனால் இந்தப் படத்திற்கு பின்னர் ஜெயலலிதா தான் தொடர்ந்து பல படங்களில் எம்.ஜி.ஆருடன் கதாநாயகியாக இணைந்து நடித்தார்.



அமெரிக்கர் இயக்கிய தமிழ்ப் படம்

எம்.எஸ்.சுப்புலட்சுமி 'மீரா' திரைப்படத்திற்காக எடுக்கப்பட்டப் புகைப்படம் இது.

அதில் மிகப்புகழ்பெற்ற 'காற்றினிலே வரும் கீதம்' என்ற பாடல் காட்சி இது. 1945—இல் வெளியான இந்தத் திரைப்படத்தை இயக்கியவர் எல்லிஸ் ஆர். டங்கன். அமெரிக்கரான இவர், தனது இந்திய நண்பர் மாணிக்லால் டாண்டன் என்பவருடன் திரைப்படம் இயக்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்தார்.

தமிழில் மீரா படத்தை டங்கன் எடுப்பதாக முடிவானது. இவருக்குத் தமிழ் மொழி தெரியாத போதும், அத்திரைப்படத்திற்கு ஸ்டில் புகைப்படக் கலைஞராக இருந்த நாகராஜராவின் ஆங்கில அறிவு அவருக்கு மிகவும் உதவியது. தமிழ் கலாச்சாரம், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் குறித்து நாகராஜராவிடம் டங்கன் கேட்டுத் தெரிந்துகொண்டார். இந்தப் படம் மகத்தான வெற்றி பெற்றதையடுத்து, இந்தியிலும் இதே படத்தை டங்கன் இயக்கினார்.

கண்ணகியின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் புகைப்படம்

பூம்புகார் படத்தில் விஜயகுமாரி கோவலனை இழந்த கண்ணகியாக வசனம் பேசும் காட்சி இது.

1964—இல் இப்படம் வெளியானது. மிகவும் உணர்ச்சிப்பூர்வமான காட்சியின் புகைப்படம் இது. இந்தப்புகைப்படம்பலஇடங்களில்திரைப்படத்தின் விளம்பரப் படமாகக் காட்சிப்படுத்தப்பட்டது. கோவம், இழப்பு, பரிதவிப்பு எனப் பலவிதமான உணர்வுகளை விஜயகுமாரி இதில் வெளிப்படுத்தவேண்டும் என்பதால், மிகுந்த கவனத்துடன் எடுக்கப்பட்டது.




இந்தத் திரைப்படத்தின் திரைக்கதையை எழுதியவர் முன்னாள் தமிழக மு.கருணாநிதி. இந்தப் புகைப்படத்தில் உள்ள உடையலங்காரத்தில்தான் சென்னை மெரினா கடற்கரையில் உள்ள கண்ணகி சிலை அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

புலியுடன் சண்டையிட்ட எம்.ஜி.ஆர்

நடன கலைஞரான இ.வி.சரோஜா நடித்த 'குலேபகாவலி' படத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

இதில் எம்.ஜி.ஆர் கதாநாயகனாக நடித்துள்ளார். இந்தப் புகைப்படத்தில் உள்ள சரோஜாவின் படம் மற்றும் எம்.ஜி.ஆரின் படம் ஒன்றும் சித்திரவேலைப்பாடுகள் செய்யப்பட்டு விளம்பர போஸ்டர் மற்றும் துண்டுப் பிரசுர விளம்பரமாக அளிக்கப்பட்டன.

இதே படத்தில் எம்.ஜி.ஆர். புலியுடன் சண்டையிடும் காட்சி ஒன்றும் படமாக்கப்பட்டது. அந்தக் காட்சி படமாக்கப்பட்ட நேரத்தில்,

பழக்கப்பட்ட புலியாக இருந்தாலும், எம்.ஜி.ஆர் மிகவும் கவனமாக அந்த காட்சிகளில் நடித்தார். குறைந்தது எட்டு முதல் பத்து உதவியாளர்கள் அந்த காட்சி படமாக்கப்பட்ட சமயத்தில் பிரம்புகளுடன் நிற்க வைக்கப்பட்டிருந்தார்கள்.

அந்தக் காட்சியில் எம்.ஜி.ஆர் அணிந்த உடையின் முதல் பகுதி தடிமனான இரும்பு போர்வை போல இருக்கும். அதற்கு மேல் தோல் பட்டையைக்கொண்ட கெட்டியான துணி அணிந்திருந்தார். திரைப்படத்தில் பிரம்பு வைத்துள்ள உதவியாளர்கள் தென்படாதவாறு காட்சிகள் படமாக்கப்பட்டன.

‘அன்பே வா’ படத்தைவிட அதிகம் பேசப்பட்ட படப் போஸ்டர்



1981—இல் நடித்த ஸ்ரீ மத் வி ர த் வீ ர பி ர ம் மே ந் தி ர சுவாமி சரித்ரா என்ற திரைப்படத்திற்காக எடுக்கப்பட்ட மேக்அப் டெஸ்ட் படம் இது, என்கிறார் பிரேம்நாத்.

அதைப்பற்றி மேலும் பேசிய அவர், “இந்த மேக்—அப் செய்ய குறைந்தபட்சம் ஒரு மணிநேரத்திற்கு மேல் ஆனது. அவர் அந்த சமயத்தில் தெலுங்கு மற்றும் தமிழில் பல படங்களில் நடித்துக்கொண்டிருந்தார். மேலும் அரசியல் தளத்தில் நுழைந்த நேரம் என்பதால் அதிக பணிச்சுமை அவருக்கு இருந்தது. இந்த படம் அதிகாலை இரண்டு மணிக்கு எடுக்கப்பட்டது,” என்கிறார் பிரேம்நாத்.

ஒருகாலத்தில் சென்னையில் மிகவும் பிரசித்திபெற்ற திரையரங்கமாக விளங்கிய கேசினோ திரையரங்கத்தில் முகராசி படம் திரையிடப் பட்டது. 1966—இல் அந்த படத்தின் விளம்பரத்திற்காக, ஏரோக்ராப் என்று சொல்லப்படும், பெரிய அளவிலான படங்கள் பிரிண்ட் செய்யப்பட்டன. இந்தத் திரைப்படம் இரண்டே வாரங்களில் எடுத்துமுடிக்கப்பட்ட படம் என்ற சிறப்பைப் பெற்றது.

இந்தத் திரைப்படம் வெளியான அதே சமயத்தில், எம்.ஜி.ஆரின் மற்றொரு படமான ‘அன்பே வா’ படமும் வெளியாகியிருந்தது. ஆனால் முகராசி படத்தின் போஸ்டர்கள் ஏரோக்ராப் வகை போஸ்டருக்காக அதிகம் பேசப்பட்டது. ரசிகர்கள் படம் திரையிடுவதற்கு ஒரு மணிநேரத்திற்கு முன்னரே வரிசையாக நின்று போஸ்டரை பார்த்து கதையை பற்றி பேசுவார்கள், என்கிறார் பிரேம்நாத்.




சென்சார் பிரச்னையில் சிக்கிய என்.டி.ராமராவ் படம்

“ஸ்ரீமத்விரத் வீரபிரம்மேந்திர சுவாமி சரித்ரா திரைப்படம் 1981—இல் எடுக்கப்பட்டாலும், சென்சார் போர்டு சில காட்சிகளை நீக்கவேண்டும் எனக் கூறியது. இந்தப் படத்தை அவரே தயாரித்திருந்தார் என்பதால், நீதிமன்றம் சென்று வெளியிட உத்தரவை பெற்று, எந்த காட்சிகளையும் நீக்காமல் 1984ல் படத்தை வெளியிட்டார்,” என்கிறார் அவர்.

தெலுங்கு, தமிழில் ஒரே நேரத்தில் எடுக்கப்பட்ட படம்

1963—இல் வெளியான ‘லவகுசா’ என்ற படத்தில் என்.டி.ஆர், ராமனாக நடித்த படத்தில் எடுக்கப்பட்டப் புகைப்படம் இது.

இந்தப் படம் ஒரே சமயத்தில் தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகளில் எடுக்கப்பட்டது. அந்த செட்டில், தமிழ் மற்றும் தெலுங்கு மொழியில், அடுத்தடுத்து ஒரே காட்சிகள் படமாக்கப்பட்டன. இந்த கட்சியில் ராமன் சீதையை காட்டுக்கு அனுப்புவதா அல்லது அரசன் என்ற பதவியை துறப்பதா என்ற ஆலோசனையில் இருக்கும்போது எடுக்கப்பட்ட புகைப்படம். படத்தில் முக்கியமான காட்சி இது என்கிறார் பிரேம்நாத்.

என்.டி.ராமராவ்


வாடகை ரிக்ஷாக்கள்
நிற்குமிடம்
பன்னீர் செல்வம் சைக்கிள் ரிக்ஷா நிலையம்
கட்டணவிபரம்
விதிமுறைகள்
மயிலாப்பூர்







# பந்தயம்

## அன்டன் செகாவ்

The Bet- **தமிழில்: க.ரகுநாதன்**

பனி பொழியும் ஓர் இரவில் தனது படிப்பறையில் இங்கும் அங்கும் உலவிக் கொண்டிருந்தார் அந்த வங்கி அதிபர். 15 ஆண்டுகளுக்கு முன் இதே போன்றதொரு நாளின் பொன் மாலைப் பொழுதில் அவர் அளித்த விருந்தில் நடந்த சம்பவம் மனதில் நகர்ந்து கொண்டிருந்தது. அப்போது அந்த அறையில் இருந்த அறிவிற் சிறந்த இளைஞர்களுடன் ஆர்வத்தைத் தூண்டும் உரையாடல் நடந்தது. பல விஷயங்களைப் பேசிய அவர்கள் ஒரு கட்டத்தில் மரண தண்டனை குறித்தும் தங்களது உரையாடலில் விவாதித்தனர்.


விருந்துக்கு வந்திருந்த பெரும்பாலானோரில் பத்திரிகையாளர்களும், மெத்தப் படித்த கனவான்களும் மரண தண்டனை அளிப்பதை நிராகரித்தனர். இம்மாதிரியான தண்டனை நீதி நெறியற்றது, காலத்திற்கு ஒவ்வாதது, பழம் பஞ் சாங்கம், ஒரு கிறிஸ்தவ நாட்டிற்கு ஏற்புடையது அல்ல என்று வாதிட்டார்கள். இன்னும் சிலரோ, எங்கெல்லாம் மரண தண்டனை விதிக்க இடமிருக்கிறதோ அங்கெல்லாம் ஆயுள் தண்டனை அளிக்கப்பட





வேண்டும் என்று ஆவேசப்பட்டார்கள்.

‘உங்கள் வாதத்தை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்’ என்றார் அந்த வங்கி அதிபர். ‘ஆயுள் தண்டனையோ, மரண தண்டனையோ இதுவரை நான் அடைந்ததில்லை. ஆனால் ஒரு நீதிபதியின் இடத்தில் இருந்து பார்த்தால் ஆயுள் தண்டனையை விட மரண தண்டனையே மிகவும் அறம் சார்ந்தது, நீதி நெறிமிக்கது. மரண தண்டனை ஒருவனை உடனடியாகக் கொல்கிறது. ஆனால் ஆயுள் தண்டனையோ கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்கிறது. ஒரு மனுஷனை சில நிமிஷத்தில் கொல்வது நல்லதா அல்லது சிறிது சிறிதாக வாழ்க்கை முழுவதும் சாகடிக்கிறது நல்லதா. இதில் எது மனித நேயம் மிக்கது?’

‘இரண்டுமே நீதியற்றது, மனித நேயமில்லாதது’ என்றார் ஒரு விருந்தினர். இரண்டு தண்டனைகளின் நோக்கமும் வாழ்வை ஒருவனிடம் இருந்து எடுத்துக் கொள்வதுதான். அரசாங்கம் என்பது கடவுள் அல்ல. அரசாங்கத்தால் ஓர் உயிரைக் கொடுக்க முடியுமா. நிச்சயமா முடியாது. அதனால அதுக்கு ஓர் உயிரை எடுக்கிற உரிமையும் இல்லை’ என்றார்.





வந்திருந்த விருந்தினர்களில் ஓர் இளம் வழக்கறிஞரைப் பார்த்து அவரது கருத்து என்ன என்று கேட்டோம்.

‘இரண்டுமே மனித நேயமற்றது. ஆனால் ஆயுளா அல்லது மரணமா என்று கேட்டால் நான் ஆயுள் தண்டனையையே தேர்வு செய்வேன். ஏன்னா, சாகறத விட எப்படியாவது உயிரோட இருக்கிறது நல்லது தானே’ என்றார்.

விவாதம் உச்சத்தை அடைந்தது. அப்போது வங்கி அதிபர் மிக இள வயதினராக இருந்ததால் பெரும் மன எழுச்சி கொண்டு உணர்ச்சி வேகத்தில் இருந்தார்.

‘இதுல கொஞ்சம் கூட உண்மையில்லை. உங்களால் தனிமைச் சிறையில் ஒரு 5 வருஷங்கள் கூட இருக்க முடியாதுங்கிறேன். பாக்கலாமா? என்ன பந்தயம்? 2 மில்லியன் ரூபிள் பந்தயம். ஓகேவா?’ உணர்ச்சி வேகத்தில் டேபிளை ஓங்கித் தட்டினார் வங்கி அதிபர்.

‘நீங்க நிஜமாத்தான் சொல்றீங்கன்னா, உங்க பந்தயத்துக்கு நான் தயார். ஆனால் 5 வருஷமில்ல 15 வருஷத்துக்கு நான் ரெடி’ என்றார் இளம் வழக்கறிஞர்.

’15 வருஷமாஞ்அப்படின்னா நானும் ரெடி. ஜென்டில்மென் இதோ 2 மில்லியன் கொடுக்க நான் ரெடி’ இப்போதே வெற்றி பெற்றது போல் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தார் அதிபர்.

‘ஒப்புக்கிறேன். நீங்க உங்க பணத்தை பந்தயம் கட்டுங்க. நான் என் சுதந்திரத்தை பந்தயமா கட்டுறேன்’ வக்கீலும் ஆவேசமானார்.




இந்த முட்டாள்தனமான பந்தயம் துவங்கியது. மில்லியன் ரூபிள்களை எடுத்து வைத்த வங்கி அதிபர் இரவு விருந்தின் போது அந்த இளம் வழக்கறிஞரை சீண்டினார்.

‘இப்பவும் ஒன்னும் கெட்டுப் போகல. நல்லா யோசிச்சு முடிவு செய்யுங்க தம்பி. எனக்கு 2 மில்லியன் ரூபிள் சும்மாஞ் ஒன்னுமே இல்லை. ஆனா உங்களுக்கு வாழ்க்கையோட 3, 4 சிறந்த வருஷங்கள் வீணாப் போயிரும். நான் மூனு நாலுன்னு ஏன் சொல்றேன்னா அதுக்கு மேல உங்களால தனிமை சிறையில இருக்க முடியாதுன்னு எனக்குத் தெரியும். அதனால அப்படி சொல்றேன். அதே மாதிரி கட்டாயமா சிறைக்குள்ள இருக்கிறது வேற. நீங்களே விரும்பி தனிமைச் சிறைக்குள்ள அடைஞ்சுக்கிறது வேறங்கிறது புரிஞ்சுக்குங்க தம்பி. அது ரொம்ப கஷ்டமானது. எந்த நிமிஷத்திலாவது நீங்க சிறையிலிருந்து வெளிய போயிருவோம்டா சாமீ என்று நினைத்தாலும் மொத்த சிறைக் காலமும் உங்களுக்கு ரொம்ப வேதனை தருவதாக மாறிடும். ஞாபகம் வச்சுக்குங்க. பாவம் நீங்க’ என்றார் அதிபர்.

அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்த வங்கி அதிபர் நினைத்துக் கொண்டார். ‘இந்தப் பந்தயத்தின் நோக்கம் என்ன?


அந்த மனுஷன் 15 வருஷத்தை இழப்பதும், நான் 2 மில்லியனைத் தூக்கி வீசுவதும் எதற்காக? மரண தண்டனையை விட ஆயுள் தண்டனை நல்லது என்பதை இந்தப் பந்தயம் நிரூபிக்குமா? இல்லை. இது எல்லாமே அர்த்தமற்றது. முட்டாள்தனம். எனக்கு ஒரு இளைஞனின் வாழ்க்கையில் விளையாடக் கிடைத்த சந்தர்ப்பம். அவனுக்கு கஷ்டப்படாமல் கிடைக்கும் பணத்தின் மீது பேராசை. அதுதான் இதுக்கு எல்லாம் அர்த்தம்.'

அவரது சிந்தனை கடந்த காலத்துக்கும் நிகழ் காலத்துக்கும் ஊடாடிக் கொண்டிருந்தது. அந்த மாலைப் பொழுதில் நடந்தவை நினைவிலிருந்து தூசி போல உதிர்ந்தன.



வங்கியாளரின் தோட்டத்தில் உள்ள பங்களாவில் கண்காணிப்பு நிறைந்த ஓர் அறையில் அந்த இளைஞர் தனது சிறைவாசத்தை துவங்குவது என முடிவு செய்யப்பட்டது. 15 வருடங்களுக்கு எந்த மனிதரையும் பார்க்கக் கூடாது, மனிதக் குரல்களைக் கேட்கக் கூடாது, வெளியிலிருந்து எந்த கடிதமும் பெறவோ, செய்தித் தாளோ படிக்கக் கூடாது என்று விதிமுறைகள் வகுக்கப்பட்டது. ஆனால் குடிக்கலாம், புகைக்கலாம், புத்தகம் படிக்கலாம், கடிதம் எழுதலாம், இசைக் கருவி வாசிக்கலாம். வெளியுலகுடன் அவருக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட ஒரே தொடர்பு சிறிய சாளரம் மட்டுமே. அது பந்தயத்தின் விதிமுறை. அவருக்குத் தேவையான மது, சுருட்டு, புத்தகம், இசைத்தட்டு என்று எதையும் ஒரு சிறிய சீட்டில் எழுதி அனுப்பலாம். அவற்றை அந்த சிறிய சாளரத்தின் வழியாக மட்டுமே பெற முடியும்.

அந்த ஒப்பந்தத்தின் ஒவ்வொரு வரியும் மிக நுணுக்கமாக எழுதப்பட்டிருந்தது. நவம்பர் 14, 1870— ம் ஆண்டு நள்ளிரவு 12 மணிக்குத் துவங்கி நவம்பர் 14, 1885— ம் ஆண்டு நள்ளிரவு 12 மணிக்கு கடுங்காவல் மிகுந்த தனிமைச் சிறைவாசம் முடிகிறது. இந்த விதிமுறைகளை மீறுவதற்கு அந்த இளைஞர் செய்யும் மிகச் சிறிய முயற்சி கூட பந்தயத்தில் தோல்வியடைந்ததைக் குறிக்கும். கடைசி நாளில் கடைசி 2 நிமிடங்கள் இருக்கும் போது கூட அவர் விதியை மீறினால் வங்கியாளருக்கு 2 மில்லியன் ரூபிள் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படாது என்பதும் ஒரு விதி.






சிறைவாசத்தின் முதலாண்டில், தனிமையும் மன அழுத்தமும் அந்த இளைஞரை வாட்டி வதைக்கின்றன என்பதை அவர் எழுதி அனுப்பிய சிறு குறிப்புகள் மூலம் உணர்ந்தேன். அவரது அறையிலிருந்து பியானோவின் இசையொலி இரவும் பகலும் கேட்டுக் கொண்டே இருந்தது. புகையிலையையும், ஒயினையும் அவர் மறுத்துவிட்டார். ஒயின் ஆசையை அதிகரிக்கிறது. ஆசையே ஒரு கைதிக்கு மிகப் பெரும் துன்பமிழைக்கும் எதிரி. குடிப்பதும் மற்றவர்களைப் பார்ப்பதையும் விட மிகத் துன்பமான செயல் இல்லை. சுருட்டுப் பிடித்தால் அந்த அறையில் எழும் புகையால் காற்று மாசடைந்துவிடும். அதனால் அதுவும் வேண்டாம் என்று அந்த இளைஞர் ஒதுக்கினார். முதல் வருடத்தில் எளிமையான காதல் கதைகள் கொண்ட நாவல்கள், புத்தகங்கள், வீரதீர சாகசக் கதைகள் கொண்ட புத்தகங்களைப் படித்தார்.

இரண்டாம் ஆண்டில் அந்த அறையிலிருந்த பியானோ அமைதியாக இருந்தது. அந்த சிறைவாசி தனக்கு செவ்வியல் இலக்கியங்கள் வேண்டும் என்று கேட்டுப் பெற்றார். இப்படியே நாட்கள் நகர்ந்தன. ஐந்தாவது வருடத்தில் அந்த அறையில் மீண்டும் பியானோ இசைத்தது. குடிப்பதற்கு ஒயின் பெற்றுக் கொண்டார். அவரைப் பற்றி அறிந்தவர்கள், அந்த இளைஞர் அறையில் எந்நேரமும் ஒன்றும் செய்யாமல் இருக்கிறார் என்றும், சாப்பிடுவது, தூங்குவது, குடித்துக் கொண்டு, கோபமாக தனக்குத் தானே கத்திக் கொண்டும் இருப்பதாக நினைத்துக் கொண்டார்கள். எந்தப் புத்தகத்தையும் படிக்கவில்லை. இரவு முழுவதும் ஏதாவது எழுதிக் கொண்டிருந்தார். பின்னர் விடிகாலையில் அவற்றைக் கிழித்து எறிந்தார். ஓரிருமுறை அவர் அழுததும் கேட்டது.

ஆறாவது ஆண்டின் பிற்பகுதியில் அந்த இளைஞர் புதிய மொழிகளையும், தத்துவம், வரலாறு

ஆகியவற்றையும் வெறி கொண்டது போலப் படிக்கத் தொடங்கினார். அடுத்த நான்கு ஆண்டுகளில் 600 புத்தகங்களை அவர் படித்து முடித்தார். வங்கி அதிபர் தேடித் தேடி அந்தப் புத்தகங்களை அவருக்காக வாங்க வேண்டியிருந்தது. அந்தக் கால கட்டத்தில் வங்கியாளருக்கு ஒரு கடிதத்தை சிறைவாசி அனுப்பினார்.



'மை டியர் ஜெயிலர், நான் இந்தக் கடிதத்தை ஆறு மொழிகளில் எழுதியுள்ளேன். அந்த மொழிகளைத் தெரிந்தவர்களிடம் கொடுத்துப் படிக்கச் சொல்லுங்கள். அதில் ஒரு பிழை கூட இல்லையென்றால் உங்கள் தோட்டத்தில் நின்று வானை நோக்கி துப்பாக்கியால் ஒரு முறை சுடுங்கள். அதன் மூலம் நான் எழுதியது சரிதான் என்றும் எனது உழைப்பு வீணாகவில்லை என்றும் அறிந்து கொள்வேன். வரலாற்றின் பக்கங்களில் வாழ்ந்த எந்தவொரு அறிவாளியும் பல்வேறு மொழிகளைத் தெரிந்திருக்கிறார்கள். அவற்றை நான் புரிந்துகொள்ளும் போது எனது ஆன்மா எவ்வளவு ஆனந்தம் அடைகிறது என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.'

சிறைவாசியின் ஆசை நிறைவேற்றப்பட்டது. வங்கி அதிபர் தோட்டத்தில் இருமுறை சுட உத்தரவிட்டார்.

பத்தாம் ஆண்டில் அவர் ஓரிடத்தில் அமர்ந்து நற்செய்தியை மட்டுமே படித்துக் கொண்டிருந்தார். ஒரு சில வருடங்களில் 600 புத்தகம் படித்த ஒருவர் ஓராண்டை அமைதியாகக் கழித்தது வியப்பாக இருந்தது வங்கி அதிபருக்கு. அதற்குப் பின் இறையியலும், மதங்களின் வரலாறும் பற்றிய புத்தகங்களைப் படித்தார்.

கடைசி இரண்டு வருடங்களில் ஏராளமான நூல்களை வகை தொகை இல்லாமல் வாசித்தார். ஒரு சமயம் இயற்கை அறிவியல் நூல்களை வாசித்தவர், சில சமயம் பைரன், ஷேக்ஸ்பியர் நூல்களை கேட்டார். வேதியியல், மருத்துவம், நாவல், தத்துவம், இறையியல் ஆகிய நூல்களை வாசித்து தீர்த்தார். கடலில் உடைந்து போன கப்பலில் இருந்து சிதறிய கட்டைகளை ஒவ்வொன்றாய் பிடித்து உயிர் தப்ப நினைக்கும் ஒரு மனிதனைப் போல புத்தகங்களை படித்துக் கொண்டே இருந்தார் அந்த தனிமை சிறை இளைஞர்.

நினைவுகளினூடே மிதந்து கொண்டிருந்தவர் சட்டென்று நின்றார். நாளை 12 மணிக்கு அந்த இளைஞன் தனது சுதந்திரத்தை பெற்று விடுவான். ஒப்பந்தப்படி நான் அவனுக்கு இரண்டு மில்லியன் ரூபிள்களை கொடுத்தாக வேண்டும். அப்படி கொடுத்தால் அதோடு நான் திவால் தான். எல்லாம் அதோடு முடிந்துவிடும் என்று நினைத்தார்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் அவரிடம் எண்ண முடியாத அளவு பணம் இருந்தது. ஆனால் இன்று, கடன் அதிகமா சொத்து அதிகமா என்று தனக்கு தானே கேள்வி எழுப்பக் கூட அவருக்கு அச்சமாக இருந்தது. வெறித்தனமாக பங்குச் சந்தையில் சூதாட்டம் போல ஈடுபட்டதும், கண்மூடித்தனமான ஊக வணிகத்தில் இருந்து வெளியே வரக்கூட முடியாத சூழலும் அவருடைய சொத்துகளை கொஞ்சம் கொஞ்சமாக கரைத்தன. பெருமை கொண்ட நெஞ்சமும், அச்சமின்மையும், தன்னம்பிக்கையும் கொண்ட வங்கியாளர் தனது முதலீடுகள் ஒவ்வொரு முறை ஏறும்போதும், இறங்கும்போதும் பெரும் நடுக்கம் அடைந்தார்.




"நாசமாய் போன பந்தயம்ஞ்" என்று மனம் தளர்ந்து தலையில் கை வைத்து அமர்ந்தார் அந்த வயோதிகர். "அந்த இளைஞன் ஏன் சாகவில்லை?. அவனுக்கு நாற்பது வயதுதான் ஆகிறது. என்னிடமிருக்கும் கடைசி பணம் வரை அவன் வாங்கிக் கொண்டு, நல்ல பெண்ணாகப் பார்த்து திருமணம் செய்து கொள்வான். வாழ்க்கையை அனுபவிப்பான். பங்கு சந்தையில் விளையாடுவான். அதே நேரம் நான் அவனை பொறாமையோடு ஒரு பிச்சைக்காரனை போல பார்த்துக் கொண்டிருப்பேன். 'எனது வாழ்வின் மாபெரும் மகிழ்ச்சிக்கு நீங்கள் தான் காரணம். நான் உங்களுக்கு உதவட்டுமா' என்று என்னை பார்த்து

ஒவ்வொரு நாளும் அவன் கேட்பான். அய்யோ இது நடக்கக் கூடாது. அவமானத்திலிருந்தும் திவால் ஆவதில் இருந்தும் நான் தப்பிக்க இருக்கும் ஒரே வழி அந்த இளைஞனின் மரணம் தான்.”

மணி மூன்றடித்தது. அந்த வீட்டில் எல்லோரும் ஆழ்ந்து உறங்கி கொண்டிருந்தனர். வெளியே பனிக் காற்றுக்கு மரங்களின் அசைவோசை மட்டுமே கேட்டுக் கொண்டிருந்தது. பதினைத்து ஆண்டுகளாக பெட்டியில் பூட்டி வைத்திருந்த சாவியை சத்தமில்லாமல் எடுத்து கோட் பாக்கட்டில் வைத்துக் கொண்டு வீட்டிலிருந்து வெளியேறினார் வங்கியாளர்.

தோட்டத்தில் கும்மிருட்டும் குளிரும் ஒரு சேர இருந்தது. தோட்டத்தை நோக்கி ஊளையுடன் வந்த காற்று மரங்களை ஓய்வு எடுக்க விடாமல் அசைத்துக் கொண்டிருந்தது. கண்களை கசக்கிக் கொண்டு பார்த்தபோதும் தோட்டத்தில் இருந்த வெள்ளை நிற சிலையோ, மரங்களோ, விடுதியோ, சிறைவாசியின் இருப்பிடமோ கண்களுக்குப் புலப்படவில்லை வங்கி அதிபருக்கு. அந்தக் கட்டடத்தின் அருகே சென்று இருமுறை குரல் எழுப்பியும் காவலாளி எந்த பதிலும் அளிக்கவில்லை. அடிக்கும் குளிரில் இந்தக் கட்டடத்தின் சமையலறையிலோ அல்லது ஏதோவொரு மூலையிலோ காவலாளி உறங்கிக் கொண்டிருக்கக் கூடும் என்று நினைத்துக் கொண்டார்.

‘எனது திட்டத்தை செயல்படுத்தினால் முதலில் காவலாளி மீதுதான் சந்தேகம் எழும்’ என்று நினைத்துக் கொண்டார் அந்த வயோதிகர்.

அந்த இருளில் தட்டுத் தடுமாறி தனிமை சிறை உள்ள விடுதியின் மாடிப் படிகளை கண்டு கொண்டார். உள்ளே சென்று ஒரு தீக்குச்சியை உரசினார். அங்கே ஆளரவமற்று இருந்தது. அந்த இளைஞர் உள்ள அறை கதவு பூட்டப்பட்டு வைக்கப்

பட்டிருந்த சீல் எந்த சேதமும் அடையாமல் அப்படியே இருந்தது. தீக்குச்சி அணைந்ததும் நடுக்கத்துடன் அந்த அறையின் சாளரத்தின் வழியே அவர் எட்டிப் பார்த்தார். உள்ளே ஒரு சிறிய மெழுகுவர்த்தி மெலிதாக எரிந்து கொண்டிருந்தது.




சாளரத்தை கை விரலால் தட்டினார். இளைஞரிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை. அசைவுமில்லை. கதவின் பூட்டிலிருந்த முத்திரையை கவனமாக உடைத்து அதில் சாவியை நுழைத்தார். துரு ஏறியிருந்த பூட்டு கிறீச்சிட்டபடி திறந்தது. கதவை திறந்தபோது அந்த விடுதியில் சத்தம் எழுப்பியது. கதவை திறந்தால் பெரும் சத்தம் அந்த இளைஞரிடமிருந்து எழும்பும் என்று நினைத்த வங்கியருக்கு ஏமாற்றமே மிஞ் சியது. எப்போதும் போல் அந்த அறை மௌனமாக இருந்தது. கதவு திறந்து மூன்று நிமிடங்கள் ஆகியும் எந்த சத்தமும் இல்லாததால் தைரியத்தை வரவழைத்தபடி உள்ளே சென்றார்.

அங்கிருந்த மேசையின் மீது தலை வைத்து உட்கார்ந்திருந்த அந்த இளைஞர் உடல் எலும்பை சுற்றி வைத்த போர்வை போலிருந்தது. நீண்ட முடியுடன் தாடியுடனும் வெளிறிய முகத்துடனும் காணப்பட்டார். கன்னங்கள் குழி விழுந்து, எலும்பும் தோலுமாக, நைந்து கிடந்த அந்த இளைஞரை பார்க்க பயங்கரமாக இருந்தது. வெளுத்த தலை முடியையும், குலைந்த உடலையும் பார்ப்பவர்கள் அந்த இளைஞருக்கு நாற்பது வயதுதான் ஆகிறது என்பதை நம்ப மாட்டார்கள். ஆழ்ந்த தூக்கத்திலிருந்த அந்த இளைஞர் தலை கவிழ்ந்து படுத்திருந்த மேசையில் அழகிய கையெழுத்தில் எழுதப்பட்ட கடிதம் ஒன்று கிடந்தது.

‘பாவப்பட்ட ஜென்மம்’ என்று நினைத்தார் வங்கி அதிபர். ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் இந்த நைந்து போன இளைஞர் நாளை கிடைக்கும் மில்லியன் ரூபிள்கள் பற்றிய கனவில் இருப்பார். பாதி இறந்த இந்த பிணத்தை தூக்கி கட்டிலில் கிடத்தி ஒரு தலையணையால் அமுக்கி கொன்றால் யாருக்குத் தெரியப் போகிறது. சிறந்த மருத்துவ நிபுணரால் கூட இந்தக் கொலையை கண்டறிய முடியாது. அதற்கு முன் அந்த கடிதத்தில் என்னதான் அவன் எழுதியிருக்கிறான் என்று பார்ப்போமே என்று எண்ணி அதை எடுத்தார் வயோதிகர்.

கடிதத்தில் அந்த இளைஞர் எழுதியிருந்ததை வாசித்தார் வங்கி அதிபர்.

‘நாளை 12 மணிக்கு நான் எனது சுதந்திரத்தை மீட்டு விடுவேன். அதோடு பிற மனிதர்களுடன் மீண்டும் இணையும் வாய்ப்பையும் பெற்று விடுவேன். ஆனால் இந்த அறையை விட்டுச் சென்று சூரிய ஒளியை பார்க்கும் முன் உங்களுக்கு சில வார்த்தைகள் கூற நினைக்கிறேன். நான் இந்த சுதந்திரத்தையும், வாழ்வையும், வளத்தையும் மற்றும் நீங்கள் அளித்த புத்தகங்கள் கூறும் அனைத்து உலகியல் நலங்களையும் தூக்கி எறிய முடிவு செய்து விட்டேன். என்னை காத்து ரட்சிக்கும் கடவுளிடம் கூறுவது போல் தெளிவான மனசாட்சியுடன் இதை நான் சொல்கிறேன்.

‘கடந்த 15 ஆண்டுகளாக உலக வாழ்வை நான் வெகு ஆர்வத்துடன் படித்தேன். மனிதர்களையோ

இந்த பூமியையோ நான் பார்த்திருக்கவில்லை என்பது உண்மை தான். ஆனால், நீங்கள் கொடுத்த புத்தகங்களின் மூலம் நான் வாழ்வை அனுபவித்தேன். மிகச் சிறந்த நறுமணமிக்க ஒயினை சுவைத்தேன், பாட்டுப் பாடினேன், காட்டுப் பன்றியையும், கலை மான்களையும் வேட்டையாடினேன், பெண்களை காதலித்தேன். நுண்மையான அழகுடைய மேகங்களையும் உங்கள் கவிஞர்கள் புனைந்த அற்புதமான கவிதைகளையும் ரசித்தேன். இரவு நேரங்களில் தேவதைகள் காதுகளில் வந்து தமது அற்புதமான கதைகளை எனக்குக் கூறினர்.'




'உங்கள் நூல்களில் இருந்த மலை உச்சிகளின் மீதேறி சூரிய உதயத்தையும் கடலில் இறங்கும் சூரியனின் அஸ்தமனத்தையும் அந்தி வானச் சிவப்பையும் ரசித்திருக்கிறேன். என் தலைக்கு மேலே மின்னிச் செல்லும் மின்னலையும் இடிஇடிக்கும் மேகங்களையும் கண்டேன். வனங்களும் வயல்களும் ஆறு ஏரிகளும் கடல்களும் நகரங்களும் என் மனதை நிறைத்தன. உங்கள் நூல்களின் வழியே அற்புதங்களை நிகழ்த்தினேன். புதிய மதங்களை பரப்பினேன். பேரரசுகளை வென்றெடுத்தேன்.'

'உங்கள் நூல்கள் எனக்கு ஞானத்தைக் கொடுத்தன. மனிதனின் ஓய்வில்லாத சிந்தனையால் விளைந்த அறிவு அனைத்தும் எனது மூளையில் ஒரு சிறிய திசை காட்டும் கருவி போல் சுருக்கி பதிய வைக்கப்பட்டுள்ளது. உங்கள் எல்லோரையும் விட நான் ஞானமுள்ளவன் என்பதை நானிறிவேன்.'

'உங்கள் நூல்களையும், ஞானத்தையும், உலகத்தின் ஆசியையும் நான் வெறுக்கிறேன். இவை எல்லாம் பயனற்றவை. மாயை. கானல் நீர் போன்றவை. நீங்கள் பெருமையடையலாம். அறிவு உடையவர்களாக இருக்கலாம். நன்றாக வாழலாம். ஆனால் மரணம் உங்கள் அனைவரையும் இந்தப் பூமிப் பந்தின் மேலிருந்து துடைத்துச் சென்றுவிடும். உங்கள் வழித் தோன்றல்கள், வரலாறுகள், மாபெரும் புத்திக் கூர்மை அனைத்தும் இந்த பூமியோடு அழிந்துவிடும்.'

'உங்கள் பகுத்தறிவை இழந்து தவறான பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளீர்கள். உண்மைக்குப் பதில் பொய்யையும், அழகுக்குப் பதில் அறுவெறுப்பையும் எடுத்துக் கொண்டீர்கள். ஆப்பிள், ஆரஞ்சு மரங்களில் ஏதேனும் திடீர் மாற்றத்தால் பல்லிகளும், தவளைகளும் காய்த்தால் அதை நீங்கள் மலைப்புடன் பார்ப்பீர்கள். ரோஜாவின் நறுமணத்துக்குப் பதில் குதிரையின் வியர்வை நாற்றத்தை ரசிப்பீர்கள். ஆனால் சொர்க்கத்திற்கு பதில் நரகத்தை விரும்பும் உங்களை பார்த்து நான் மலைத்துப் போகிறேன். உங்களை புரிந்து கொள்ள நான் விரும்பவில்லை.'

'இதை உங்களுக்கு நான் நிரூபிக்கும் விதமாக ஒரு காலத்தில் நான் சொர்க்கமாய் கனவு கண்ட மில்லியன் ரூபிள்களை துச்சமாக மதித்து அதை துறக்கிறேன். அந்தப் பணத்தை வெறுக்கிறேன். அதை இழக்கும் விதமாக பந்தயம் முடியும் ஐந்து மணி நேரத்துக்கு முன்பாகவே நான் வெளியேறுகிறேன்ஞ் ..ஆம்ஞ்.ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டு செல்கிறேன்ஞ்.'

இதை படித்த வங்கி அதிபர் அந்தக் கடிதத்தை




வைத்துவிட்டு அந்த இளைஞரின் தலையை தடவி முத்தமிட்டு சத்தமில்லாமல் விசும்பியபடியே வெளியேறினார். வாழ்வின் எத் தருணத்திலும் பங்குச் சந்தையில் பெரும் இழப்பை சந்தித்த போது கூட அவர் மனம் இத்தகு அவமானத்தை அடைந்ததில்லை. வீட்டுக்கு வந்ததும் படுக்கையில் விழுந்தார். அவர் மனமும் கண்களும் வெகு நேரம் அழுது கொண்டே இருந்தன.

மறுநாள் காலை அந்த விடுதியின் காவலாளி ஓடோடி வந்து அவரிடம், அந்த இளைஞர் சன்னல் வழியே எட்டிக் குதித்து தோட்டத்திற்கு வந்து, அங்கிருந்த கதவு வழியே வெளியே ஓடிவிட்டார் என்று கூறினார். உடனே அங்கு கிளம்பிச் சென்று அந்த இளைஞர் சென்றுவிட்டதை உறுதி செய்து கொண்டார்.

மற்றவர்களுக்கு சந்தேகம் வந்துவிடக் கூடாது என்று நினைத்த அவர், அங்கிருந்த மேசையின் மேல் கிடந்த, மில்லியன் ரூபிள்களை இழப்பதாக அந்த இளைஞர் எழுதி வைத்திருந்த கடிதத்தை எடுத்து வந்து, தனது வீட்டின் பெட்டியில் வைத்துப் பூட்டினார்.




## மீண்டும் இணையும் இளைய கூட்டணி!

### வெள்ளிவிழா வெற்றிவிழாவாக அமையட்டும்!

ஜி.வி. பிரகாஷ் குமார் நடிப்பில் உருவாகும் அவரின் 25—வது படத்தின் தலைப்பை நடிகர் கமல்ஹாசன் வெளியிட்டார். ஜி.வி. பிரகாஷ்—இன் பேரலல் யுனிவர்ஸ் பிக்சர்ஸ் மற்றும் ஜீ ஸ்டூடியோஸ் இணைந்து தயாரிக்கும் இந்த படத்தை இயக்குனர் கமல் பிரகாஷ் எழுதி இயக்குகிறார். ஜி.வி. பிரகாஷ் — திவ்ய பாரதி நடிப்பில் வெளியான ‘பேச்சுலர்’ திரைப்படம் பெரிய அளவில் பேசப்பட்டது. தற்போது இந்த ஜோடி மீண்டும் இணைவதால் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

‘லியோ’ படத்தை முடித்துவிட்ட நடிகர் விஜய், அடுத்து வெங்கட் பிரபு இயக்கும் படத்தில் நடிக்கிறார். இதை ஏஜிஎஸ் நிறுவனம் பிரம்மாண்டமாகத் தயாரிக்கிறது. இசை யுவன் சங்கர் ராஜா. இதில் விஜய் இரண்டு வேடத்தில் நடிக்கிறார். அதில் ஒரு வேடத்தில் விஜய்யை இளமையாக காண்பிக்க இருக்கின்றனர். இதில் விஜய்க்கு ஜோடியாக மீனாட்சி சவுத்ரி நடிக்கிறார். மேலும் இந்தப் படத்தில் மைக் மோகன், பிரசாந்த், லைலா, ஜெயராம் ஆகியோர் முக்கிய வேடத்தில் நடிக்கின்றனர். படப்பிடிப்பு சென்னையில் தொடங்கியது.



## விஜய் வேகம் அதிவேகம்!

## வேகம் தரட்டும் அமோகம்!

## ‘சரிபோதா சனிவாரம்’ சரியா வரட்டும்!



## நானியுடன் ஜோடிசேரும் பிரியங்கா!

நானி நடிப்பில் தெலுங்கில் வெளியான ‘அந்தே சுந்தரானிகி’ படத்தின் இயக்குநர் விவேக் ஆத்ரேயா மீண்டும் நானியுடன் அடுத்த படத்துக்காக கைகோக்கிறார். ‘சரிபோதா சனிவாரம்’ என பெயரிடப்பட்டுள்ள இப்படம், தமிழில் ‘சூர்யாவின் சனிக்கிழமை’ என அழைக்கப்படுகிறது. இப்படத்தில் நானிக்கு ஜோடி சேர்கிறார் பிரியங்கா அருள்மோகன். நடிகர் எஸ்.ஜே.சூர்யா இப்படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இப்படத்தின் அறிவிப்பு வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.



பாடலான ‘ஜரகண்டி’ பாடல் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. இந்தப் படத்தை இயக்குநர் ஷங்கர் இயக்குகிறார். படத்தில் ராம்சரண், கியாரா அத்வானி, எஸ்.ஜே.சூர்யா, ஜெயராம், அஞ்சலி, ஸ்ரீகாந்த் உள்ளிட்ட நடிகர்கள் பலர் நடிக்கின்றனர். அரசியல் பின்னணியில் உருவாகும் இந்தப் படம் அடுத்த வருடம் ஆகஸ்ட் 15—ல் வெளியாகிறது. ஸ்ரீ வெங்கடேஸ்வரா கிரியேஷன்ஸ் மூலம், தில் ராஜு தயாரிக்க, தமிழ், தெலுங்கு, இந்தி மொழிகளில் வெளியாக இருக்கிறது.

## தெலுங்கில் கலக்கும் தமிழ் இயக்குனர்



## ‘கேம் சேஞ்சர்’ மொழிகளில் சேஞ்சர் ஆகிறார்!

# நடிப்பில் வெளுத்துக் கட்டும் ஜோதிகா!





## வசூலில் வெளுத்துக் கட்டும் மம்மூட்டி!

மம்மூட்டி நடிப்பில் வெளியாகி திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கும் மலையாள படமான ‘கண்ணூர் ஸ்குவாட்’ திரைப்படம் உலக அளவில் ரூ.70 கோடி வசூலுடன் முன்னேறி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. மம்மூட்டி தயாரித்துள்ள இப்படம் வெளியாகி 15 நாட்களில் உலக அளவில் ரூ.70 கோடி வசூலை ஈட்டிவரும் நிலையில், ஜீயோ பேபி இயக்கத்தில் மம்மூட்டி — ஜோதிகா நடித்துள்ள ‘காதல் தி கோர்’ திரைப்படம் விரைவில் வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது



நியூட்டன் சினிமா எனும் பட நிறுவனம் தயாரித்து, மணிரத்னத்தின் மெட்ராஸ் டாக்கீஸ் வழங்கியிருக்கும் படம் ‘பேரடைஸ்’. ரோஷன் மேத்யூ, தர்ஷனா ராஜேந்திரன் நடிப்பில் பிரபல இலங்கை இயக்குநர் பிரசன்னா விதானகே இயக்கியுள்ள இந்த மலையாளப் படம், 2022—ம் ஆண்டில் இலங்கை எதிர்கொண்ட நாடு தழுவிய போராட்ட காலத்தில், திருமண நாளை கொண்டாடச் செல்லும் கேரள தம்பதிகள் எதிர்கொள்வதைச் சொல்கிறது. இது தென் கொரியாவின் புசான் சர்வதேச திரைப்பட விழாவில் ‘கிம் ஜெசோக்’ விருது வென்றுள்ளது. இதனுடன் ‘ பிரைட் கிட்நாப்பிங்’ எனும் திரைப்படத்துக்கும் இணைந்து வழங்கப்பட்டது.

## சர்வதேச விழாவில் ‘பாரடைஸ்’



## விருது வென்ற மெட்ராஸ் டாக்கீஸ்!



## ஜோடி சேரும் பிரபலக் கூட்டணி!

இந்தி இயக்குநர் சஞ்சய் லீலா பன்சாலி இயக்கும் படம், 'பைஜு பாவ்ரா.' 1952—ம் ஆண்டு வெளியான 'பைஜு பாவ்ரா' என்ற கிளாசிக் படத்தின் ரீமேக்கான இதில் ரன்வீர் சிங், ஆலியா பட் ஜோடியாக நடிக்கிறார்கள். ஏற்கெனவே இந்த ஜோடி பாலிவுடில் மிகப் பிரபலம் என்பதால், மீண்டும் இணையும் இந்த ஜோடியின் இப்படம் இப்போதே வெற்றிப் படமாக நோக்கப்படுகிறது.




## சொல்லி அடித்த கில்லி கூட்டணி!

## ஆக்ஷனை விரும்பும் கேத்ரினா!

பிரபல இந்தி திரைப்பட நிறுவனமான யஷ் ராஜ் பிலிம்ஸ் ஸ்பை யுனிவர்ஸ் படங்களைத் தயாரித்து வருகிறது. கடந்த 2012—ம் அண்டு சல்மான்கான், கேத்ரினா கைஃப் நடித்த ‘ஏக் தா டைகர்’, இந்நிறுவனத்தின் முதல் ஸ்பை யுனிவர்ஸ் படம். இதன் தொடர்ச்சியாக, இப்போது ‘டைகர் 3’ படத்தை உருவாக்கி உள்ளனர். இந்தி, தமிழ், தெலுங்கு மொழிகளில் தீபாவளிக்கு வெளியாகும் இந்தப் படத்தில் இருந்து கேத்ரினா கைஃப் தோற்றத்தைப் படக்குழு இப்போது வெளியிட்டுள்ளது. படம் பற்றி கேத்ரினா கூறும்போது, “உடல் ரீதியாக இது எனக்குச் சவாலான படம். ஆக்ஷன் காட்சிகளில் பங்கேற்பது உற்சாகமாக இருக்கும். நான் எப்போதும் போல் ஆக்ஷன் ரசிகை” என்று தெரிவித்துள்ளார். ‘பதான்’ படத்தில் சல்மான்கான் கவுரவ வேடத்தில் நடித்தது போல இதில் ஷாருக்கான் கவுரவ வேடத்தில் நடித்துள்ளார் என்பது சிறப்புத் தகவல்.



ஆக்ஷனை விரும்பா ஆளுண்டோ?



சிறப்புச் சிறுகதை

# மனு நீதி

## சாந்தி நாதன்

பாட்டியின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு தன் பள்ளிக்கூட கதைகள் எதையோ சொல்லிக் கொண்டு தட்டில் இருக்கும் பொங்கலை சாப்பிடும் ராகவ்வைப் பார்த்தவாறே செருப்புகளைக் கழற்றிய அனுஷா, "என்னமா உனக்கும் அப்பாவுக்கும் மிச்சம் வைக்காம இவனுக்கு எல்லாத்தையும் கொடுத்திட்டியா?" சொல்லியவாறே மகன் தட்டிலிருந்து ஒரு ஸ்பூன் பொங்கலை வாயில் போட்டுக் கொண்டாள்.

"எப்படியம்மா நீ பண்ற பொங்கல் மட்டும் இவ்வளவு டேஸ்டாயிருக்கு?" என்றாள்.

"அம்மா, கொத்சோட சாப்பிட்டுப் பார். இன்னும் சூப்பராயிருக்கும்" சொன்னபடியே கொத்சைக் கலந்து அம்மாவின் வாயில் ஒரு ஸ்பூன் பொங்கலை ஊட்டினான் மகன்.

"அம்மாவுக்கு நான் வேற கொண்டு வரேன் நீ சாப்பிடு கண்ணா" என்ற பத்மா, "மத்தியானம் உங்க சமையல்காரி சரசா போன் செஞ்சா. அவ குழந்தைக்கு ரொம்ப பீவரா இருக்கறதால வேலைக்கு வர மாட்டாளாம். உனக்கும் உங்க அக்கா சுவாதிக்கும் சொல்லச் சொன்னா. அப்பதான் உங்க அப்பாவும் கிளம்பிண்டு இருந்தார். அவர்தான் உன்னோட மாஸ்டர்பீஸ் பொங்கல் பண்ணிடு. குழந்தைகளும் விரும்பி சாப்பிடுவா என்றார். அதனால எல்லாருக்கும் சேர்த்துதான் பண்ணியிருக்கேன். இப்ப சாப்பிடறயா? மிருதுளா கொஞ்சம் முன்னாடி காலேஜிலிருந்து வந்தா. சுவாதி, அவ கணவர், மிருதுளா எல்லாரும் ஏதோ ரிசப்ஷனுக்குப் போறாளாம். அதுக்குள்ள அசைன்மெண்டு எதுவோ முடிக்கணும்னு அவ அவசரமா கொஞ்சம் பொங்கலை சாப்பிட்டுட்டு ஓடிட்டா. பால் கூட வேண்டாம்னுட்டா. அவ அப்பாவுக்குப் பொங்கல் பிடிக்குமேன்னு நான் கொஞ்சம் ஹாட் பாக்ஸில் போட்டுக் கொடுத்தனுப்பிச்சேன். கிளம்பறதுக்கு முன்னாடி அடி வயித்துக்கு ஆதாரமாய் சாப்பிட்டுப் போகலாமில்லையா? இரு உனக்கு தட்டில எடுத்துண்டு வரேன்."




"இப்ப வேண்டாம்மா. கோபால் வந்த பிறகு நாங்களே இங்கு வந்து அப்பாவோட சாப்பிடறோம். இவர் நாளைக்கு ஆபிஸ் வேலையா மும்பை போறார். அதுக்கு முன்னாடி உங்க ரெண்டு பேரையும் பார்க்கணும்னு சொன்னார். ராகவ், அம்மா வீட்டுக்குப் போறேன். நீ கொஞ்ச நேரம் விளையாடிட்டு ஹோம் ஒர்க் பண்ண வரணும் தெரிஞ்சுதா?"

"அவனுக்குப் பூஸ்டு தரவேயில்லை. இருடா குழந்தை"

"பாட்டி, பொங்கல் நிறைய சாப்பிட்டிருக்கேன். பால் வேண்டாம்." சொன்னபடியே ராகவ் வெளியே ஓடினான்.


மகனின் ஸ்கூல் பையையும் தன் கைப்பையையும் எடுத்துக் கொண்டு கிளம்பியவளை "ஒரு நிமிஷம் இரு அனு. விளக்கு ஏத்திட்டு வரேன் குங்குமம் எடுத்துண்டு வரேன்." பத்மா உள்ளே சென்ற அடுத்த நிமிடம் அனுவின் கைபேசியில் அப்பா என்ற எழுத்தோடு அவரது எண்ணிலிருந்து கால் வந்தது.

"சொல்லுங்கப்பா"

"யாரு வினாயகம் சார் மகள் அனுவா..... உங்கம்மா அருகில் இருந்தா கொஞ்சம் தள்ளி வாம்மா. நான் உங்க வீட்டுக்கு எதிர்த்த வீட்டுக்காரன் சுந்தரமூர்த்தி பேசறேன்."

அவசரமாக வாசலுக்கு வந்தவள், "சொல்லுங்க சார். அப்பா உங்க வீட்டுக்கு வந்திருக்காறா?"

"இல்லையம்மா வழக்கம்போல ஆறு மணி பஸ்ஸை விட்டு இறங்கி உங்க அப்பா ரோடை கிராஸ் செய்யும்போது எதிரில் வேகமா வந்த கார் இடிச்சு கீழே விழுந்துட்டார். கார்காரன் நிறுத்தாம போயிட்டான். வாக்கிங் போயிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்த நான் கூட்டத்தைப் பார்த்திட்டு எட்டி பார்த்தா, நம்ம சார்.... அதுக்குள்ள நம்ம ஏரியா ஆள் போன் செஞ்சு ஆம்புலன்ஸ் வரவழைச்சுட்டார். நான் ஆம்புலன்ஸில் போறேன். உனக்கும் உங்க அக்காவுக்கும் தகவல் சொல்லிட்டேன். மெயின் ரோடில் இருக்கும் ஈஸ்வர் கிளினிக்கு வா." போன் கட்டானது.



குங்குமச்சிமிழுடன் கூடத்தில் நிற்கும் தாயைத் திரும்பிப் பார்த்த அனுவிற்கு பதட்டம்




அதிகமானது. அதே நேரம் எதிர்புறத்தில் பதைபதைப்புடன் வரும் மிருதுளாவைப் பார்த்தவுடன் அவளை நோக்கி விரைந்தாள்.


"சித்தி, தாத்தாவுக்கு....." தேம்புபவளை "தெரியும்டா செல்லம். நீ கண்ணைத் துடைச்சிண்டு உள்ளே போ. பாட்டிகிட்ட இப்ப எதுவும் சொல்லாதே. நான் எங்கேனு கேட்டா எதோ போன் வந்தது பேசறான்னு எதையாவது சொல்லி சமாளி. ராகவ்வையும் உள்ளே கூப்பிட்டுக்க" கைப்பையை மட்டும் எடுத்துக் கொண்டு நடக்கத் துவங்கிய அனு எதிரில் காலியாக வந்த ஆட்டோவை நிறுத்தி ஏறி ஆஸ்பத்திரிக்கு விரைந்தாள்.

"கொஞ்சம் வேகமாப் போங்க. எங்க அப்பா ஆக்ஸிடெண்ட் ஆகி ஆஸ்பத்திரியிலிருக்கார்."

"அம்மா, நான் இந்த ஏரியா

ஆளுதான். சாரையும் அம்மாவையும் நல்லாத் தெரியும். பஸ் ஸடாண்டுல எல்லாரும் கூட்டமா பேசிக்கறதைப் பார்த்து நம்ம சாராயிருக்குமான்னு டவுட் வந்துதான் நான் அவர் வீட்டுப் பக்கம் வந்து விசாரிக்கலாம்னு வந்தேன். தங்கமான குணம். அவருக்கு ஒண்ணும் ஆகாது." சொல்லிக் கொண்டே ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தான்.

"ரொம்ப தாங்க்ஸ்பா" பணத்தைக் கொடுத்து விட்டு பதட்டமாக நுழைபவளை ஓடி வந்து அணைத்துக் கொண்ட சுவாதி "அனு, அப்பா நம்மையெல்லாம் விட்டுட்டுப் போயிட்டாருடி" எனக் கதறினாள்.



"ஐயோ நிஜமாவா சொல்ற?"

"ஆமாம் அனு. கீழே விழுந்ததிலே தலையில ஆழமா அடிபட்டு அதிக இரத்தம் போயிருக்கு. ஆஸ்பத்திரிக்கு வரும்போதே அவர் மிகவும் மோசமான நிலையில் இருந்திருக்கார். சிகிச்சை ஏதும் பலனளிக்கவில்லை என்று டாக்டர் சொன்னார். போகவர ஆட்டோ ஏற்பாடு பண்ணித் தரோம்னு எத்தனை தடவை சொன்னோம். அப்பா பிடிவாதமா மறுத்துட்டார்."




"சுவாதி, இப்போ அதைப் பற்றி பேசி என்ன பிரயோசனம். உங்க அம்மாவுக்கு இதை எப்படிச் சொல்லப் போறோம்னு நினைச்சுப் பார்." என்றான் சந்துரு.

"ஆமாங்க. இந்த அதிர்ச்சியை அவங்க எப்படித் தாங்குவாங்கன்னு தெரியலையே......" பெண்கள் இருவரும் அழுகையை அடக்கமுடியாமல் தவிக்க, மிருதுளாவிடமிருந்து போன் வந்தது.

"அம்மா, சுந்தரம் அங்கிள் மனைவியும் இன்னும் ரெண்டு மாமிகளும் வந்தாங்க. அவங்களோட திடீர் வருகையால பாட்டி கலவரமாகி அவங்களைத் துருவித்துருவி கேள்விகேட்டு தாத்தாவுக்கு அடிபட்டு இருப்பதைத் தெரிஞ்சுக்கிட்டாங்க. விஷயத்தைச் சொல்லச் சொல்லவே அப்படியே மயங்கிட்டாங்கமா. எல்லாருமா ஆசுவாசப்படுத்தி எழுப்பி உக்கார வச்சுருக்கோம். தாத்தா எப்படி இருக்காரு? நீங்க யாருமே ஏன் போன் போடலை.?"

"கண்ணம்மா, பாட்டிக்கு எதாவது குடிக்கக் கொடு. நாங்க எல்லாரும் இன்னும் கொஞ்ச நேரத்தில வந்துடுவோம்"

"தாத்தாவைப் பாக்காம தண்ணிகூட குடிக்க மாட்டேங்கறாங்க. ராகவ் வேற ஒரே அழுகை. ரொம்ப பயமா இருக்கும்மா... தாத்தா எப்படியிருக்காருன்னு சொல்லவேயில்லையே..." விம்மலைக் கட்டுக் படுத்த இயலாமல் போனைத் துண்டித்தாள் சுவாதி.

தயங்கியபடியே அங்கு வந்த சுந்தரமூர்த்தி அவர்களிடம் ஒரு தாளை நீட்டினார்.

"சார் மேல மோதின கார் நம்பர் இதுதான். விபத்தை நேரில் பார்த்த கூட்டத்தில ஒருத்தர் நம்பரை நோட் செஞ்சிருக்காரு. நம்ம ஏரியாவில புதுசா ஒரு பெரிய வீடு கட்டிக் குடி வந்திருக்கவங்க வீட்டு வண்டின்னும் சொன்னாரு. நீங்க ரெண்டு பேரும் மனசை கொஞ்சம் தேத்திக்கிட்டாதானே அம்மாவை இந்த அதிர்ச்சியிலேந்து மீட்கமுடியும். மாப்பிள்ளைங்க ரெண்டு பேரும் தலைமை டாக்டர்கிட்ட பேசி போஸ்ட்மார்டம் செய்யாம டெத் சர்டிபிகேட் வாங்கப் போயிருக்காங்க. நான் ஆம்புலன்ஸ் புக் பண்ணி□டேன். உங்க ரெண்டு பேருக்கும் குடிக்க ஏதாவது வாங்கி வரட்டா?"

"வேண்டாம் சார். சமயத்தில நீங்க செஞ்சிருக்கற உதவிக்கு...." அனு சொல்ல, "நான் சமயத்தில போய் என்னம்மா பிரயோசனம். சாரைக் காப்பாத்த முடியலையே?"


துக்கமும் களைப்பும் மேலோங்க கண்மூடி அமர்ந்திருந்த சகோதரிகள் இருவரும் தங்கள் அப்பாவைப் பற்றிய நினைவுகளில் ஆழ்ந்தனர்.

அரசுப் பள்ளியில் வாத்தியாராக வேலைப் பார்த்து ஓய்வு பெற்றவர் வினாயகம். மாணவர்களிடம் அவர் ஒரு தந்தையைப் போல பழகிய பண்பு, நேர்மை தவறாத நடத்தை, உண்மையான உழைப்பு ஆகியவை அவருக்குப் பரிசாக நல்லாசிரியர் என்ற புகழைத் தேடித் தந்து நிம்மதியான ஓய்வுக் காலத்திற்கு உறுதுணையாக இருந்தது.

இறைவன் கொடுத்த வரமாக அவர் கைபிடித்த மனையாள் பத்மா கணவரின் மனமறிந்து நடந்து குடும்பத்தை அழகான கோயிலாய் நடத்தி வந்தாள். இவ்வினிய இல்லறத்திற்கு இனிமை சேர்ப்பதுபோல் முதல் பெண் சுவாதியும் அடுத்து அனுஷாவும் பிறந்தனர்.

“ரெண்டும் பொட்டைப் பிள்ளைங்களா பிறந்திருக்கே” சில உறவுகளின் ஏளனம் கலந்த அனுதாபக் குரலோ “என்னதான் பார்க்க ரம்பையா ரதியா இருந்தாலும் இவனுக்கு வர சொற்ப ஓய்வூதியத்தை வச்சி சொத்து பத்து ஏதுவுமில்லாத வினாயகம் எப்படி இதுங்களை கரையேத்துவான் என்ற உற்றாரின் விமர்சனங்களோ தம்பதிகளை மனம் வாடச்செய்யவில்லை. மாறாக செல்வத்தில் சிறந்த கல்விச் செல்வத்தை என் கண்மணிகளுக்கு எப்பாடு பட்டாவது வாரி வழங்க வேண்டும். வாழ்வில் அவர்கள் உயர்வு பெற இதுதான் சிறந்த வழியென வினாயகம் உறுதிபட நம்பினார்.

மகள்களின் மனதிலும் அந்த எண்ணத்தை வே□ன்றச் செய்தார். தாயின் அழகும் அடக்கமும் தந்தையின் அறிவாற்றலும் மதிநுட்பமும் இருவருக்கும் இறைவன் தந்த கொடையாய் இயல்பாய் அமைய பள்ளிப் படிப்பு முதல் கல்லூரியில் முதுகலைப் படிப்பு வரை உதவித்தொகையில் படித்து முதல் வகுப்பில் தேர்ச்சி







பெற்றனர்.

மூத்தவள் சுவாதி வணிகவியல் முதுகலைப் பட்டப் படிப்பை முடிப்பதற்கு முன்பாகவே கல்லூரியில் நடந்த காம்பஸ் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு நல்ல நிறுவனத்தில் வேலையில் சேர்ந்தாள். இளையவள் பள்ளி இறுதி வகுப்பில் பெற்ற அதிக மதிப்பெண்கள்ளால் அவள் ஆசைப்படி பொறியியல் பட்டப் படிப்பில் சிரமமின்றி சேரமுடிந்தது. தமக்கையின் தூண்டுதலால் அவள் கணிணித் துறை வகுப்புகளுக்கும் சென்று அத்துறையில் பெற்ற சான்றிதழ்கள் படிப்பு முடிவதற்குள் ஒரு மென்பொருள் நிறுவனத்தில் வேலையில் அமர உறுதுணையாக இருந்தது. ஒரு நண்பரின்

இல்லத் திருமணத்திற்குச் சென்ற வினாயகத்தின் குடும்பத்தை அந்நண்பர் தன் உறவினர் ஒருவருக்கு அறிமுகப்படுத்தினார். அவருக்கும் அவரது மனைவிக்கும் சுவாதியைப் பார்த்தவுடன் பிடித்து விட்டது. தொடர்ந்து அவர்களோடு உரையாடியதில் தங்கள் மகனுக்கு சுவாதி மிகப் பொருத்தமாக இருப்பாள் என்று தீர்மானித்து விட்டனர். அந்தஸ்த்தில் தங்களை விட



உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் ஆயிற்றே என்ற வினாயகம் குடும்பத்தினரின் எண்ணத்திற்கு மாறாக அவர்களின் நட்புணர்வோடு கூடிய பண்பும் அநாவசிய அலட்டல் இல்லாத இயல்பும் அவர்களுக்கும் திருப்தி அளிக்கவே செய்த்து.

பெண் பார்க்க வந்த சந்துரு சுவாதியின் நிபந்தனைப்படி அவளது பெற்றோரின் பராமரிப்பு மற்றும் தங்கையின் எதிர்கால வாழ்க்கை எல்லாவற்றிலும் தன்னால் எந்த இடையூறும் இருக்காது என்பதையும் அவள் எப்போதும் போல அவர்கள் தேவைகளைப் பொறுப்பேற்று நிறைவேற்றலாம் என உறுதி




கூறியதால் விரைவில் அவர்கள் திருமணம் இனிதே நடந்தது.

அனுவும் வேலையில் சேர்ந்து குடும்பத்தின் பொருளாதார நிலை சிறிது ஏற்றம் காணத் துவங்கியது. இந்நிலையில் சுவாதி ஒரு ஆண்மகவைப் பெற்றாள். பிரசவ விடுப்பு முடிந்து தொடர்ந்து வேலைக்குச் செல்லத் துவங்கும் போது குழந்தையை பார்த்துக் கொள்ள சந்துருவின் பெற்றோரின் உடல்நிலை இடம் கொடுக்கவில்லை.


கோவையில் மருத்துவராக இருக்கும் மூத்த மகனிடம் அவர்கள் இடம் மாற, வினாயகம் பத்மா அந்தப் பொறுப்பை மனமுவந்து ஏற்றனர். சந்துரு வழி உறவினனான கோபால் பணி இடம் மாறி அதே நகரத்திற்கு வந்தவன் சந்துருவைப் பார்க்க அடிக்கடி வீட்டிற்கு வருகை தந்து அக்குடும்பத்தில் எல்லாருடைய அன்புக்கும் பாத்திரமானான்.

ஓரளவு வசதி படைத்தவனாக இருந்தாலும் சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து மாமாவிடம் வளர்ந்த அவன், உறவுகளுக்கு ஏங்கி வந்ததால் இவர்களோடு ஒன்றிப் பழகி அனுவைத் திருமணம் செய்து கொள்ளும் விருப்பத்தை சந்துரு வழியாக வெளிப்படுத்தி எளிய முறையில் திருமணமும் நடந்தேறியது.

அடுத்த வருடமே அனுவிற்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஓரிரு மாதங்களில் வினாயகம் பணி ஓய்வு பெற்றார். அதுவரை அரசினர் குடியிருப்பில் இருந்த அவர்கள் வீடு மாறவேண்டிய கட்டாயம். தினமும் குழந்தைகளைப் பெற்றோரிடம் கொண்டுவிட்டு வேலைக்குச் செல்வதும் திரும்ப வந்து குழந்தைகளைக் கூட்டிச் செல்வதற்கும் மாற்றாக ஒரே ஏரியாவில் அருகருகே இருப்பது நல்லது என ஒரு மனதாகத் தீர்மானம் செய்தனர்.

பத்மாவின் வீட்டு நிர்வாகத் திறமையால் அவள் சேமித்த தொகையில் பல வருடங்களுக்கு முன்பாக அவர்கள் வாங்கிய மனையொன்று அன்று அதிகம் வளர்ச்சியடையாத ஏரியாவில் இருந்தது. ஆனால் தற்போது நகர விரிவாக்கல் காரணமாக அது நன்கு வளர்ச்சி பெற்ற இடமாகி அரசாங்க அப்ரூவலோடு மனைகள் விற்பனை நடந்து வந்தது.


சந்துரு, கோபால் வினாயகத்தின் மனைக்கு அருகிலேயே கிடைத்த மனைகளை வாங்கி



உடனடியாக வீடு கட்டவும் துவங்கி விட்டனர். அவரவர் ரசனைக்கும் வாழ்க்கைத் தரத்திற்கேற்பவும் அழகிய இரு பங்களாக்கள் உருப்பெற்று வரத்துவங்கியது.

மகள்கள் இருவரும் பெற்றோர் விருப்பப்படி அவர்கள் இடத்தில் அத்தியாவசதிகள் கொண்ட ஒரு எளிய வீட்டைக் கட்டித் தந்தனர். வினாயகம் கட்டிடவேலைகளை மேற்பார்வையிட அன்றாடம் சென்று வர வசதியாக சிறிது தூரத்தில் ஒரு பெரிய வீட்டை வாடகைக்கு எடுத்து எல்லாரும் ஒன்றாகத் தங்கி வந்தனர். எவ்வித இடர்பாடும் இன்றி குறித்தகாலத்தில் வீடுகள் தயாராகி புதுமனை புகுவிழாவும் நிறைவாக நடந்தது.

வினாயகம் குழந்தை வளர்ப்பில் பத்மாவிற்கு உதவி செய்த்தோடு மட்டுமின்றி அக்கம்பக்கத்தில் இருந்த வசதி குறைந்த குழந்தைகளுக்கு மாலை தேரங்களில் இலவசமாக வகுப்பு எடுத்து வந்தார். அதனால் ஏரியாவாசிகளின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர் ஆனார். ஒத்த வயதினரான சுந்தரமூர்த்தி இவரது சிறந்த நண்பரானார். அவர் மூலமாக சிறிது தொலைவில் இயங்கிவரும் ஆதரவற்ற சிறார் பள்ளியைப் பற்றி தெரிந்து கொண்டவர் ஒருநாள் அங்கு நேரில் சென்றார்.




ஒரு பழைய வாடகை இல்லத்தில் பள்ளியும் குழந்தைகள் தங்கும் விடுதியும் இருத்தது. சுமார் முப்பது குழந்தைகள் வரை தங்கிப் படித்துவந்த அந்த இல்லத்தின் பொறுப்பாளர் முரளி தன் கைப்பணத்தைக் கொண்டும் சில நங்ல மனிதர்களின் நன்கொடைகள் மூலமாகவும் இயன்றவரை இல்லத்தை பற்பல சிரமங்களுக்கிடையே நடத்தி வந்தார்.

அரசாங்க உதவித் தொகைகளுக்கு மேற்கொண்ட முயற்சிகளுக்கும் எவ்வித பலனுமில்லை. ஆசிரியர் பணிக்கு வந்தவர்களும் தரப்பட்ட சொற்ப ஊதியத்தைக் காரணம் காட்டி சிரத்தையின்றி கற்பிப்பதும் அடிக்கடி வேலைக்கு வராமல் இருக்கும் அவலநிலை ஒருபுறம் என்றால் விடுதியின் ஒழுகும்கூரைகளும் குடிநீர் பற்றாக்குறை முறையற்ற மின்சாரத் தொடர்பு போன்ற சிக்கல்கள் மறுபுறம் இருந்தாலும் சிரமங்களுக்கிடையே பள்ளியைத் தொடர்ந்து நடத்தும் முரளியை மனமார பாராட்டினார்

வினாயகம்.

“முரளி உங்க தொண்டு உள்ளத்தை ரொம்பப் பாராட்டணும். இந்த சேவையில் நானும் பங்குபெற ஆசைப்படேறன். பணம், காசால உதவற அளவுக்கு எங்கிட்ட வசதியில்லை. ஆனா தினமும் மாலை வேளைகளில் இங்குவந்து குழந்தைகளுக்கு பாடம் சொல்லித்தர என்னால் முடியும்.”

‘என்னால் சம்பளம் ஏதும் தரமுடியாதே’ தயக்கமாய்முரளி கூற, “ஊதியத்தை எதிர்பார்த்து நான் இதைச் செய்வதாக நான் சொல்லவில்லை. ஒரு குடும்பத் தலைவனா என் கடமைகளை நிறைவேற்றிவிட்டேன். என் குழந்தைகளும் அவள் குடும்பமும் எங்களை நிஇம்மதியா ஆனந்தமா வாழவைச்சிண்டு இருக்கற இந்த நிறைவான நிலையில் சமுதாயத்திற்கு என் பங்களிப்பா இதை செய்ய விரும்பறேன். மதியம் மூன்று மணி வாக்கில் எங்கள் ஏரியாவிற்கு வர பேருந்து எண் 145 உங்கள் பள்ளி வாசலில் நிற்கிறது. அதே வண்டி 6.30 மணிக்கு இங்கு வருகிறது□. அதில்தான் நான் இப்போது வந்தேன். எனவே எனக்கு இங்கு வருவதில் எந்த சிரமமில்லை.”



பேருந்துக்குக் காத்திருக்கும் நேரத்தில் அங்கிருந்த குழந்தைகளோடு பேசியும் முரளியோடு கட்டிடத்தைச் சுற்றிப் பார்த்தும் நேரத்தைக் கடத்திப் பின் வீடு வந்து சேர்ந்தார்.




அன்று இரவே மனைவி. மாப்பிள்ளைகள் மகள்களிடம் இதுபற்றிப் பேசினார்.

” எதுக்கு மாமா இந்த வயதில் இந்த அலைச்சல்?”

“கடவுள் அருளில் எனக்குப் பெரிதாக எந்த உடற்கோளாறும் இல்லை. என் பேரக் குழந்தைகளும் என் வழிகாட்டுதல் இன்றி தங்கள் பொறுப்புணர்ந்து பாடங்களைப் படிக்கிறார்கள். அப்படியே தேவை இருப்பினும் ஏழு மணிக்குள் நான் வீடு வந்து விடுவேனே.....”

“சரிப்பா, நீங்க ஆசைப்படற மாதிரிப் போயிட்டு வாங்க. ஆனால் போகவர ஒரு ஆட்டோ அரேஞ் ச் பண்ணிடறோம்.” மகள் முடிக்கும் முன் “அதெல்லாம் வேண்டாம். மத்தியான வேளையில் பஸ்ஸில் கூட்டமே இருக்காது. வீட்டிலிருந்து பஸ் ஸ்டாப்பிற்கு அஞ்சு நிமிஷத்தில போயிடலாம். அந்த பள்ளி வாசலிலே பஸ் ஸ்டாப்.” பிடிவாதமாக பஸ்ஸில் பள்ளிக்குச் செல்லத் துவங்கி விளையாட்டுப் போல் நான்கு வருடங்கள் ஓடிவிட்டன.

“பார்மலிட்டீஸ் எல்லாம் முடிந்து விட்டது. நாம கிளம்பலாம்” ஒரு மணிநேரம் யுகமாக நீண்டு முடிவுக்கு வர, “சார் நான் ஆம்புலன்ஸ்ஸில் ஏறிக்கறேன். நீங்க அவங்கவங்க காரில் முன்னாடி கிளம்புங்க. உங்க அம்மாவிடம் பக்குவமா செய்தியைச் சொல்லுங்க”.

மௌனமாகத் தலையசைத்தபடி காரில் வீடுவந்து பேசத்துவங்குவதற்குள் உடல் ஆம்புலன்ஸ்ஸை விட்டு வீட்டிற்குள் வந்து இறக்கப்பட்டது. உணர்வற்று மயங்கி விழுந்த தாயை தேற்றும் வழிதெரியாத மகள்களும் கதறி அழுதனர்.

மறுநாள் காலையிலேயே திரண்டு வந்த ஜனத்திரள் வினாயகத்தை வாய்ஓயாது புகழ்ந்தும் காரை ஏற்றிக் கொன்றவனை மனதார சபித்தும் குமுறிக் கொண்டிருந்தனர். தாய்தந்தையற்ற கோபால்


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
தீபாவளி
வாழ்த்துக்கள்
தீபாவளி
ஆண்டுதோறும் வரும்
ஒளிவெள்ளத்தில்...
துன்பம் தூரபோகட்டும்,
சூழ்ச்சி சூறாவளியாய் விலகட்டும்,
தீமை தீண்டாமல் போகட்டும்...
நன்மைகள் பல பெற....
கொண்டாடுவோம் தீபாவளியை

முன்வந்து அவர் மகனாய் இறுதிக்கடமைகளைச் செய்து சகல மரியாதைகளுடன் வினாயகத்தின் பூதுடல் எரியூட்டப்பட்டது.

வீடு திரும்பி யாவரும் மூலைக்கொருவராய் அமர்ந்திருக்க, தகவல் அறிந்த முரளி ஓடோடி வந்தார். கடைசி முறையா அவரைப் பார்க்கக் கூட முடியாத பாவி ஆகிட்டேனே. சாரின் வழிகாட்டுதலால் படிப்பில் முன்னேறி வந்த இல்லக் குழந்தைகளின் நிலைதிரும்பவும் பழைய மாதிரியே ஆயிட்டதே."



பத்மாவின் காலடியில் அமர்ந்து புலம்புபவரின் பேச்சை இடைமறிப்பது போல் தயங்கியபடியே ஒரு தம்பதியர் உள்ளே வந்தனர். பத்மாவின் அருகில் வந்து நடுங்கும் கரங்களைக் கூப்பி வணங்கி நிற்க, "யார் இவர்கள்" என்பதுபோல் ஏறிட்டாள்.

"அம்மா, எங்க பையன்தான் உங்க கணவர் மேல கார் ஏத்தின பாவத்தைச் செஞ்சவன். பக்கா லைசென்ஸ் இல்லாம எங்களுக்குத் தெரியாம காரை எடுத்திட்டுப் போனவன் விபத்து நடந்ததும் பயந்து போயி நிறுத்தாம வீடு வந்துட்டான். மெள்ள விபரம் தெரிஞ்சு விசாரிச்சப்பதான் அவர் இறந்து விட்டாருங்கறது தெரிஞ்சுது....." அவரைப் பத்தி இந்த ஏரியாவில ஒருத்தொருத்தரும் பேசறதைக் கேக்ககேக்க அவனோட தப்பு இன்னும் பூதாகாரமா எங்களுக்குத் தெரியுது....." கணவர் நிறுத்த, "இருந்தாலும் பெத்தவங்க என்ற முறையில் வெக்கத்தைவிட்டு உங்ககிட்ட மடிப்பிச்சை கேட்டு வந்திருக்கோம். மறுக்காம உதவுங்கம்மா" சொன்னவள் பத்மாவின் காலில் விழுந்து வணங்கினாள்.




"என்ன உதவிக் கேக்கப் போறீங்க? உங்க பிள்ளை மேல கம்ப்ளெய்ண்ட் கொடுக்கவேண்டாம்னு தானே? அதெல்லாம் முடியாது. விபத்தை நேரில் பார்த்தவங்க போலீஸ் ஸ்டேஷனுக்கு எங்ககூட வந்து சாட்சி சொல்லத் தயாரா வந்திருக்காங்க. நீங்க கிளம்புங்க. நாங்களும் இப்போ ஸ்டேஷனுக்குப் போகணும்." சந்துரு கோபமாகக் குரல் எழுப்பினான்.

"சார், உங்க நியாயமான கோபம் புரியுது. ஆனா இளவயதுக்குரிய அவசரத்தாலயும் பின்விளைவுகளைப் பற்றி யோசிக்காமலும் எங்க மகன் அறியாம செஞ்ச இந்தத் தப்பை எண்ணி அவனும் வருந்தி அழுதுக்கிட்டு இருக்கான். அவனுக்கு வெளிநாட்டில் மேற்படிப்புக்கு அட்மிஷன் கிடைச்சிருக்கு. இது அவன் வாழ்நாள் லட்சியம். கோர்ட், கேஸ் எல்லாம் வந்தா அவனது எதிர்காலமே என்னவாகும்னு மனசொடிஞ்சு உக்காந்திருக்கான்." சிறிது இடைவெளி விட்டவர், "அதனால இந்த பாவகாரியத்துக்கு பிராயச்சித்தமா நீங்க என்ன கேட்டாலும் நாங்க செய்யத் தயார்...."


"எங்க அப்பா உயிரைத் திருப்பித் தரமுடியுமா உங்களால? எதுக்கு இந்த வெட்டிப் பேச்சு.? கிளம்புங்க" ஆத்திரப்படும் அனுவைக் கையமர்த்தினாள் பத்மா.

"இந்த கேசை வாபஸ் வாங்கினா பதிலுக்கு நீங்க எவ்வளவு தருவீங்க?" அமைதியாகக் கேட்கும் பத்மாவை அதிர்ச்சியுடன் எல்லாரும் பார்த்தனர்.

"அம்மா என்ன பேசறீங்க?" காதில் வாங்காமல் "உங்களால் அதிகபட்சமாக எவ்வளவு தொகை தரமுடியும்?" திரும்பவும் கேட்பவளை, "அந்தப் பாவப் பணம் நமக்கு எதுக்கு?" கோபால் கேட்டான்.

"அப்பாவோட உயிருக்கு விலை பேசற எண்ணம் எப்படீம்மா உனக்கு வந்தது. ஒருவேளை நாங்களெல்லாம் உன்னை விட்டுடுவோம்னு பயப்படறியா? நேத்து ராத்திரி உன் மூத்தபேரன் விஷயம் கேட்டுத் துடிச்சிட்டான். பிலானியிலேந்து நான் உடனடிய வரமுடியாதே. கடைசியா பாக்கற

அதிர்ஷ்டம் எனக்கு இல்லாம போச்சேன்னு அழுதான். அப்போ அவன் ஒரு சம்பவத்தை ஞாபகப்படுத்தினான். ஒரு வாட்டி அவன் டூவீலரில் வீ ட் டு க் கு



வேகமா வரும்போது ஒரு நாய் குறுக்க ஓடிவந்து வண்டியில அடிபட்டுண்டு ஊளையிட, சத்தம் கேட்டு அப்பா வெளியில வந்தாராம்.இவனைப்பார்த்துகோபமா முறைச்சவர், இதுக்கு சாப்பிட ஏதாவது கொண்டான்னு சொல்லிட்டு அதோட கால்காயத்தைத் துடைச்சு மருந்து போட்டுக் கட்டிவிட்டாராம். அதோட கால் நல்ல குணமாற வரைக்கும் தினமும் அதுக்கு சாப்பாடு வைச்சபின் தான் அவர் சாப்பிடுவாராம். இதைச் சொல்லச் சொல்ல அஸ்வின் அப்படி அழுதான். அதே மாதிரி அனுவோட பெண் ராதிகா மணிபாலிலிருந்து போன் பேசும் போது "நம்ம குடும்பத்தில முதல் டாக்டர் நீதான். நன்றாகப் படிச்சு கஷ்டப்படறவாளுக்கெல்லாம் நீ இலவசமா மருத்துவம் பார்க்கணும். தாத்தா உனக்கு அஸிஸ்டெண்டா வேலை பார்க்கப் போறேன்னு சொன்னாரு பெரியம்பான்னு அழுதா. ஆனா அம்மா என்னடான்னா"

"பேசி முடிச்சிட்டயா சுவாதி? இப்ப நா பேசறதை எல்லாரும் கேக்கணும். நீங்களெல்லாம் என்னைப் புரிஞ்சிட்டது இவ்வளவு தானா? வாழ்க்கையில அத்தியாவசியத் தேவைகளுக்கு மேல எதுக்கும் ஆசைப்படக் கூடாதுங்கற உறுதியுடன் வாழ்ந்தவர் எம்புருஷன். நானும் அப்படியேதான் வாழ்ந்துண்டு வரேன். பெத்தபிள்ளைகளைப் போல எங்கமேல பாசம் காட்டற மாப்பிள்ளைகளோ பெண்களோ என்னைக் கைவிட்டுடுவாங்கற பயம் எனக்கு இல்லவே இல்லை. அவரோட ஆயசு நேத்தோட முடியணும்னு விதிச்சிருக்கு. அறியாமநேர்ந்து விட்ட தப்புக்காக அந்த இளம்பிள்ளையைத் தண்டிக்கறதால, போன உயிர் திரும்பி வரப் போறதா? ஏற்கனவே பயந்து போய் மனக்குழப்பத்தில இருக்கறவன் நம்ம எடுக்கற ஆவேசத் தீர்மானத்தால ஏதாவது தப்பான முடிவுக்கு வந்துட்டா அந்த பாவம் நமக்குத் தானே? உயிரோட இருந்தவரைக்கும இவர் எப்பவும் அந்த இல்லத்தைப் பத்திதான் நினைச்சுண்டிருந்தார். மழைக்காலம் வந்தாலே அந்த ஒழுகும் கட்டடத்தில பசங்களை வச்சிண்டு முரளி சார் படறபாட்டைச் சொல்லி வருத்தப்படுவார். நமக்கு பொருளாதார வசதி இருந்தா ஏதாவது பண்ணியிருக்கலாமில்லையாம்பார். அந்த நல்லெண்ணம் நிறைவறத்தான் இப்படி நடந்திருக்கோ என்னமோ... இவர்தான் முரளி அந்த இல்லத்




ந ட த் த ற வ ர் . உங்களால முடிஞ்ச தொகை அவருக்குக் கொடுத்திடுங்கோ. ம ழை காலத்துக்குள்ள அவங்க கட்டிடத்தினை சரிபண்ண உதவியாயிருக்கும். ஊரார் பிள்ளைக் காப்பாத்தற புண்ணியம் உங்க பிள்ளைக்கு நல்ல எதிர்காலத்திற்கு வழிகாட்டும். அவரோட தன்னலமில்லாத ஆசை நிறைவேற நானும் ஒரு கைகாட்டியா இருந்தேன்கற நிம்மதியோட நான் இருக்கப் போற இன்னும் கொஞ்ச நாளைக் கழிச்சிடுவேன்" இதுவரை அடக்கி வைத்திருந்த அழுகையை அடக்கமுடியாமல் கைகளால் முகத்தை மூடிக்கொண்டு அம்மாவை ஓடிவந்து கட்டிக் கொண்ட மகள் இருவரும் "எங்க அப்பாவிற்கு எல்லா விதத்திலும் பொருத்தமான செல்ல அம்மா" என்றனர் கண்ணீருடன்.

"அம்மா அந்த இல்லத்தை முழுவதும் சரி பண்ணி அந்தக் குழந்தைகளுக்குத் தேவையான மத்த எல்லா வசதிகளையும் செஞ்சு தரோம்னு சத்தியம் செய்யறோம்" வணங்கி இருவரும் விடைபெற கூடியிருந்த அனைவரும் மௌன மொழியில் இறந்தவரின் ஆத்மாவிற்கு அஞ்சலி செலுத்தினர்.




# தல வலம்

## பாடலீஸ்வரர்

புவனகிரி செயபாலன்

'ஈன்றாளு மாயெனக் கெந்தையு
மாயுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந்
தான்மனத் துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க் கன்பன்
திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன்
றன்னடி யோங்களுக்கே'
—அப்பர் (தேவாரம்)



திருப்பாதிரிப்புலியூர் பாடலீஸ்வரர் 274 சிவாலயங்களில் 223 வது தேவார தலம். நடுநாட்டு 22 தலங்களில் இது 18 வது தலம். பஞ்சப்புலியூர் தலங்களில் இதுவும் ஒன்று!

பாடலிபுத்திரம், சதுர்வேதிமங்கலம், கன்னிவனம், வடபுலியூர், திருப்பாதிரிப்புலியூர், கடைஞாழல், கூடலூர் புதுநகரம் போன்ற பெயர்களை உடையது இத்தலம்.







மூலவர்

பாடலீஸ்வரர், கன்னிவன நாதர், தோன்றாத் துணை நாதன், கடைஞாழலுடைய பெருமான், சிவக்கொழுந்தீசன், உத்தாரேசன், பாடலநாதன், கரையேற்றும் பிரான், தாயார்— பெரியநாயகி, தோகையாம்பிகை, அருந்தவ நாயகி, பிரகந்த நாயகி.

தலவிருட்சம் —பாதிரி மரம். தீர்த்தம் —சிவகிரி, பிரம்ம தீர்த்தம், (கடல்) சிவகரை தீர்த்தம், (திருக்குளம்) பாலோடை, கெடில நதி, தென்பெண்ணை ஆறு.

தேவாரம் திருஞானசம்பந்தர் 11, திருநாவுக்கரசர் 10 பதிகங்களும் பாடி உள்ளனர்.

‘முன்னநின்ற முடக்கான் முயற்கு அருள் செய்துநீள்

புன்னைநின்று கமழ் பாதிரிப் புலியூருளான்

தன்னைநின்று வணங்கும் தனைத்தவ மில்லிகள்

மின்னைநின்ற பணி யாக்கைப் பெறுவார்களே.’ —திருஞானசம்பந்தர் (தேவாரம்)

தல வரலாறு

கைலாயத்தில் சிவனும் பார்வதியும் பகடை (தாயம்) விளையாட விருப்பம் கொண்டனர். பகடைக்காய் விளையாடுவதற்காக அம்பாளின் தோழிகள், மாணிக்க கற்கள், மரகதப் பலகை, வைரம் பொருந்திய பகடை காய்களைத் தந்து பகடை ஆடச் செய்தனர்.

ஆட்டத்தில் அம்பாளே வெற்றி பெற்றார். ஆனால் ஈசனும் தான் வெற்றி பெற்றதாகக் கூறினார். இருவருக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. அருகில் இருந்து ஆட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்த திருமாலிடம் யார் வெற்றி பெற்றது உண்மையைச் சொல் என அம்பாள் கேட்டார்.

உண்மையைச் சொன்னால் மற்றொருவரின் அதிர்ச்சிக்கு ஆளாக நேரிடும் எனக் கருதி ஆட்டத்தை கவனிக்கவில்லை எனக் கூறியதும், அம்பாளுக்கு கோபம் வந்து, “ஈசன் கண்களை என் கரங்களால் மறைப்பேன்! என் மறைப்பைத் தாண்டி ஈசன் கண்ணின் ஒளி தெரிந்தால் ஈசன் வெற்றி பெற்றதாகவும் ஒளி தராவிட்டால் நான் வெற்றி பெற்றதாகவும் ஒப்புக்கொள்ள வேண்டும்!” என்று சொல்லி ஈசனின் கண்களை மூடினாள்.

அடுத்த நொடி அண்ட சராசரங்களும் இருளில் மூழ்கியதுடன், அனைத்து இயக்கங்களின் செயல்களும் நின்று போயின. ஒருகணமே நீடித்த நிலையில் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பல



யுகங்களாக நீடித்தது. பதறிப்போன அம்பாள் ஈசனின் கண்களில் இருந்து கைகளை எடுத்துவிட்டு தன் செயலால் ஏற்பட்ட விபரீதத்திற்கு மனம் வருந்தி தன்னை மன்னித்து அருளும்படி ஈசனிடம் வேண்டினாள்.

ஈசனோ, “நீ பூலோகம் சென்று அங்குள்ள சிவத்தலங்களை தரிசித்து வா! அப்படி நீ தரிசிக்கும்போது எந்த தலத்தில் உனது இடது கண்ணும் இடது தோளும் துடிக்கின்றதோ, அந்த தலத்தில் உன்னை நான் ஆட்கொள்வேன்!” என்று சொல்லி அருளினார்.

அதன்படி அம்பாள் ஒவ்வொரு தலமாக சென்று தரிசித்தபடி வந்தவர், பாதிரி வனமாக இருந்த இத்தலத்திற்கு வந்து அரூபமாக இருந்து ஈசனை பூஜிக்கும் போது அம்பாளின் இடது கண்ணும் இடது தோளும் துடித்தன. ஈசன் வந்து அம்பாளை திருமணம் செய்து கொண்டார் என தல வரலாறு கூறுகிறது.

கோவில் அமைப்பு




ஏராளமான சுதைச் சிற்பங்களுடன் கூடிய ஏழு நிலை கொண்ட ராஜகோபுரம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோபுரத்திற்கு பக்கத்தில் சிவகர தீர்த்தம் உள்ளது. கோபுர நுழைவு வாயிலைத் தாண்டி உள்ளே சென்றால், உயரத்தில் பலிபீடம் செப்பு கவசத்துடன் கொடிமரம் மற்றும் நந்தி உள்ளது. இங்கிருந்து ஈசனை தரிசிக்கலாம். இங்குள்ள ஈசன் சுயம்பு மூர்த்தியாக தோன்றியவர் எனச் சொல்கிறது தல வரலாறு.

வெளிப்பிரகாரத்தில் துவார விநாயகர், துவார சுப்பிரமணியர் அடுத்து உள்ளே இடதுபுற உள்சுவற்றில் சந்திரன், திருநாவுக்கரசர் (அப்பர் அமர்ந்த நிலையில்) உற்சவ மூர்த்தி சன்னதிகள். வேறு எந்த சிவாலயத்திலும் அப்பர் அமர்ந்தபடி இருப்பதில்லை! உட்பிரகார சுவற்றில் 63 நாயன்மார்கள் சன்னதி.

தல விநாயகர்

அம்பாள் ஈசனை வழிபட்டபோது உதவி செய்தமையால் கையில் பாதிரி மலருடன் காட்சியளிக்கிறார் கன்னி விநாயகர். உள்சுற்றில் உற்சவ திருமேனிகள் சன்னதிகள். வியாக்கிர பாதர், அகத்தியர் பூஜித்த விநாயகர், மீனாட்சி, சுந்தரேஸ்வரர், வள்ளி, தெய்வானை சமேத ஆறுமுகர் சன்னதிகள் உள்ளன.

மூலவர் சன்னதியைச் சுற்றி வரும்போது கஜலட்சுமி சன்னதியை அடுத்து துர்க்கை, கோஷ்டமூர்த்தமுள்ள இடத்தில் அருந்தவ நாயகி சன்னதி உள்ளது. சன்னதியில் உருவம் ஏதும் இல்லாமல் பீடம் மட்டுமே உள்ளது. காரணம் இத்தலத்தில் அம்பாள் அருவத்தில் தான் ஈசனை வழிபட்டாள் என்பதற்காக. கோவிலை ஒட்டிய சப்த மாதர் சன்னதி உள்ளது.





சிவகரை தீர்த்தம்

சிவன் சித்தராக இருந்து விளையாடி கை வைத்த இடமே சிவகரை 10 தீர்த்தமானது. இதில் கங்கையின் ஒரு கூறு கலந்தது. வாஸ்துபடி ஈசானிய மூலையில் இந்த தீர்த்தம் இருப்பது விசேஷமானது.

அப்பர்

மகேந்திரவர்மன் என்ற மன்னன் கிபி (600—630) அப்பரை கல்லில் கட்டி கடலில் தள்ளியபோது, 'கற்றுறுணைப் பூட்டி ஓர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயமே!' எனப் பாடித் துதிக்க அக்கல்லே தெப்பமாக மாறி கடலில் மிதந்து வந்து கரை ஏற்றிட பார்த்தவர்கள் மகிழ்ந்து வரவேற்றனர். அந்த இடம் 'கரையேறிவிட்ட குப்பம்' என்று அழைக்கப்படுகிறது.

கரையேறிய அப்பர், 'ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய்..' என்ற பதிகம் பாடி வழிபட்டார். இத்தலத்தில் தான் திருநாவுக்கரசை ஞானசம்பந்தர் முதல் முதலில் அப்பர் என்று அழைத்தார்.

மாணிக்கவாசகர்

பாடலீஸ்வரரை தரிசிக்க மாணிக்கவாசகர் வந்தார். அப்போது கெடில ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஆதலால் ஈசனைத் தரிசிக்க முடியவில்லை! இருந்தாலும் ஈசனை தரிசிக்க வேண்டும் என்று அங்கேயே மூன்று நாள் காத்திருந்தார். ஆனாலும் வெள்ளம் வடியவில்லை! அதனால் தன் நிலையைக் கூறி அங்கிருந்தபடி ஈசனைப் பிரார்த்தித்தார்.

அப்போது ஈசன் சித்தர் உருவில் தோன்றி மாணிக்கவாசகரை நீர் மேல் நடந்து வருமாறு பணித்தார். ஆனால் மாணிக்கவாசகரோ பயத்தினால் அங்கேயே நின்றிருந்தார். உடனே சித்தர் வடிவில் இருந்த ஈசன் மாணிக்கவாசகரை கண்ணை மூடும்படி கூறிவிட்டு பிரம்பு ஒன்றை ஏவி பாடலிவனம் நோக்கி கெடிலம் ஆறு வராமல் திசை திருப்பி ஓடச் செய்தார். கண் விழித்த மாணிக்கவாசகர் ஈசனின் கருணையை நினைத்தபடி இத்தலத்திற்கு வந்து வழிபட்டதாகத் தல வரலாறு கூறுகிறது.




பள்ளியறை

எல்லா சிவன் கோயில்களிலும் அம்பாள் சந்நிதி அருகில் பள்ளியறை அமைந்திருக்கும். பள்ளியறை இல்லாத கோவில்களும் உண்டு. எடுத்துக்காட்டு திருவானைக்கா ஜம்புகேஸ்வரர். ஆனால் இங்கு சன்னதி அருகில் பள்ளியறை அமைந்து இருப்பதுடன் நாள்தோறும் அம்பாளே பள்ளியறைக்கு எழுந்தருள்வது இத்தலத்தில் மட்டுமே!

வியாக்ர பாதர்

மத்தியந்தன முனிவர் மகன் போதித்து வழிபட்ட போது பாதிரி மரங்களின் மீது ஏறி பூக்களைப் பறிப்பதற்காக தனக்கு புலியின் காலும் கையும் வேண்டும் எனக் கேட்டு பெற்றதனால், வியாக்ரபாதர் என்னும் புலிக்கால் முனிவர்



ஆனார். அதனால் இத்தலம் பாதிரிப் புலியூர் என்னும் பெயர் பெற்றது. முடக்கால் உள்ள முயலுரு பெற்ற மங்கண முனிவர் பல நாள் இத்தலத்தில் தங்கி ஈசனைப் போற்றி வணங்கிட, நல்லுரு கொண்டதாக கொண்டதாம்! இது அக்னி, கங்கை போற்றிய தலம் ஆகும்.

கட்டிடக்கலை

இக்கோயில் ஆயிரம் வருடத்திற்கு மேல் 2000 வருடத்திற்குள் உட்பட்டது. தென்னிந்திய கட்டிடக்கலை வடிவம். 5 நூற்றாண்டுகளுக்கு முன் பல மன்னர்கள் திருப்பணிகள் செய்துள்ளனர். அதன் பின் பல்லவர், சோழர்கள் காலங்களில் கட்டப்பட்டுள்ளது.

பேறுபட்டவர்கள்

அகத்தியர், வியாக்ரபாதர், மங்கண முனிவர், உபமன்னியர், ஆதிராசன் ஆகியோர் பூஜித்து பேறு பெற்ற தலம். இத்தலத்து முருகனை அருணகிரிநாதர் திருப்புகழில் போற்றிப் பாடியுள்ளார்.

திருவிழா

சித்திரை— இளவேனில் வசந்த விழா அப்பருக்கு 10 நாட்கள், வைகாசி— விசாகப் பெருவிழா, ஆனி— மாணிக்கவாசகருக்கு விழா 10 நாட்கள், ஆடி— அம்பாளுக்கு ஆடிப்பூர விழா 10 நாட்கள், புரட்டாசி— நவராத்திரி 10 நாட்கள், ஐப்பசி— அன்னாபிஷேகம், கார்த்திகை— சோமவார வழிபாடு, மார்கழி— தனுர் மாத விழா, திருவாதிரை விழா, தை— வெண்ணையாற்றில் தீர்த்தவாரி, தை அமாவாசையில் கடல் தீர்த்தவாரி, மாசி— மாசிமகம், கடல் தீர்த்தவாரி,




பிரார்த்தனை

இத்தல ஈசனை வழிபட்டால் மன நிம்மதி கிடைக்கும். உடல் சம்பந்தப்பட்ட எந்த நோயும் நீங்கும். குழந்தை வரம் மற்றும் குடும்ப ஐஸ்வர்யம் கிட்டும். விரதம் இருந்து சிவகரை குளத்தில் குளித்து பூஜித்தால் நினைத்தது நடைபெறும். அம்பாள் தவம் செய்து ஈசனின் கரம் பற்றிய தலம் என்பதால் இங்கு வந்து வழிபட்டால் பிரிந்த தம்பதியர் ஒன்று சேர்வர்.

நேர்த்திக்கடன்

இறைவனுக்கு நல்லெண்ணெய், திரவியப் பொடி, பால், தயிர், பழச்சாறு, இளநீர், பஞ்சாமிர்தம், சந்தனம், பன்னீர், திருநீறு இவற்றால் அபிஷேகம் செய்யலாம். தூய வஸ்திரம் சாற்றி வழிபடலாம். ஒவ்வொரு கார்த்திகை திங்கள் கிழமைகளில் சங்காபிஷேகம், கலசாபிஷேகம் செய்யப்படுகிறது. ரூபாய் 500 செலுத்தி தங்கக் கவசம் நேர்த்திக்கடன் செய்யலாம். அமாவாசையில் காலபைரவருக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்படுகிறது.



இத்தலத்திற்கு ஒருமுறை வணங்குவதற்கு இணையானது திருவண்ணாமலையில் எட்டு முறையும், சிதம்பரத்தில் மூன்று முறையும், காசியில் 16 முறையும் சென்று வணங்குவதற்கு இணையானது.

கோயில் நேரம்:

தினமும் காலை 6 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 8.30 மணி வரையும் திறந்திருக்கும்.


இருப்பிடம் — கடலூர் பேருந்து நிலையத்திலிருந்து ஒரு கி.மீ. தூரத்திலும், திருப்பாதிரிப்புலியூர் ரயில் நிலையத்திலிருந்து அரை கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது.

(தொடரும் வலம்.....)

# புத்தக விமர்சனம்

## அணுக்கி

நூலாசிரியர்: **தேன்மொழி**




விலை : ரூ. 200

வெளியீடு:

மணற்கேணிப் பதிப்பகம்

தொடர்புக்கு:
**No: 7 , Rathinasamy Layout**
**Maharajapuram**
**Villupuram – 605602**
**PH: 63827 94478**


*'அணுக்கி' என்ற முதல் நாவலை வடித்திருக்கும் நூலாசிரியர் தேன்மொழி, ஊர்கள் சிறிதாயும் வயல்கள் பெரிதாயும் விரிந்து கிடக்கும் கீழத்தஞ்சையில் உள்ள பிலாவடி மூலை என்கிற கிராமத்தின் நிலவியலுக்குள்ளே நின்றபடி, கல்வெட்டு கூறும் வரலாற்றைப் புறந்தள்ளி, மக்களின் சொல்கதையின் ஊடே தொடர்ந்து வரும் வரலாற்றையும், புறக்கணிக்கப்பட்ட மக்களின் கதைகளையும் வரலாற்று ஆவணமாக கொண்டுவந்திருக்கிறார்.*

*காவேரி பாயும் மண், பொன் விளைந்த பூமி. இதில் கனிம வளம் தேடிக் குழாய் பதிக்க அனுமதிப்பதா? என்கிற நியாயமான கேள்வியை எழுப்புகிற நூலாசிரியர் தேன்மொழி, ஆயிரம் பக்கங்களுக்கு மேல் எழுத வேண்டிய பல்வேறு விஷயங்களை 145 பக்கங்களுக்குள் எழுதியிருக்கிறார். வரலாறு, கோயில் கலை, தொன்மம், கவிதை, பெண்ணியம், தலித்தியம் எனக் கலந்து நாவல் தமிழ்ச் சூழலில் ஒரு புதிய படைப்பாகப் தந்திருக்கிறார்.*

# மென்சிவப்பு உலகம்

குதிகாலை ஊன்றி
மென்சிவப்பு முழுநீளச் சுருக்குப் பாவாடைசுழலச்
சுழன்றுகொண்டேயிருக்கிறாள் சிறுமி
பாவாடை ஒரு வட்டக் கூம்பாகச் சுழல்கிறது
அவள் கண்களின் முன்
வீடு சுழல்கிறது
மரங்கள் சுழல்கிறது
வானம் சுழல்கிறது
மென்சிவப்பு நிறத்தில்
அவள் உலகம் சுற்றிக் கொண்டிருப்பதை
அணுவணுவாய் ரசித்துக் கண்மூடி
விகசித்துச் சிரிக்கிறாள்
ஒரு கணம் நின்று
அவள் கண் மூடிக் குனியும் அத்தருணம்
அவளுள்
அவள் வீடும், மரங்களும்
நீலவானமும்
இன்னமும் மென்சிவப்பில்
சுழன்று கொண்டேயிருக்கின்றன

**தாட்சாயிணி**


VARSHA™
IDLI/DOSA BATTER
Eat Fresh!
Eat the Best!!!
VARSHA
1Kg
Traditional taste that Lingers
VARSHA
VARSHA

கட்டுரை



# மரபு வழி

பள்ளி வகுப்பறைகள் பயன்மிகு நாற்றங்கால்கள். அவை சமூக வயல்களில் நடவுசெய்தற்குரிய மனிதவுயிர்களாம் இளம்பயிர்களைப் பக்குவப்படுத்தி வளர்ப்பதற்கான நாகரிகக் கூடங்கள். வழிபாட்டுத் தலங்களிலும் புனிதமிக்கவை அவை என்பதனால்தான், ‘பள்ளித் தலம் அனைத்தும் கோயில் செய்குவோம்’ என்று பாடினார் மகாகவி பாரதியார். எருவிட்டு நீர் பாய்ச்சி, வேலி போட்டுக் காக்கின்ற பயிர்களிடையே களைகளைக் களைந்து பேணக்கூடிய பெரும்பணியை, கல்வி தருநிறுவனர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும், கூடிச் செய்து வருகின்றனர். பல்லாண்டு காலம் அறப்பணியாக, பல்வேறு சான்றோர்களின் அர்ப்பணிப்புத் திருப்பணியாக, இப்பணி நீடித்து வந்தது. மனிதகுலம் அறநெறியை நிலைநிறுத்திக் காத்தது.

அண்மைக்காலமாய், அதுவும் கரோனா நோய்த்தொற்றின் முடக்கத்திற்குப் பிறகு, பயில்வோரின் மனநிலையும், பயில்கிற ஆர்வமும் தடம் மாறித் தடுமாறு இருக்கிற நிலையினைப் பார்க்கிறோம். வகுப்பறைகளில் மனப்பிறழ்ச்சியுடன் நடந்துகொள்கிற மாணவர்கள் ஒருபுறம், சொல்லமுடியாத மனஅழுத்தத்தின் காரணமாக, அசட்டுத்தனமான துணிச்சலில் தற்கொலைக்கும், அதற்கு அஞ்சுவோர் போதைப் பயன்பாட்டிற்கும் ஆளாகிவிடுபவர்கள் மறுபுறம். இரண்டுமற்றவர்களின் நிலைப்பாடோ, மதில்மேல் பூனை. ஒரு கட்டத்திற்குமேல், பெற்றோர்கள் ஏதும் சொல்ல முடியவில்லை. பாடம் கடந்து ஆசிரியர்களால் பேச முடியவில்லை. முடிந்தவரையில் இவர்களை முன்னேற்றப் பாடுபடும் கல்விசார் அமைப்புகளின் நோக்கமும் முழுதாகத் துணைபுரிய முடியாத நிலையில், இனிவரும் தலைமுறை என்னாகுமோ என்கிற கவலை, சமூக அக்கறை உள்ளவர்களைச் சூழ்ந்திருக்கிறது.

பணி செய்து பணம் சம்பாதிக்கக்கூடிய இயந்திரங்களை உற்பத்தி செய்யும் கூடங்களாகவே இன்று வகுப்பறைகள் ஆக்கப்படுகின்றன. அதிக மதிப்பெண் என்கிற ஒற்றைப் புள்ளியை மட்டுமே குறிவைத்து அசுர வேகத்தில் செலுத்தப்படுகிற அம்புகளாக இளந்தலைமுறையினர்








# நிற்போம்

## கிருங்கை சேதுபதி

'எது செய்தேனும் பணம் குவி; எப்படியாயினும் முன்னுக்கு வா' என்பதே அவர்களுக்குப் போதிக்கப்படும் உபதேசம். அதற்கு மாற்றாய், 'இதைச் செய்யாதே; அங்கே போகாதே' என்று சொல்கிற அறிவுரைகள் அவர்களிடம் எடுபடுமா?





கைப்பேசிகளின் பயன்பாடுகளைக் கடும் நடவடிக்கைகளின்மூலமாகக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த நாம், கல்வி கற்கும் சாதனங்களாக அவற்றைக் கொடுத்து, அளவுக்கு அதிகமாய்ப் பழக்கப்படுத்திவிட்டோம். ஆழப் பதிந்த அந்தப் பழக்கத்தில் இருந்து அவர்களால் மீள முடியவில்லை. தடையற்ற உள்ளீடுகளைத் தந்து, அவர்களைத் தன் வயப்படுத்தி அடிமையாக்கிவிட்ட கைப்பேசிகளின் கைகளில் குழந்தைகளின் எதிர்காலம் அடங்கிக் கிடக்கிறது; முடங்கியும் இருக்கிறது.


கலந்து பழக வேண்டிய வகுப்பறைத் தோழமைகள், கூடப் போட்டியிடும் எதிரிகளாக நிலை நிறுத்தப்படுகிறார்கள். ஒழுக்கம் தொடர்பாகக் கடுமையாக நடந்துகொள்ளும் ஆசிரியர்கள், இரக்கம் இல்லாத அரக்கர்களாக ஆக்கப்படுகிறார்கள்.

உடலையும் மூளையையும் மட்டுமே அவர்கள் பயன்படுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு மனம் என ஒன்று இருப்பதைப் பலரும் மறந்துவிடுகிறார்கள். மருத்துவத் துறைக்கு முன்னுரிமையும் மற்ற துறைகளுக்கு அடுத்த உரிமையும் கொடுத்து, முடிந்தால் அயலகங்களுக்கு ஏற்றுமதி செய்து அங்கேயே வாழ்விக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

தாயையும் தந்தையையும், தாயகத்தையும் மறந்து, பேயாய் வேலை செய்யத் தயாரிக்கப்படும் இயந்திரங்களான பிள்ளைகளுக்கு ஆசிரியர்கள் மட்டும் எப்படித் தெய்வமாகத் தெரிவார்கள்? பணத்தை விதைத்து பணத்தை அறுவடை செய்யும் பணப் பயிராகக் கல்வி ஆக்கப்பட்ட பிறகு, குணத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்?



எண்ணப்படுகிறார்கள். கண்டிக்கக் கூடிய சுதந்திரம் பெற்றோர்களுக்கும் இல்லை. இந்த வயதில் இவர்களுக்கு என்ன தேவை என்பதை எடுத்துச் சொல்ல, நல்ல வழிகாட்டியாகும் இலக்கிய நூல்கள் இவர்களை எட்டுவதே இல்லை. தெய்வ பக்தியும் இல்லை; தேசபக்தியும் இல்லை. பொழுதுபோக்குவது ஒன்றே வாழ்க்கை என்ற நிலையில், முதலில் சோம்பலும், தொடர்ந்து விரக்தியும் வந்து சூழ்ந்துவிடுகின்றன.




அவற்றின் வழியாக, முதலில் மறதியும், பின்னர் மரத்துப்போகிற தன்மையும் வாய்த்துவிடுகின்றன. அதனை எப்போதும் நிலைநிறுத்த, ஏதாவதொரு போதை வேண்டும். திரைக்காட்சிகளே இவர்களுக்கு உற்சாகத் தூண்டல்கள். பயந்து ஒதுங்கிச் செய்ய வேண்டியவற்றை, படு துணிச்சலாக, பகிரங்கமாகச் செய்கிற அசட்டுத் தைரியம் வந்துவிடுகிறது.

வயிற்றுப்பாட்டுக்கு வழி செய்யும் தொழிற்கல்வி தேவைதான். ஆனால், வாழ்க்கைப் போக்கைச் செம்மைப்படுத்தும் இலக்கியக் கல்வியும் இன்றியமையாதது அல்லவா? வயிற்றுப்பாட்டுக்கும் வாழ்க்கைப்பாட்டுக்கும் துணையாகும் தாய்மொழியைப் புறந்தள்ளிவிட்டு, மொழிசார் வகுப்புகளைக் குறைத்துவிட்டு, தொழிற்கல்வியை மட்டுமே கற்றுக் கொடுக்க வேண்டும் என்கிற நிலைப்பாடு இப்போது அதிகரித்து வருகிறது.

தொழில் செய்ய உடல் இன்றியமையாததுபோல், ஒன்றிச் செய்யும் மனமும் வேண்டும். தொழில் செய்பவன் தொழிலாளி. அவன் இயந்திரம் அல்லன். மனம் என்பதை





அடியாகக் கொண்டே மனிதன் என்ற பெயர் அவனுக்கு நிலைத்திருக்கிறது. 'நிலைத்த' என்னும் பொருள் தரும் 'மன்' என்ற சொல்லே, அதற்கு வேர். மனத்தைப் பேணினால்தான் மனிதத்தைப் பேண முடியும். மனிதம் புனிதம் எனப் பொலிய வேண்டுமெனில், மரபுசார் மொழிக்கல்வி வேண்டும்.

நிலவுக்கு விண்கலம் அனுப்பி வெற்றி கண்ட விஞ்ஞானிகளுக்கு, அறிவுசார் ஆற்றல் நிறையவே இருந்தது. கூடவே, தோல்விகள் கண்டு துவளாமல், மீண்டும் முயற்சி செய்து வெற்றியை எட்டவேண்டும் என்கிற விழிப்புணர்வை, உத்வேகத்தை உண்டாக்கியது அவர்களின் மனம் தான்.

அத்தகு மனவலிமை கொண்ட மகத்தான மனிதர்களின் வாழ்வும் வரலாறும், அவரவர் தாய்மொழிகளில் அறிந்துகொள்ள உதவும் மரபுசார் மொழிப்பாடம் இல்லையெனில், அகவுணர்வுகள் எப்படிச் சீராகும்? புறச் சாதனங்களான பொழுதுபோக்கு மின்சாதனங்கள் மட்டுமே போதும் என்று கருதிவிடலாகாது. டாக்டர் அப்துல்கலாம் திருக்குறளையும், பாரதியின் கவிதைகளையும், ஔவையாரின் அறவுரைகளையும் குழந்தைகளிடம் கூறத் தவறியதே இல்லை. காரணம், அவைதான் நாற்றங்காலில் வளரும் இளம்பயிர்களுக்கு ஏற்ற உரம் என்று கருதியதுதான்.

நோய்களில் இருந்து உடலைத் தற்காத்துக் கொள்ள, உணவு எவ்வாறு எதிர்ப்பாற்றலை ஏற்படுத்திக் கொடுக்கிறதோ, அவ்வாறே உள நோய்கள் தாக்காமல் தற்காத்துக் கொள்ள உணர்வுக்கு ஆற்றல் கொடுப்பவை அறநூல்கள்; அவற்றை அடிநாதமாய்க் கொண்டெழும் இலக்கிய ஆக்கங்கள். அவற்றைப் பயிற்றும் கல்விக்கூடங்களுக்கு அப்பால், கலை


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
தீபாவளி
ஆண்டுதோறும் வரும்
ஒளிவெள்ளத்தில்...
துன்பம் தூரபோகட்டும்,
சூழ்ச்சி சூறாவளியாய் விலகட்டும்,
தீமை தீண்டாமல் போகட்டும்...
நன்மைகள் பல பெற....
கொண்டாடுவோம் தீபாவளியை
தீபாவளி
வாழ்த்துக்கள்




இலக்கிய அமைப்புகளும் அழகாகச் சொல்லிக் கொடுக்கின்றன; அதற்காகவே அவை பயிலுபவர்களை முன்னிறுத்திப் போட்டிகள் நடத்துகின்றன.

‘விளையாட்டு, கலை, இலக்கியம் முதலான துறைகளில் இறங்கிவிட்டால், கவனம் மாறிவிடும்; அதிக மதிப்பெண்கள் பெறும் நோக்கம் குலைந்துவிடும்’ என்று எந்தப் போட்டிகளுக்கும் அனுப்ப வேண்டாம் என்கிற போக்கு, இப்போது எழுந்திருக்கிறது.

எந்த நேரமும் பாடப்புத்தகங்களையே பயின்று கொண்டிருக்கக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் பிள்ளைகள். எத்தனை சுவையோடு சமைத்தாலும் ஒருவகைப்பட்ட உணவையே திரும்பத் திரும்ப உண்பதில் ஒருவகை சலிப்பும் வெறுப்பும் வந்துவிடும் என்று உணர்ந்துகொள்கிற நம்மால், இப்படி, ஒரே வேலையைத் திரும்பத் திரும்பச் செய்யச் சொன்னால் என்ன ஆவார்கள் என்று புரிந்துகொள்ள முடியாதா? பொழுதுபோக்க, மின்னணுச் சாதனங்களை வாங்கிக்




கொடுக்கும் நம்மால், அன்புடன் பேசும் பொழுதுகளை ஒதுக்க இயலாதா? பேச்சைத் தொடங்கிவிட்டாலே, படிப்பு, மதிப்பெண், தரம் என்று வந்துவிடுகிறபோது, பிள்ளைகள் அலுத்துவிடுகிறார்கள். மனம் விட்டுப் பேச உரிய தோழமைகள் இல்லை. உறவுகளுடன் கலந்து பழக, விடுமுறை எடுக்கப் பணிநாட்கள் அனுமதிப்பதில்லை. விடுமுறை நாட்களிலும் பல மடங்காக வீட்டுப் பாடங்கள்.

உடற்சோர்வை விடவும் உளச் சோர்வு மிகுந்து மன அழுத்தங்களுக்கு ஆட்படும் குழந்தைகளுக்கு, தேர்வு வைத்து மதிப்பெண் வழங்காமல், நீதி புகட்டும் போதனை வகுப்புகள் முன்னர் நடத்தப்பட்டன; அறம்சார் கதைகள் சொல்லப் பட்டன. ‘நேரான பாதை சீராக இருக்கக் குறுக்கு வழியில் செல்ல வேண்டாம்’ என்பதற்காகச் சொல்லிக் கொடுக்கப்பட்ட சின்னஞ்சிறு கதைகள், அவர்களின் வாழ்க்கைப் பாதையைச் செப்பம் செய்தன.

‘என் பாடப் புத்தகங்களைத் தவிர வேறு எதையும் படிப்பதில் எனக்கு விருப்பம் இருந்ததில்லை’ என்று கூறிய காந்தியடிகளை, பாடப்புத்தகங்களுக்கு அப்பால் ஒரு புத்தகம் கவர்ந்து இழுத்தது. ‘சிரவண பித்ரு பக்தி நாடகம்’ என்பதுதான் அது. பலமுறை படித்தார். அதைப் படக்காட்சியாக்கிய நிகழ்வில் பங்கேற்றார். பார்வை இழந்த தாய், தந்தையரை, சிரவணன் காவடியில் வைத்துக்கொண்டு தூக்கிச் செல்வதை இளம் காந்தி படக்காட்சியாகப் பார்த்தார்.

அக்காட்சி அவர் மனத்தை விட்டு அகலவே இல்லை. அந்திமக் காலத்தில் பெற்றோரை எப்படி அக்கறையோடு கவனித்துக்கொள்ள வேண்டும் என்கிற பாடத்தை அந்த நூலும் காட்சியும் அவருக்குக் கற்றுத் தந்தன. அப்படியே, சத்தியம் தவறாமல் வாழவேண்டும் என்கிற சிந்தனையை, அரிச்சந்திரன் நாடகம் அவருக்குள் விதைத்தது. மனிதராய்ப் பிறந்த காந்தி மகாத்மா காந்தியாக வாழ்ந்தார்; வரலாற்றில் நிலைத்தார். இவர் போல் எத்தனை சான்றோர்கள், நம்முன் வாழ்ந்தவர்கள்; அவர்களின் சரித்திரங்களைப் பிள்ளைகள் கற்றுப் பின்பற்ற வேண்டாமா?

எனவே, ஆண் — பெண் பேதம் கடந்து, ஜாதி, மத, இன, மொழி எல்லைகள் கடந்து, மனிதம் புனிதமாக இத்தகு வகுப்புகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். இதுவே இளந்தலைமுறையினரை இப்போது சீர்படுத்த இன்றியமையாத தேவைகள்.

கவிதை

# அனாமதேயமாக காப்பி குடித்தல்

குதிகாலை ஊன்றி
என் நினைவின் ஓரங்களில்
காப்பியின் பழுப்பு
சிற்றலையாய் மோதுகிறது.
சொகுசான தூக்கத்தில்
புரண்டு கொண்டிருக்கும் நான்
முழுவதும் விழிப்பதை சில நொடிகள்
தள்ளிப் போட முயற்சிக்கிறேன்.
'காபி' என்றவள்
புன்னகைக்கும் குரலில் கேட்கிறாள்.

பரிமாறும்
அந்தக் காப்பியைப் போலவே
பழுப்பின் தீற்றோடு
செழுமையும் கருமையும் கொண்டவள்.
உருவற்ற நகரில்
நியான் சத்தங்களுக்கிடையே
மெலிதான புழுக் கூண்டாய்
நீலத் திரைகள் மூடிய
எங்கள் அறையில் புன்னகைத்து
அதை உறிஞ்சுகிறேன்.

தொலைவுப் பகுதிகளிலிருந்து
செய்திகளை தருகிறது.
தலையணை அருகிலுள்ள
அதிதெளிவு திரை.
நிலநடுக்கம், தீவிரவாதிகள்,
பெருந்தொற்றும் ஊரடங்கும்,
போராட்டங்கள்.
நகரின் விகாரமான அனாமதேயம்;
ஆனாலும் அதைத் தொட்டிலாக்கி
என் அறையெனும் புழுக்கூட்டில்
பாதுகாப்பாகவும் சொகுசாகவும்
இருக்கும் நான் செய்திகளைப்
படித்து தலையசைத்து விட்டு
காப்பியை உறிஞ்சுகிறேன்

நீண்ட எறும்பு வரிசையாய்
கணக்கிட முடியாத தூரங்கள்
நடக்கும் புலம் பெயர்வோர்.
வாழவைக்கவும் வரவேற்கவும் செய்யாத
நகரங்கள் தாண்டி

செங்கல், சுண்ணாம்பு, கண்ணாடி,
தாண்டி செல்கின்றனர்.
நம் நகரத்தின் உயிர் நாளங்கள்.
அவர் உழைப்பில்லாமல்
எதுவும் இயலாது இங்கே.
நீலம் பாரித்த நம்
பார்வைத் திரைகளுக்குப் பின்னால்
இவையெல்லாம் மறைந்திருக்கும்..

நேற்று என் ஊரில்
ஒரு ஆணவக் கொலை.
உயர்சாதிப் பெண்ணும் கீழ்சாதிப் பையனும்.
தண்டவாளத்தில் இறப்பு.
ஒரு குடும்பத்தின்
பழிவாங்கும்
கவுரவம்.
என் காதலியை
நோக்கும்போது
ஒரு கணம்
நடுங்குகிறேன்.
பஞ்சாகக் கலையும்
மேகம் போல்
அவள் அலைக்
கருங்கூந்தல்.
அவளின் ஆழ் மைக்கண்.
சூரிய ஒளிபட்டு வானவில் வண்ணம்
காட்டும்.
சாக்லேட் பழுப்பான சருமம்
இசையாய் எழும் அவள் மென் குரல்.

இரண்டு பெண்கள்
அடையாளங்கள் ஏதுமில்லாமல்
ஒரு அறையை
ஒரு காதலை
ஒரு வாழ்க்கையைப் பகிர்ந்து கொண்டு
பெருநகரின் ஜன சமுத்திரத்தில்
கரைந்து போக முடிவதற்கு
வேறுபட்ட எங்களின் கடவுள்களுக்கு
நன்றி செலுத்துகிறேன்.

**கீதாஞ்சலி ஜாஷுவா**
தமிழாக்கம்: இரா. இரமணன்

# அறிவோம் தமிழர்

## தொ.மு.சி. என்றொரு தனித்துவ ஆளுமை

தமிழ் நவீன இலக்கியத்தின் மூலவர், தமிழ் முற்போக்கு இலக்கியத்தின் முன்னோடி தொ.மு.சி ரகுநாதனின் நூற்றாண்டின் நிறைவு இது. அரசியலிலும், இலக்கியத்திலும் தடம் பதித்த நெல்லைச் சீமையில் பாரதி, புதுமைப்பித்தனின் தொடர்கண்ணி ரகுநாதன். செல்வமும், செல்வாக்கும், கலை இலக்கிய மரபு மிக்க குடும்பம் அவருடையது. இளமை வாழ்வில் தீராத அறிவுத் தேடலும், அகன்ற வாசிப்பும் அவருக்கு வாய்த்தது. கூடவே நாட்டுப்பற்றும், சமூக உணர்வும் மேலோங்கிற்று. அவரின் நட்புத்தேர்வு இடதுசாரி வட்டாரமானது. 1942—ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் மாணவனாகப் போராட்டக் களம் புகுந்தார். படிப்பு தடைப்பட்டது. டி.கே.சி., அ. சீனிவாசராகவன், மு. அருணாச்சலக் கவுண்டர் ஆகியோரின் தொடர்பும் வாய்த்தது.

திருநெல்வேலியில் ஒரே காலகட்டத்தில் முற்போக்கு இயக்கத்தில் தொழிற்பட்டவர்கள் நா. வானமாமலை, தொ.மு.சி. ரகுநாதன், தி.க. சிவசங்கரன் ஆகிய மூவர். ஓரிரு வயது வித்தியாசம் கொண்டவர்கள். நா.வா. முழுக்க ஆராய்ச்சி, நாட்டுப்புறவியல் சார்ந்து இயங்கினார். தி.க.சி. இலக்கியத் திறனாய்வைக் கைக்கொண்டு, தாமரை இதழ்வழி பணி செய்தார். ரகுநாதன் படைப்பாளர், திறனாய்வாளர், ஆய்வாளர் என்ற நிலைகளில் தன் செயல்பாடுகளை வகுத்துக் கொண்டார். ரகுநாதன் கல்விப்புலம் சார்ந்த ஆய்வுகளுக்கு வெளியே சமூகவியல் — வரலாறு சார்ந்த ஆய்வு முறைமைகளை உருவாக்கிச் செயற் படுத்தினார்.




திருநெல்வேலியில் 1923ஆம் ஆண்டு அக்டோபர் 20 அன்று, தொண்டைமான் முத்தையா — முத்தம்மாள் தம்பதியினருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தவர் தொ.மு.சி. ‘ரெங்கநாதர் அம்மானை’, ‘நெல்லைப்பள்ளு’ ஆகிய நூல்களை எழுதிய தமிழறிஞர் சிதம்பரத் தொண்டைமான் தொ.மு.சி.யின் தாத்தா. தந்தையார் ஓவியர் — ஒளிப்படக் கலைஞர்; ஆங்கிலத்தில் கவிதைகள் எழுதியவர். தொ.மு.சி.யின் அண்ணன் தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான், இந்திய ஆட்சிப்பணி அதிகாரியாக மட்டுமின்றி, மரபிலக்கிய ஆய்வாளராகவும் பயண இலக்கிய எழுத்தாளராகவும் விளங்கியவர். இப்படியான சூழலில் வாழ்ந்த தொ.மு.சி.க்கு இளம் வயதிலேயே புத்தக வாசிப்பும் எழுத வேண்டும் என்கிற ஆர்வமும் துளிர்த்ததில் வியப்பு ஒன்றுமில்லை.

அரசியல் ஈடுபாடு: பள்ளிப் பருவத்திலேயே ‘ஜவகர் வாலிபர் சங்க’த்தில் இணைந்த தொ.மு.சி, தனது நண்பருடன் இணைந்து ‘மார்க்சிஸ்ட் மாணவர் இயக்கம்’ என்ற பெயரில் மார்க்சியக் கருத்துகளைப் பரப்பும் பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். 1942இல் நாடுமுழுவதும் நடைபெற்ற ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தின் சார்பில், நெல்லையில் நடைபெற்ற ஊர்வலத்தில் பங்கேற்றுத் தடியடிக்குஆளானார். பிறகு, பொதுக்கூட்டத்தில் பேசியதற்காகக் கைதுசெய்யப்பட்டு, இரண்டு மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். படிப்பு தடைபடவே, சில மாதங்கள் தலைமறைவு வாழ்க்கை வாழும் சூழல் ஏற்பட்டது.

கல்லூரி ஆசிரியரான அ.சீனிவாசராகவன் மூலமாக நவீன இலக்கியத்தையும் பழந்தமிழ்இலக்கியத்தையும் கற்பதில் தொ.மு.சி—க்குஆர்வம் உண்டானது. சிறுவயதிலேயே கதைகளை எழுதத் தொடங்கியவரின் முதல் சிறுகதை, 1941இல் ‘பிரசண்ட விகடன்’ இதழில் வெளியானது. 1945இல் ‘புயல்’ எனும் தனது முதல் நாவலை வெளியிட்டார். இதழியல் பணியில் ஈடுபடும் ஆவலில் ‘தினமணி’யில் (1944) உதவி ஆசிரியராகவும் பின்னர் ‘முல்லை’ (1946) இலக்கியப் பத்திரிகையிலும் பணியாற்றினார். 1948இல் ‘சக்தி’ இதழில் சேர்ந்தார். எழுத்தாளர் கு.அழகிரிசாமியுடன் இணைந்து பணியாற்றிய காலத்தில், இருவருக்கும் இடையே இருந்த

# பெருமை

நட்பையும் இருவரது படைப்பின் சிறப்பையும் கண்டவர்கள் ‘இரட்டையர்கள்’ என்று இவர்களை அழைத்தனர்.

எதையும் மாற்றி யோசிப்பதும், புதிதாய் வடிப்பதும் அவரின் இயல்புகள். பேச்சு, படைப்பு, ஆய்வு, இயக்கம் ஆகிய யாவற்றிலும் முனைப்போடு செயல்படத் தொடங்கினார். தன் குடும்பம் சார்ந்த அறிமுகத்தை அவர் விரும்பியதில்லை. அவருக்கு அடையாளமாகிப்போன தொ.மு.சி — தொண்டைமான் முத்தையா என்ற முன்னொட்டைக் கூட அவர் விரும்பியதில்லை. சிதம்பர ரகுநாதன் அல்லது ரகுநாதன் என்பதே அவரின் ஏற்பாக அமைந்தது. இது அவரின் தனித்துவம். இறுதி வரை வணங்காமுடியாகவே வாழ்ந்தவர் அவர். ஞானச் செருக்கு அவரின் நடையில், உடையில், பேச்சில் வெளிப்படும். அவரின் படைப்பும் ஆய்வும் கூட இத்தளத்திலேயே இயங்கின. தான் கூறியதைத் தானே மறுத்தாலன்றி ஒப்பார். அதுவும் பிற்காலத்தில் நிகழ்ந்தது. எதையும் ‘உறுதிபட’ மொழிதல் அவரின் முதலும் முடிவுமான எழுத்துச் சூத்திரம்.



ரகுநாதன் எல்லா வகையிலும் விடுதலை உணர்வு கொண்டவர். கட்டுக்குள் இருக்க நேர்ந்தாலும் கர்ஜிக்கும் பேராளுமை அவருக்கிருந்தது. ஏறக்குறைய புதுமைப்பித்தனும் அவரும் இவ்வியல்பில் நாணயத்தின் இரு பக்கங்கள்.

இரா.காமராசு

பதினெட்டு வயதில் எழுதத் தொடங்குகிறார். முதல் பத்தாண்டுகள் இதழ்களோடு பயணிக்கிறார். தினமணி, முல்லை, சக்தி, சாந்தி ஆகிய இதழ்களில் அவர் பணியாற்றிய பத்தாண்டுகள் இளம் ரகுநாதனை தீவிர இலக்கியவாதியாக்கிற்று எனலாம். குடும்பச் சொத்தில் அவருக்குக் கிடைத்த உரிமைத்தொகையே ‘சாந்தி’ (1954 — 56) இதழுக்கு மூலதனமானது. இக்காலக்கட்டத்திலேதான் அவர் படைப்பில் தீவிரமாக இயங்கினார். கு. அழகிரிசாமியின் தோழமை அவருக்கு வாய்த்தது. சுந்தர ராமசாமி போன்றவர்கள் புதுமைப்பித்தனின் மறு வடிவமாக ரகுநாதனைக் கண்டார்கள். சிறுகதைகள், நாடகங்கள், நாவல்கள் படைத்தார்.





ரகுநாதனின் சிறுகதைகள் வடிவ நேர்த்தியும் கருத்து தேர்ச்சியும் மிக்கவை. தமிழின் ஆகச் சிறந்த கதைகளில் அவரின் சில சிறுகதைகளும் நிச்சயம்



அடங்கும். வென்றிலன் என்ற போதும், பிரிவு உபசாரம், ஆனைத்தீ, நீயும் நானும் போன்றவை முக்கியமானவை. தொன்மங்களைக் கையாள்வதும், எள்ளல் நடையும் அவரின் தனித்துவங்கள்.

புயல், முதலிரவு, கன்னிகா போன்ற தொடக்க கால நாவல்கள் உளம் சார்ந்து நவீன மனப் போராட்டங்களை முன்வைத்தன. பாலியலின் பன்முகத்தைப் பேசின. இவை அவரின் சோதனை முயற்சிகள். ஏராளம் விற்றுத் தீர்ந்தன. இவைகளில் முதலிரவு தடை செய்யப்படக் காரணம்கூட, விற்பனை குறித்த பொறாமைதான் என்ற தகவலும் உண்டு. இதன் தொடர்ச்சியாகத்தான் ‘பஞ்சும் பசியும்’ எனும் புதுமையானதொரு படைப்பை அளித்து, தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பிடித்தார். ‘பஞ்சும் பசியும்’ நாவல் எளிய தமிழ்ப் பாட்டாளிகளின் முகத்தை இலக்கியச் சித்திரமாக்கித் தந்தது. அதன் கலை அழகியல் கூறுகளின் போதாமையையும் விஞ்சித் தமிழில் புதுத்தடம் பதித்து நிற்கிறது.

அதே போல இருபத்து நான்காம் வயதில் ரகுநாதன் படைத்த ‘இலக்கிய விமர்சனம்’ தமிழில் இலக்கியத் திறனாய்வு குறித்த முதல் நூல். அழகியல் பார்வைகளை அள்ளித் தந்த நூல். கருத்தியலில் மட்டுமல்ல நடைச்சிறப்பிலும் கவர்ந்திழுத்த நூல். கல்விப்புல மேலைக் கோட்பாட்டு மரபிலான இலக்கிய விமரிசனங்களுக்கு மாற்றாகவும் இதனைக் கருத இயலும், இதில் நவீனத்துவக் கூறுகள் தென்பட்டாலும், பின்னர்தான் கொண்ட யதார்த்தவாத அணுகுமுறைகளுக்கு இந்நூலிலேயே ரகுநாதன் கட்டியம் கூறி விடுகிறார்.




அறுபதுகளின் தொடக்கத்தில் திராவிட இயக்க எழுச்சிக்கு மாற்றாக அல்லது இணையாக எழுந்த பொதுவுடைமை இயக்கப் பண்பாட்டுக்களத்தில் ரகுநாதன் முன்னிலை எடுக்கிறார். ஜீவா தொடங்கிய தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் எனும் பண்பாட்டு அமைப்பின் கொள்கையை முன் மொழிகிறார். இலக்கிய இதழுக்குத் ‘தாமரை’ எனப் பெயரிட்டு, இடதுசாரி இலக்கிய இதழாக மலர்ச்சியுற உதவுகிறார். ‘தமிழால் முடியும்’ என்று தாய் மொழிக்கல்விக்காக குரல் கொடுக்கிறார். தமிழ்நாடு முழுவதிலும் பட்டி மன்றங்கள், கவியரங்குகளில் முழங்குகிறார். அவரின் மேடைக்கவிதைகள் அதன் நிகழ்த்துக்கையால், உடல் மொழியால் புகழ் பெற்றன. கட்டணம் செலுத்திக் கவியரங்கம் காணும் நிலை கூட அன்று இருந்தது.

‘திரும்பவும் திரும்பவும் பிறப்பேன்’ எனும் புகழ் பெற்ற கவிதை —.

“அறிவொளி கொண்டு நான் வருவேன் — காணும்
அண்ட சராசரம் அனைத்தையும் மாந்தர்
இருகரம் அதனுள் வசப்படத் தருவேன்;




ஈசர்க்கு நிகராய் மனிதனைப் புரிவேன்."

அவரின் கம்பீரக்குரல் கேட்டோர் உள்ளங்களில் எதிரொலித்துக் கொண்டே இருக்கும்.

ரகுநாதனின் இரண்டு கண்கள் என பாரதியையும், புதுமைப்பித்தனையும் சொல்லலாம். தன் வாழ்நாள் முழுக்க இந்த இரு ஆளுமைகளையும் தோள்களில் சுமந்தார். வாளும் கேடயமுமாக அமைந்து ஆய்வுலகில் இவர்களை நிலை நாட்டினார். அதில் பெருமிதம் கொண்டார். பாரதியும் புதுமைப்பித்தனும் தமிழ் நவீனத்துவத்தின் முன்னோடிகள். மக்களின் மனச்சான்றாக வாழ்ந்தவர்கள். கலை இலக்கியப் பங்களிப்பு செய்தவர்கள். இவர்கள் 'பொன்னே போல் போற்றப்பட வேண்டிய முன்னோர்கள்' என்ற திடமான எண்ணம் அவருக்கு இருந்தது.

1952 ல் எழுதிய ' புதுமைப்பித்தன் வரலாறும்' 1999 ல் எழுதிய 'புதுமைப்பித்தன் கதைகள் — சில விமர்சனங்களும், விஷமத்தனங்களும்' புதுமைப்பித்தனை தமிழ்ச் சமூக வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் நிலை நிறுத்தும் முயற்சிகள். வாழ்க்கை வரலாறுகளில் புதுமையானது புதுமைப்பித்தன் வரலாறு. ஐம்பது ஆண்டுகள் கழித்து வெளியான 'விமர்சனங்களும் விஷமத்தனங்களும்' தமிழ் இலக்கிய உலகின் வர்க்க, வர்ண, கருத்து மோதல்களை நுட்பமாக முன்வைத்தது.


பாரதி ஆய்வுகளில் அவரின் 'பாரதி — காலமும் கருத்தும்' ஒரு மைல் கல். பல புதிய வெளிச்சங்களைத் தந்தது. சாகித்திய அகாதெமி விருதும் பெற்றது. அதே போல பாரதியும் ஷெல்லியும், கங்கையும் காவிரியும் ஆகிய பாரதி ஆய்வுகள் ஒப்பிலக்கியத்துக்கு அரிய கொடை எனலாம். பாரதி சிலபார்வைகள், பாஞ்சாலிசபதம் — உறை பொருளும் மறைபொருளும் போன்ற நூல்கள் பாரதி இயலுக்கு வளம் சேர்ப்பவை.




ரகுநாதன் தத்துவத்தில் ஈடுபாடு கொண்டவர். அடிப்படையில் மார்க்சியர். இந்தியத் தத்துவப் போக்குகளை அறிந்தவர். தருக்கவியலில் அவருக்கு நாட்டம் உண்டு. அவரின் ஆய்வுகளில் தடை விடை முறையும், விவாத முறையும் நிரப்பி இருக்கும். சமூக வளர்ச்சி நிலைகளை உள்வாங்கி இலக்கிய ஆய்வுகளை மேற்கொண்டார். 'இளங்கோவடிகள் யார்?' அவரின் அரிய அசுர முயற்சி. ஆனால் பெரிய அளவில் விவாதிக்கப்படாதது அவருக்கும் வருத்தமே. நுஃமான் போன்றவர்கள் எதிர் விமர்சனம் செய்தனர். அதை ரகுநாதன் நேர்மையுடன் அணுகினார். 'நான் சமுதாயவியல் கண்ணோட்டத்தில் பார்க்கிறேன். அவர் இலக்கியவியல் கண்ணோட்டத்தில் பார்க்கிறார்' என மறுமொழி தந்தார். தொடக்கத்தில் தமிழ் இலக்கியத்தின் தத்துவச் சார்புகள் குறித்து சரஸ்வதி இதழில் எழுதினார். திருக்குறள் குறித்து விரிவாக எழுத திட்டமிட்டிருந்தார். அதேபோல

அவர் நிரம்பப் பேசி எழுதாமல் விட்டது கம்பன். கம்பனில் இலயித்து அவர் பேசுவதைக் கேட்பதே இன்பம். மாற்றுப் பார்வைகள் பல அவரிடம் இருந்தன. அவை எழுதா ஆவணங்களாகவே போய் விட்டன.

சங்க இலக்கியம் தொடங்கி சமகால இலக்கியம் வரை ஆழங்கால்பட்ட ஆய்வு மனம் அவருக்கு இருந்தது. அதிகம் பேசப்படாத இடைக்கால — சிற்றிலக்கியங்கள் குறித்து 'சமுதாய இலக்கியம்' எனும் நூலினைப் படைத்தார். அவரின் இலக்கிய வாழ்வின் பெரும்பகுதி (1967 — 1988) சோவியத் நாடு செய்தித் துறையில் கழிந்தது. மொழிபெயர்ப்பு முழு நேரப் பணியானது, அவருக்கு பெருவிருப்பு இல்லை என்றாலும் அதையும் திறம்படச் செய்தார். மொழி பெயர்ப்பு நுட்பங்கள் அவருக்கு கைவந்தது. மொழிபெயர்ப்பு குறித்து சில வரையறைகளும் அவருக்கு இருந்தன. தாய் நாவல், லெனின் கவிதாஞ்சலி உள்ளிட்ட பல புகழ் பெற்ற சாகாவரமிக்க மொழிபெயர்ப்புகளை அவர் தமிழுக்கு வழங்கினார்.




இலங்கையின் முற்போக்கு இயக்கத்துக்கும் ரகுநாதன் உந்து சக்தியாகத் திகழ்ந்தார். சாந்தியும், சரஸ்வதியும், தாமரையும் ஈழத்தில் அதிகம் செல்வாக்கு பெற ரகுநாதனே காரணம். 1956—ல் மற்றும் 1983—ல் இலங்கைக்குச் சென்றார். க.கைலாசபதி கா. சிவத்தம்பி ஆகிய இரு அறிஞர்களை தமிழகத்தோடு தொடர்புபடுத்தி ஆய்வுலகில் வலம் வரச்செய்தார். இணைப்புப் பாலமாகத் திகழ்ந்தார். இலங்கையில் ஜீவா என்கிற பெயரும், ரகுநாதன் என்கிற பெயரும் பரவலாக பலரின் பெயர்களாக சூட்டப்பட்டுள்ளமையும் அவரின் சிறப்பை உணர்த்தும்.






ரகுநாதன் கடைசிவரை பொதுவுடைமைக் கட்சியில் இருந்தார். தொடக்கம் முதலே அவர் ஒரு கலகக்காரராகவும் திகழ்ந்தார். எதிர்க்கலாசாரத்தை வலியுறுத்தினார். அந்தோனியா கிராம்ஷியை வரவேற்றார். புதுமைப்பித்தன் வரிசையில் ரகுநாதனும் தமிழ்ச் சமூகத்தால் கொண்டாடப்பட வேண்டியவர். வழக்கமான மௌனத்தால் அவரின் நூற்றாண்டையும் கடந்து செல்வது துயரமே.

முன்னுதாரண நாவல்: கைத்தறி நெசவாளர்களின் துயரமிக்கவாழ்க்கைப் பாடுகளைப் பதிவுசெய்யும் வகையில் 'பஞ்சும் பசியும்' எனும் நாவலை 1951இல் எழுதியதோடு, அந்த நாவல் மூலமாகத் தமிழில் சோஷலிச யதார்த்தவாத நாவல் எனும் புதிய இலக்கியப் போக்கினையும் தொ.மு.சி.தொடங்கிவைத்தார். அந்த நாவல் 'செக்' மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டது. ஐரோப்பிய மொழி ஒன்றில் மொழியாக்கம் செய்யப்பட்ட தமிழின் முதல் நாவல் எனும் பெருமையைப் பெற்றதோடு, அப்போதே 50 ஆயிரம் பிரதிகள் விற்று, சாதனையும் படைத்தது.

பல்வேறு இதழ்களில் பணியாற்றிய தொ.மு.சி, தணியாத ஆர்வத்தோடு 'சாந்தி' எனும் முற்போக்கு



# தொ.மு. சிதம்பர ரகுநாதன்

**புனைப்பெயர்**

- திருச்சிற்றமபலக் கவிராயர்

**சிறப்புபெயர்**

- நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடி

**இதழ்**

- சாந்தி

இலக்கிய இதழினை 1954இல் தொடங்கினார். தமிழின் சிறப்புமிக்க எழுத்தாளர்களாகப் பின்னாளில் மிளிர்ந்த டேனியல் செல்வராஜ், ஜெயகாந்தன், கி.ராஜநாராயணன், சுந்தர ராமசாமி ஆகியோரின் தொடக்க காலப் படைப்புகளை 'சாந்தி' இதழில் வெளியிட்டு, அவர்களுக்கான சிறப்பான அறிமுகத்தை வழங்கினார் தொ.மு.சி.

1960இல் 'சோவியத் நாடு' இதழில் சேர்ந்து, ஏராளமான ரஷ்ய மொழிப் படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் பெரும் பணியைத் திறம்படச் செய்தார். மாக்சிம் கார்க்கியின் 'தாய்' நாவல், 'சந்திப்பு'சிறுகதைகள், மயாகோவ்ஸ்கியின் 'லெனின் கவிதாஞ்சலி' ஆகிய நூல்கள் அவருடைய சிறப்பான தமிழ் மொழிபெயர்ப்பினால் கவனம் பெற்றன. புதுமைப்பித்தன் நட்பு: எழுத்தாளர் புதுமைப்பித்தனின் நண்பராக இருந்த தொ.மு.சி., புதுமைப்பித்தனின் மறைவுக்குப் பிறகு, அவரது படைப்புகளைச் சேகரித்து வெளியிட்டார். 1951இல் புதுமைப்பித்தன் வாழ்க்கை வரலாற்றை எழுதினார். 1999இல் 'புதுமைப்பித்தன் கதைகள் — விமரிசனங்களும் விஷமங்களும்' எனும் நூலை எழுதி, அதுநாள் வரை புதுமைப்பித்தனின் படைப்புகள் பற்றிச் சொல்லப்பட்டுவந்த தவறான கருத்துகளுக்கு முற்றுப்புள்ளியும் வைத்தார். திருச்சிற்றம்பலக் கவிராயர் எனும் புனைபெயரில் தொ.மு.சி. கவிதைகளை எழுதினார். 'ரகுநாதன் கவிதைகள்', 'கவியரங்கக் கவிதைகள்', 'காவியப் பரிசு', 'தமிழா எப்படி?' ஆகிய நான்கு கவிதை நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

எழுத்தையே தன் வாழ்வாக வரித்துக்கொண்ட தொ.மு.சி. 1942 முதல் 1962 வரை 20 ஆண்டு காலம் எழுத்துத் துறையில் முழு வீச்சோடு இயங்கினார். சோஷலிச யதார்த்தவாத எழுத்தாளர் என்று பாராட்டப்பெற்ற தொ.மு.சி.சிறுகதை, நாவல், நாடகம் உள்ளிட்ட நூல்களோடு இலக்கிய விமர்சனம், இலக்கிய ஆய்வு நூல்களையும் எழுதியுள்ளார். 'பாரதி — காலமும் கருத்தும்' எனும் நூலுக்காக 1983இல் சாகித்ய அகாடமி விருது தொ.மு.சி.க்கு வழங்கப்பட்டது. தனது மொழிபெயர்ப் புகளுக்காக 'சோவியத் லேண்ட் நேரு விருது', தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 'தமிழ் அன்னை பரிசு' ஆகியவற்றையும் பெற்றார். ஒப்பிலக்கியத் துறையில் இன்றளவும் பேசப்படும் நூல்களாக விளங்கும் தாகூரோடு பாரதியை ஒப்பிடும் ஆய்வு நூலான 'கங்கையும் காவிரியும்', 'பாரதியும் ஷெல்லியும்' ஆகிய நூல்களைப் படைத்தளித்தார் தொ.மு.சி.




பொதுவுடைமை இயக்கத் தலைவரான ஜீவா, இலக்கிய விமர்சகர்களான கா.சிவத்தம்பி, க.கைலாசபதி, தவத்திரு குன்றக்குடி அடிகளார், எழுத்தாளர்கள் வல்லிக்கண்ணன், கிருஷ்ணன் நம்பி போன்ற பல அரசியல் — இலக்கிய ஆளுமைகளுடன் நட்புடன் பழகியவர்தொ.மு.சி. எழுத்தாளர் பொன்னீலனுடன் இணைந்து 'முற்போக்கு இலக்கிய இயக்கங்கள்' (1994) என்கிற புத்தகத்தையும்எழுதியுள்ளார்.தமிழ்யதார்த்தவாதப் படைப்பாளிகளின் முன்னோடியாக தொ.மு.சி. என்றென்றும் நினைவுகூரப்படுவார்.

# மழை நாள்

இந்த வாழ்க்கையே பிடிக்கவில்லையென
நினைக்கும் போது மழை வருகிறது
மழையில் விடுவதற்கென
சிறுவன் தயாரித்த
காகிதக் கப்பல் வருகிறது
யாரெனத் தெரியாத ஒருவனுக்கு
நனையாமலிருக்க குடையொன்றை
நீட்டுகிறது ஒரு கை
இப்போது இந்த வாழ்க்கை
பிடிக்கவில்லையென
சொல்ல நினைத்த வார்த்தைகளை
இழுத்துச் சொல்கிறது காகிதக்கப்பல்...
குடையொன்றை வாங்க
கடைநோக்கிப் பயணிக்கிறேன்
ஏதோ ஒரு குடையின் துணையோடு...
இந்த வாழ்க்கையைப்
பிடிக்கவில்லையென்பதை
பிடிக்காமல் செய்து விடுகிறது
ஒரு மழை!

**மு.முபாரக்**


படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com



# சிவகாமியின்

## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

### ”சிவகாமி எங்கே?” 30

ஆயனர் தமது பழைய சிற்ப வீட்டை அடைந்ததிலிருந்து நரக வேதனை அனுபவித்துக் கொண்டிருந்தார். மலையிலிருந்து விழுந்ததினால் முறிந்து போயிருந்த அவருடைய வலது கால் சொல்ல முடியாத வலியையும் வேதனையையும் அவருக்குத் தந்து கொண்டிருந்தது. சிவகாமியை இழந்ததினால் அவருடைய உள்ளம் அளவில்லாத துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தது.

மண்டபப்பட்டிலிருந்து ஆயனரும் சிவகாமியும் சக்கரவர்த்தி அனுப்பிய பல்லக்கில் அவசரமாகக் கிளம்பியபோது ஆயனரின் சகோதரியைப் பின்னால் சாவகாசமாக வண்டியில் வந்து சேரும்படி சொல்லியிருந்தார்கள். அதன்படியே அந்த அம்மாள் முக்கியமான வீட்டுப் பொருள்களுடன் ரதியையும் சுகரையும் வண்டியில் ஏற்றிக் கொண்டு பழைய அரண்ய வீட்டுக்கு வந்து சேர்ந்திருந்தாள். அந்த அம்மாள் அவ்விதம் முன்னாடியே வந்து சேர்ந்திருந்தபடியாலேயே ஆயனர் இன்னும் உயிரோடிருப்பது சாத்தியமாயிற்று.

அவருக்கு வேண்டிய சிகிச்சைகளையும் சிசுருஷைகளையும் அந்த அம்மாள் மிக்க பக்தி சிரத்தையோடு செய்து அவரை உயிர் பிழைக்கப் பண்ணியிருந்தாள். ஆனாலும் அவள் அடிக்கடி கேட்டு வந்த ஒரு கேள்வியானது புண்ணிலே கோலெடுத்துக் குத்துவது போல் அவருடைய இருதயத்தை நோகச் செய்து கொண்டிருந்தது.




அந்தக் கேள்வி, “சிவகாமி எங்கே?” என்பதுதான்.

சோகக் கடலில் ஆழ்த்தும் மேற்படி கேள்வியை நிறுத்துவதற்காக ஆயனர் ஏதேதோ மறுமொழி சொல்லிப் பார்த்தார். அவையொன்றும் சிவகாமியின் அத்தைக்குப் பிடிபடவே இல்லை. எனவே அவள் கேள்வி கேட்பதை நிறுத்தவில்லை.

இது போதாதென்று ரதியும் சுகரும் அடிக்கடி ஆயனரிடம் வந்து முகத்தைத் தூக்கிக் கொண்டு நின்று சப்தமற்ற குரலில் தங்களுடைய மௌனக் கேள்வியை அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆயனர் கடுமையான குரலில் அதட்டி அவர்களை அப்பால் போகும்படி செய்வார்.



சுகப்பிரம்மரிஷி இப்போதெல்லாம் அதிகமாகத் தம் குரலை வெளியில் காட்டுவதில்லை. சில சமயம் திடீரென்று நினைத்துக் கொண்டு பலமான கூக்குரல் போடுவார். அப்போது அவருடைய தொனி “சிவகாமி எங்கே?” என்று கேட்பதுபோலவே இருக்கும்.

அரண்ய வீட்டுச் சுற்றுப் பக்கமெல்லாம் ஏதோ பெரிய அல்லோலகல்லோலம் நடந்து கொண்டிருந்ததாகத் தோன்றியது. திடீர்

# சபதம்

30

கல்கி

திடீரென்று காட்டிற்குள்ளும் சமீபத்திலும் தூரத்திலும் பலர் கூச்சலிட்டுக் கொண்டு ஓடும் சப்தம் கேட்கும். போர் முழக்கங்கள் கேட்கும், அழுகையும் புலம்பலும் சில சமயம் கேட்கும். இரவு நேரங்களில் சுற்றுமுற்றும் பார்த்தால் திரள் திரளாகப் புகையும் நெருப்புச் சுவாலையும் எழுவது தெரியும்.


அந்த வனத்தில் வசித்த பட்சிகளிடையே என்றும் காணாத மௌனம் சில சமயம் நிலவியது. திடீரென்று பல்லாயிரம் பட்சிகள் ஏககாலத்தில் கூச்சலிடும் சப்தம் கேட்டது.

ஒரு நாள் அந்த அரண்யத்துக்கு வெகு சமீபத்தில் எங்கேயோ ஒரு பெருஞ் சண்டை நடக்கிறதென்பதற்கு அறிகுறிகள் தெரிந்தன.

போர் முரசங்களின் பேரொலியும், போர் வீரர்களின் ஜய கோஷமும், குதிரைகளும் மனிதர்களும் நடமாடும் சத்தமும், ஆயுதங்கள் மோதும் ஓசையும் இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தன.

சாயங்காலம் திடீரென்று ஐந்தாறு வீரர்கள் மேலெல்லாம் இரத்தக் காயங்களுடன் "தண்ணீர்! தண்ணீர்!" என்று கூவிக் கொண்டு ஆயனர் வீட்டுக்குள் நுழைந்தார்கள். அவர்கள் பல்லவ வீரர்கள் தான் என்று தெரிந்துகொண்டதும், ஆயனர் தாம் படுத்திருந்த இடத்திலிருந்தே அவர்களை வரவேற்றுத் தம் அருகில் உட்காரச் சொல்லிச் சகோதரியைக் கொண்டு அவர்களுக்குத் தண்ணீரும் கொடுக்கச் செய்தார். பிறகு, அவர்கள் எங்கே எப்படிக் காயமடைந்தனர் என்பது பற்றி அப்பாலும், விசாரித்தார்.






“இதென்ன உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா?” என்று அவ்வீரர்கள் வியப்புடன் கேட்டனர்.

ஆயனர் அவர்களுக்குத் தமது முறிந்த காலைச் சுட்டிக்காட்டினார். வந்த வீரர்கள் அந்தக் காலையும் சுற்று முற்றும் உடைந்து கிடந்த சிலைகளையும் பார்த்துவிட்டு, “ஐயோ! சளுக்க ராட்சதர்கள் இந்த வீட்டுக்குள்ளும் புகுந்து இப்படியெல்லாம் அக்கிரமங்கள் செய்து விட்டார்களா?” என்று வருத்தப்பட்டார்கள்.




பிறகு அந்த வீரர்களில் ஒருவன், புலிகேசி காஞ்சியை விட்டுப் போனதிலிருந்து அன்று மணிமங்கலத்துக்கருகில் நடந்த பயங்கரமான சண்டை வரையில் எல்லாம் விவரமாகச் சொன்னான். அவன் கூறியதின் சாராம்சமாவது:

புலிகேசி கோட்டையிலிருந்து வெளியேறியதும் தன்னுடைய சைனியத்தைச் சிறு சிறு படைகளாகப் பிரித்துப் பல்லவ நாட்டுக் கிராமங்களைக் கொளுத்தவும், ஜனங்களை இம்சிக்கவும், சிற்பங்களை நாசமாக்கவும், சிற்பிகளை அங்கஹீனம் செய்யவும் கட்டளையிட்டு அனுப்பினார். இதையறிந்த சக்கரவர்த்தி கோட்டைக்குள்ளிருந்த சொற்பப் படைகளுடன் வெளிக் கிளம்பினார். அன்று காலையில் மணிமங்கலம் என்னும் கிராமத்துக்கருகில் புலிகேசியின் படை வீரரும் பல்லவ வீரர்களும் கைகலந்தார்கள். புலிகேசியின் வீரர்கள் எண்ணிக்கையிலும் ஆயுத பலத்திலும் அதிகம் ஆன போதிலும் மகேந்திர சக்கரவர்த்தியே நேரில் தலைமை வகித்தபடியால் காஞ்சி வீரர்கள் பிரமாதமான வீரப் போர் நடத்தினார்கள். எதிர்ப்பக்கத்தில் வாதாபிச் சக்கரவர்த்தி புலிகேசியே தலைமை வகித்து நடத்தினார். இரு சக்கரவர்த்திகளும் போர்க்களத்தின் மத்தியில் நேருக்கு நேர் சந்தித்து வீரவாதம் செய்த பிறகு ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள்.

பல்லவ சைனியம் ஏறக்குறையத் தோல்வியடைந்திருந்த நிலைமையில், சற்றுத் தூரத்தில் பெரிய குதிரைப் படை ஒன்று வரும் சத்தம் கேட்டது. ரிஷபக் கொடியைப் பார்த்ததும், “இதோ மாமல்லர் வந்துவிட்டார்!” என்ற கோஷம் கிளம்பியது. சற்று நேரத்துக்கெல்லாம் மாமல்லரின் குதிரை வீரர்கள் சளுக்கர் படை மேல் இடியைப் போல் விழுந்து தாக்கினார்கள்.

சளுக்க வீரர்கள் ஓட ஆரம்பித்தார்கள். அரக்கன் புலிகேசியும் ஓடிப்போனான். ஆனால் போகும்போது தன் கையிலிருந்த சிறிய கத்தி ஒன்றை மகேந்திரர் மீது குறிபார்த்து எறிந்து விட்டான். மகேந்திரர் பிரக்ஞை இழந்து தரையில் விழுந்தார்.

வாதாபி வீரர்கள் போர்க்களத்தை விட்டு ஓடிய பிறகு மாமல்லரும் பரஞ்சோதியும் மகேந்திர பல்லவர் விழுந்திருந்த இடத்துக்கு வந்தார்கள். அவருக்குத் தக்க சிகிச்சை செய்து காஞ்சிக்குப் பத்திரமாய் எடுத்துப் போகக் கட்டளையிட்டு



விட்டு, புறமுதுகிட்டு ஓடிய வாதாபி வீரர்களைப் பின்தொடர்ந்து சென்றார்கள்.

மேற்படி விவரங்களைக் கூறிய பின்னர் காயமடைந்த பல்லவ வீரர்கள் காஞ்சியை நோக்கிச் சென்றார்கள். மகேந்திர பல்லவருக்கு மரண காயம் என்பதைக் கேட்டதில் ஆயனர் அளவற்ற துயரமடைந்தார்.

ஆனாலும் மாமல்லரும் பரஞ்சோதியும் சளுக்க வீரர்களைத் தொடர்ந்து போயிருக்கிறார்கள் என்னும் செய்தி அவருக்குச் சிறிது ஆறுதலையளித்தது. அவர்கள் சிவகாமியைச் சிறை மீட்டுக் கொண்டு வந்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை அவருடைய உள்ளத்தில் உதயமாகியிருந்தது.

மணிமங்கலம் சண்டை நடந்து ஒரு வாரம் ஆகிவிட்டது. ஆயனர் தினந்தோறும் ஏதேனும் நல்ல செய்தி வராதா என்று ஆவலுடன் காத்திருந்தார். வாசலில் ஏதேனும் சத்தம் கேட்டால் அவர் திடுக்கிடுவார். யாரோ செய்தியுடன் வருகிறார்கள் என்று பரபரப்புடன் எழுந்து உட்காருவார்.

இம்மாதிரி எத்தனையோ தடவை ஏமாற்றம் அடைந்த பிறகு கடைசியில் உண்மையாகவே இரண்டு குதிரைகள் அவர் வீட்டை நெருங்கி வரும் சத்தம் கேட்டது. வந்த குதிரைகள் வீட்டு வாசலில் நின்றன என்பது தெரிந்தது.

வாசற்படி வழியாக நுழைந்து வரப் போகிறவர்கள் யார் என்று கொட்டாத கண்களுடனும் துடிதுடித்த




நெஞ்சுடனும் ஆயனர் பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய ஆசை வீண் போகவில்லை. ஆம்! மாமல்லரும், பரஞ்சோதியும்தான் உள்ளே வந்தார்கள்.

அவர்களைப் பார்த்ததும் முதலிலே ஆயனருடைய முகத்தில் மகிழ்ச்சிக் களை படர்ந்தது. ஆனால் அவர்கள் நெருங்கி வரவர மகிழ்ச்சி குன்றியது.

மாமல்லரின் முகத்தில் தோன்றிய கேள்விக் குறியானது ஆயனருடைய உள்ளத்தில் சகிக்க முடியாத வேதனையை உண்டாக்கிற்று. மாமல்லர் வாய் திறந்து கேட்பதற்கு முன்னால் அவர் கேட்கப் போகும் கேள்வியைத் தாமே கேட்டுவிடத்தீர்மானித்தார் ஆயனர்.

அந்தச் சிற்ப மண்டபமும், வெளியிலிருந்த அரண்யமும் பிரதித்வனி செய்யும்படியான சோகம் நிறைந்த குரலில், "பிரபு! என் சிவகாமி எங்கே?" என்று அலறினார்.

(சபதம் தொடரும்)



# யோகா

*யோகா, தியானம் ஆகியவை மூளையை வலுப்படுத்துமா?*

நவீன வாழ்க்கையின் பரபரப்பில் நாம் தினந்தோறும் பல்வேறு புதிய பணிகளை எதிர்கொள்கிறோம். இருந்தபோதிலும் அதைச் சிறந்த முறையில் செய்துமுடிக்க நாம் முயல்கிறோம். இதற்குக் காரணம் நம் மூளைதான். தன்னைத்தானே மாற்றிக்கொண்டு புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப நடந்து கொள்ளும் திறன் அதற்கு உள்ளது. இருப்பினும் அன்றாட நிகழ்வுகள் மூளையில் மாற்றங்களை ஏற்படுத்தலாம். அது செயல்படும் முறையை மாற்றலாம். இதற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன.

மெலிசா ஹோகேன்பூம் ஓர் அறிவியல் செய்தியாளர்.நம்மைச் சுற்றி நடக்கும் விஷயங்கள் மூளை செயல்படும் விதத்தையே மாற்றும் அளவுக்கு அதன் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறதா என்பதைக் கண்டறிய அவர் ஒரு பரிசோதனையை நடத்தினார்.


வாழ்க்கையின் சில அம்சங்களை மாற்றுவதன் மூலம் மூளையை வலுப்படுத்த முடியும் என்று அவர் நம்புகிறார். இதற்காக அவர் முதலில் தனது மூளையை ஸ்கேன் செய்தார். அவருக்கு Functional magnetic resonance imaging **(எஃப்எம்ஆர்ஐ)** சோதனை செய்யப்பட்டது.

“ஸ்கேன் செய்யும்போது எதைப் பற்றியும் யோசிக்காமல் இருப்பது சாத்தியம் அல்ல. மிக அதிக சத்தம் எழுப்பும் இயந்திரத்தின் (எஃப்எம்ஆர்ஐ) முன் என்னை அழைத்துச் சென்றனர். கருப்பு சிலுவையின் மீது என் கவனத்தை ஒருமுனைப்படுத்தும்படி




சொன்னார்கள். எனக்கு கண்களைத் திறப்பதுகூட கடினமாக இருந்தது. சோதனை முடிவுகள் பற்றியும் நான் கவலைப்பட்டேன்,” என்று அவர் கூறினார்.

இந்தப் பரிசோதனையின் முடிவுகளையும், அடுத்த ஆறு வாரகாலத்திற்கு சில மாற்றங்களைக் கடைபிடித்த பிறகு கிடைக்கும் முடிவுகளையும் ஒப்பிட்டுப் பார்க்க மெலினா விரும்பினார்.இதன் காரணமாக மூளையில் என்ன மாற்றம் ஏற்படும் என்பதை அறிய அவர் விரும்பினார். இந்தச் சோதனையின் முடிவுகளை அறிய அவர் ஒரு மருத்துவ உளவியலாளரின் உதவியைப் பெற்றார்.





# யோகம்!

## தியானத்தால் மூளையை வலுப்படுத்த முடியுமா?


“தியானம் போன்ற எளிமையான ஒன்றுகூட மூளையில் மாற்றங்களைக் கொண்டு வர முடியும் என்பதை அறிந்து நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். ஆனால் கேள்வி என்னவென்றால், அது என் மூளையில் வேலை செய்யுமா?”“அடுத்த ஆறு வாரங்களில், உளவியல் நிபுணர் தோர்ஸ்டன் பார்ன்ஹோஃபர், தியானம் தொடர்பான ஆராய்ச்சிப் பாடத்தை எனக்குக் கொடுத்தார். இதில், தினமும் ஆடியோ பதிவைக் கேட்டுக்கொண்டே 30 நிமிடம் தியானம் செய்தேன். இதுதவிர வேறு சில நடவடிக்கைகளும் இதில் இருந்தன,” என்று அவர் குறிப்பிட்டார்.

**அஞ்சலி தாஸ்**

## மன வலிமைக்கும் தியானத்திற்கும் உள்ள தொடர்பு

தியானப் பயிற்சி பல்லாயிரம் ஆண்டுகள் பழமையானது. ஆனால் சில தசாப்தங்களுக்கு முன்புதான் உளவியலாளர்களும் மூளை மருத்துவர்களும் இதுகுறித்து தீவிரமாக




ஆய்வு செய்யத் தொடங்கினர். பல்வேறு ஆராய்ச்சிகளில் தியானத்தின் பயன் நிருபணமான பிறகு இப்போது அது பரிந்துரைக்கப்படுகிறது. மன அமைதி என்பது நமது அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புடையது என்று அமெரிக்க உளவியலாளர் டேவிட் கிரெஸ்வெல், பல ஆராய்ச்சிகளை மேற்கோள் காட்டி சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு எழுதினார். மூளையின் நினைவாற்றல் பகுதியை வலுப்படுத்த தியானம் உதவிகரமாக இருக்கும் என்று ஜெர்மனியில் உள்ள மியூனிக் தொழில்நுட்ப பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் பிரெட்டா ஹோல்ஸுும், அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் பொது மருத்துவமனையின்

ஆராய்ச்சியாளர் சாரா லேசரும் கூறுகிறார்கள்.

"தியானத்தில் நீங்கள் உங்கள் சுவாசத்தில் கவனம் செலுத்த வேண்டும். உண்மையில் இந்தச் செயல்முறை மூளையால் செய்யப்படுகிறது. இதைச் செய்வதன் மூலம் மனம் அங்கும் இங்கும் அலைவதை நிறுத்துகிறது. இது மூளை வேலை செய்கிறது என்பதைச் சொல்கிறது.




நாம் மூச்சை உள்ளிழுத்து வெளிவிடுகிறோம். அதாவது நாம் ஒரே நேரத்தில் இரண்டு விஷயங்களைச் செய்கிறோம். கவனத்தை ஒருமுகப்படுத்துவதற்கு சுவாசம் மூலம் நமது தசைகளைப் பலப்படுத்துகிறோம். இதன்போது நமது உடல் மற்றும் மனதின் திறன்களை அதிகரித்துக் கொள்கிறோம்," என்று மெலிசா ஹோரகேன்பூமின் உளவியலாளர் பார்ன் ஹோராஃபர் கூறுகிறார்.

"கோவிட் தொற்றுநோய்களின் போது மக்களின் சமூக வாழ்க்கை மிகக் குறைவாக இருந்தது. மரண பயம் மற்றும் எதிர்மறை உணர்வுகள் மக்களிடையே மிகவும் வேரூன்றியிருந்தால் அது அவர்களின் மன ஆரோக்கியத்தையும் பாதித்தது. கோவிட் தொற்றுக்குப் பிறகு கவலை, மன அழுத்தம் ஆகியவற்றுடன் கூடவே மனச்சோர்வும் அதிகரித்துள்ளது," என்று புது டெல்லியில் உள்ள இந்திரபிரஸ்தா அப்பல்லோ மருத்துவமனையின் உளவியலாளர் மோனாலிசா தத்தா கூறினார்.


"நாம் நல்ல உணவை சாப்பிட வேண்டும். சரியான நேரத்தில் தூங்கி எழ வேண்டும். சூரிய ஒளியில் சிறிது நேரம் இருக்க வேண்டும். இயற்கையுடன் நேரத்தைச் செலவிட வேண்டும். இன்று கிட்டத்தட்ட அனைவரின் ஸ்க்ரீன் டைமும் அதிகமாக உள்ளது. இது மக்களின் மன அழுத்தத்தை அதிகரிப்பதோடு கூடவே அவர்களின் குணமும் ஆக்ரோஷமாக மாறி வருகிறது. இதை மேம்படுத்த நமது தனிப்பட்ட மற்றும் பணி வாழ்க்கைக்கு இடையே சமநிலையைப் பராமரிக்க வேண்டும்," என்றார் அவர்.




உணவுப் பழக்கத்தை மேம்படுத்தவும், சிறந்த வாழ்க்கை முறையைப் பின்பற்றவும் அறிவுறுத்தியதோடு கூடவே யோகா மற்றும் தியானம் செய்யுமாறும் மோனாலிசா தத்தா வலியுறுத்தினார்.

"இன்றைய பரபரப்பான வாழ்க்கையில் மன அழுத்தத்தைத் தவிர்க்க முடியாது. ஆனால் அதைக் குறைக்க நீங்கள் தியானம் போன்றவற்றைச் செய்ய வேண்டும்," என்று அவர் கூறுகிறார்.

இருப்பினும் ஒரு நிபுணரின் மேற்பார்வையின் கீழ் மட்டுமே தியானம் செய்யப்பட வேண்டும் என்றும் அவர் எச்சரிக்கிறார். குறிப்பாக மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மூடிய அறையில் அல்லது தனிமையில் அசௌகரியமாக உணரக்கூடும்.ஆறு வாரங்கள் முடிந்ததும் தனது மூளையில் இந்த சோதனை என்ன விளைவை ஏற்படுத்தியது என்பதை அறிய மெலிசா ஆர்வமாக இருந்தார்.மீண்டும் ஒருமுறை ஸ்கேனிங் செய்து, பின்னர் தனது உளவியலாளர் பார்ன்ஹோராஃபரிடம் அதைக் காட்டினார்.பார்ன்ஹோராஃபர் இரண்டு ஸ்கேன்




முடிவுகளையும் பார்த்து, மெலிசாவின் மூளையில் மாற்றங்கள் தெளிவாகத் தெரிவதாகக் கூறினார்.

அவரது மூளையின் வலது பக்கத்தில் அமைந்துள்ள அமிக்டலா, அளவில் பாதியாகக் குறைந்திருந்தது. அமிக்டாலா என்பது மூளையில் உள்ள பாதாம் பருப்பு வடிவிலான ஓர் அமைப்பு. இது உணர்ச்சிகள் அல்லது உணர்வுகளின் மையம் என்று அழைக்கப்படுகிறது. இந்த மாற்றம் மிகவும் சிறியதுதான். ஆனாலும் அது தெளிவாகத் தெரிந்தது.

தியானம் செய்வதால் அமிக்டலாவின் அளவு குறையும் என்று விஞ்ஞானிகளால் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளை ஒத்ததாக மெலிசாவின் பரிசோதனை முடிவுகளும் இருந்தன. மன அழுத்தம் காரணமாக அதன் அளவு அதிகரிக்கிறது.

மூளை வலிமையின் ரகசியம்

மனித மூளை கற்றுக் கொள்வது, மாற்றிக் கொள்வது, தன்னைத்தானே வளர்த்துக் கொள்வது போன்ற திறன்களைக் கொண்டது. இது வெவ்வேறு பொருட்களாக மாறக்கூடிய பிளாஸ்டிக் போன்றது. இது நியூரோபிளாஸ்டிசிட்டி என்று அழைக்கப்படுகிறது. அதாவது ஏதோ ஒன்று பற்றிய நமது எண்ணங்கள் மாறும்போது, மூளையின் அமைப்பு மற்றும் அது செயல்படும் விதம் மாறுகிறது.

மேலும், யோகா, தியானம் மற்றும் உடற்பயிற்சி போன்றவற்றின் மூலம் நாம் உண்மையில் நமது மூளையின் வலிமை, அளவு மற்றும் அடர்த்தியை அதிகரிக்க முடியும்.

இவை அனைத்தும் இளமைப் பருவம் வரை மட்டுமே நடக்கும் என்று முன்பு நம்பப்பட்டது. ஆனால் நம் அடையாளத்தை வடிவமைப்பதில் தொடர்ந்து செயல்படும் ஒரு நிலையான சக்தி இது என்பதை இப்போது நாம் அறிந்துகொண்டுள்ளோம்.




நாம் புதிதாக ஒன்றைக் கற்றுக்கொள்ளும் போதெல்லாம் அது விரைவாக அதற்கேற்ப தன்னை மாற்றிக் கொள்கிறது. தியானம் மூளையின் ஆரோக்கியத்தையும் ஓரளவு மேம்படுத்தும்.

தியான பயிற்சியின் மூலம் மனம் அமைதியாகும்.. தியான யோகாசனம் என்பது, யோகாசனத்துடன் கூடிய தியான முயற்சி.

"யோகாசனம், உடலுக்கு ஆரோக்கியத்தை கொடுக்கக்கூடியது. உடலை சிறப்பாக பராமரிக்கக்கூடியது. ஆனால், இன்று நாம் செய்து கொண்டிருக்கும் யோகாசனம் முழுமைப்பெறாமல், வெறும் உடலுக்கு மட்டுமே நன்மை செய்கிறது. ஆனால் யோகாசனத்திற்கு உடலை மட்டுமல்ல, உள்ளத்தையும் ஆரோக்கியமாக்கும் சக்தி உண்டு. நம் முன்னோர்கள், அத்தகைய முயற்சியில்தான் யோகாசனங்களை பயின்று, உடலையும், உள்ளத்தையும் ஆரோக்கியமாக பராமரித்தார்கள்" என்று முதல் கருத்திலேயே கவனம் ஈர்க்கிறார், தமிழ்வேல்சுவாமி.

தியானம் மற்றும் யோகாசன ஆராய்ச்சியாளரான இவர், ஈரோடு பகுதியை பூர்வீகமாக கொண்டவர். பல வருடங்களாக யோகாசனம் மற்றும் அது சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளில் கவனம் செலுத்துபவர், யோகாசனத்துடன் தியானமும் கட்டாயம் இடம்பெற வேண்டும் என்கிறார்.

''நம் முன்னோர்கள், மிகவும் புத்திசாலிகள். உடலையும், மனதையும் கையாளத் தெரிந்தவர்கள். உடலுக்கும், மனதிற்கும் புத்துணர்ச்சி தரும் செயல்களை மட்டுமே செய்திருக்கிறார்கள். மேலும் உடலையும், மனதையும் ஆரோக்கியமாக வைத்திருக்கும் உணவுகளையே அதிகம் உட்கொண்டிருக்கிறார்கள். இப்படி உடலுக்கும், மனதிற்கும் பக்குவமாக பார்த்து பார்த்து செயல்பட்டவர்கள், யோகாசனம் விஷயத்திலும் ரொம்பவும் கவனமாகவே செயல்பட்டிருக்கிறார்கள். அதன் விளைவாக உருவானதுதான், தியான யோகாசனம்'' என்றவர், நம் முன்னோர்களின் தியான யோகாசனம் பற்றி விளக்குகிறார்.

''அந்தக் காலத்தில் யோகாசனம் என்பது உடலுக்கும், மனதிற்கும் சம்பந்தப்பட்டதாக திகழ்ந்திருக்கிறது. அதனால்தான் முந்தைய காலங்களில், யோகாசனங்கள் மட்டும் நிகழ்த்தப்படாமல், தியான யோகாசன பயிற்சிகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

தியான யோகாசனம் என்பது, யோகாசனத்துடன் கூடிய தியான முயற்சி. அதாவது, உடலை வளைப்பதுடன், கூடவே மனதை ஒருமுகப்படுத்தி தியானம் செய்திருக்கிறார்கள். யோகாசனத்துடன் கூடிய தியான பயிற்சியின் மூலம் யோகாசனத்தின் முழுப் பயனையும் அடைய முடியும் என்பது, நம் முன்னோர்களின் கருத்து. அதில் உறுதியாக இருந்து, தியான யோகாசனங்கள் மூலமாக உடலுக்கும், மனதிற்கும் நன்மை செய்திருக்கிறார்கள். தியான யோகாசனம் மூலமாகவே, நம் முன்னோர்கள் 100 வயதை கடந்த பிறகும், ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்ந்திருக்கின்றனர்'' என்றவர், யோகாசன முயற்சிகளை தியான பயிற்சிகள் மூலமாக வலுப்படுத்து கிறார். நீண்ட ஆராய்ச்சிக்கு பிறகு, நம் முன்னோர்களின் தியான யோகாசன முயற்சியை மீட்டெடுத்திருக்கிறார்.




''அது என்ன தியான யோகாசனம் என்கிறீர்களா...? ஒருமணி நேரம் யோகாசனம் செய்கிறீர்கள் என்றால், அதுமட்டுமே உங்களை புத்துணர்ச்சியாக்கி விடாது. ஒரு மணிநேர யோகாசன பயிற்சியுடன், கூடுதலாக அரை மணி நேர தியான பயிற்சியும் அவசியம். அப்போதுதான், நீங்கள் அரும்பாடுபட்டு செய்த யோகாசனத்திற்கு முழுமையான பயன் கிடைக்கும். உடலும் ஆரோக்கியமாக இருக்கும். தியான பயிற்சியின் மூலம் மனமும் அமைதியாகும்.

இந்த தியான யோகா பயிற்சிகள், மன அழுத்தத்திற்கு பலன் தருவதாக, பல ஆராய்ச்சிகளில் தெரிய வந்திருக்கிறது. ஏனெனில் புத்துணர்ச்சி ரத்த செல்கள் வழியே பாய்ச்சப்பட்டு, உடல் உறுப்புகளையும், எண்ண ஓட்டங்களையும் சீர்படுத்துகிறது'' என்று பொறுப்பாக பேசும் தமிழ்வேல் சுவாமி, மன அழுத்தத்தில் சிக்கி தவிக்கும் அரசு ஊழியர்களுக்கு, தியான யோகா பயிற்சிகளை பல ஆண்டுகளாக கற்றுக்கொடுத்து வருகிறார். குறிப்பாக, 2020—ம் ஆண்டுகளில், கொரோனா ஊரடங்கு சமயங்களில், கடும் மன அழுத்தத்துடன் பணியாற்றிய ஈரோடு பகுதி காவலர்களுக்கு, தொடர் பயிற்சியாக தியான யோகாசனம் கற்றுக்கொடுத்து, அவர்களது மன அழுத்தத்திற்கும், மன சோர்விற்கும் மருந்து போட்டிருக்கிறார்.

''யோகாசனமும், தியானமும் நம் முன்னோர்களின் வாழ்க்கையில் மிக முக்கியமானவை. இவ்விரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை என்பதால் இதை பிரித்து பார்ப்பதில் எந்த பலனும் இல்லை. முன்னோர்களின் வாழ்க்கை முறையில் இருந்த தியான யோகா முறைகளையும், அதனால் கிடைக்கும் நன்மைகளையும் ஆராய்ந்து, அதை அறிவியல் ஆவணமாக்கும் முயற்சிகளை முன்னெடுத்திருக்கிறேன்.

அவை அறிவியல் ரீதியாக நிரூபணம் ஆகும்போது, தியான யோகாசனம் பற்றிய விழிப்புணர்வு அதிகரிக்கும். யோகாசனம் மட்டும் செய்து கொண்டிருப்பவர்கள், தியானத்தின் மூலமும் நன்மைகளை பெறுவார்கள். யோகாசனமும், அதன் பாரம்பரிய வடிவம் பெற்றுவிடும்'' என்பவர், மன அழுத்தம் அதிகமாக இருக்கும் அரசுப்பணியாளர்களுக்கு, தியான யோகாவை கற்றுக்கொடுப்பதில் ஆர்வமாக இருக்கிறார். அதுமட்டுமன்றி, கல்லூரி மாணவ— மாணவிகள், பள்ளிக்குழந்தைகள், குடும்ப பெண்களுக்கும் தியான யோகாசனம் பற்றிய விழிப்புணர்வுகளை உண்டாக்கி, அதை பல வழிகளில் இலவசமாக கற்றுக்கொடுக்கிறார்.


தியான யோகா பயிற்சிகள், மன அழுத்தத்திற்கு பலன் தருவதாக, பல ஆராய்ச்சிகளில் தெரிய வந்திருக்கிறது. ஏனெனில் புத்துணர்ச்சி ரத்த செல்கள் வழியே பாய்ச்சப்பட்டு, உடல் உறுப்புகளையும், எண்ண ஓட்டங்களையும் சீர்ப்படுத்துகிறது

# இறை தூதுவன்

இரண்டு மாடிக்கடையில்
விற்பனை பிரதிநிதியென்று
அறிமுகப்படுத்திக் கொண்டவன்
இந்த புதுசெல்போனில்
பிரியமானவர்களின்
மனதின் குரலோடு
ரகசியமாக பேசலாமென்றான்.
பதிலேதும் சொல்லாமல்
புன்னகையோடு பார்த்தேன்.
என் மீது நம்பிக்கை வரவில்லை போலும்.
வரிசையாக சொல்ல ஆரம்பித்தான்.

பாட்டு கேட்கலாம்.
படம் பார்க்கலாம்.
படம் பிடிக்கலாம்.
குறிப்பெழுதலாம்.
கடிகாரம் உண்டு.
காலண்டர் பார்க்கலாம்.
விளையாடலாம்.
புத்தகம் படிக்கலாம்.
ஓவியம் வரையலாம்.
கணக்குகள் செய்யலாம்.
கடவுளையும் வரவழைக்கலாம்ஞ்

கடையை விட்டு
வெளியேறும்போதுதான்கவனித்தேன்.
அவனைச் சுற்றிச் சின்னக் கூட்டம்.
அவன் தலைக்கு பின்னால்
சிறு ஒளி வட்டமொன்று
படர ஆரம்பித்திருந்தது.



**விநாயக முருகன்**

# பலகை முழுக்க நினைவுகள்

பிள்ளையாரை அமர வைத்துக்
கொணரவே ஒரு பலகை உண்டு
அப்பாவிடம்.
சைக்கிளை அப்பா தள்ளிவர
காரியரில் வருவார் பிள்ளையார்.

துரத்தி வரும் குறத்திகளிடம்
எருக்குமாலை குடை
பண்டிகையின் பின் நின்ற
நுண்பொருளியல் புரிந்தது
பின்னொரு நாளில்

அகவல் ஓசையுடன்
அம்மா பிடித்த மோதகம்
தட்டிய வடையின் வாசம்
நாளின் நிறத்தையும் மாற்றும்

பூஜை முடிந்து சாப்பிட்டு
எழுந்து மறுபடி
பூரணத்தை மட்டும் சாப்பிட
கடந்து போகும் இன்னொரு
சதுர்த்தி.

பண்டிகை முடிந்தபின்
கடலோ குளமோ போகமாட்டார்
எங்கள் பிள்ளையார்
பரணில் சரணடைவார்
ஏதோவொரு பொங்கலில்
மொத்தமாக மாமரத்தடியில்
மண்ணில் கரைவார்
மழை வந்ததும்

பிறிதொரு நாளில்
மறுபடியும் வருவார்
பிள்ளையார்

அமர்ந்து வர சைக்கிளும்
வாங்கி வர அப்பாவும்
மோதகம் செய்ய
அம்மாவும்தான் இனியில்லை..

**மஹேஷ்**


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
தீபாவளி
வாழ்த்துக்கள்
HAPPY
Diwali
FESTIVAL OF LIGHTS




## வெந்தயக்கீரை வைத்தியம் !

பொடிப் பொடியாகச் சிறிய இலைகள் மண் வாசனையைக் கிளப்பிக்கொண்டே, விதையிலிருந்து துளிர்த்தெழும் நயத்தில் அவ்வளவு அழகு ஒளிந்திருக்கிறது. ‘பொன்னை எறிந்தாலும் பொடிக் கீரையை எறியாதே’ எனும் பழமொழி மற்ற கீரைகளுக்குப் பொருந்துகிறதோ இல்லையோ, வெந்தயக்கீரைக்குச் சாலப் பொருந்தும்.

வெந்தயத்தோடு ஒப்பிடும்போது, வெந்தயக்கீரையின் பயன்பாடு நமது உணவில் மிகக் குறைவே. ‘வெந்தயம் கசக்கும், அப்போ அதன் கீரையும் கசக்கத்தானே செய்யும்ஞ்’ என்கிற தவறான கணக்கில் வெந்தயக்கீரையை ஒதுக்கி, அதன் பல்வேறு பலன்களை அனுபவிக்கத் தவறுபவர்கள் பலர். வெறும் இலைகளாகப் பார்க்காமல், வெந்தயக்கீரைக்குள் உள்ள சத்துப் பட்டியலை அறிந்துகொண்டால், கீரையின் மெல்லிய கசப்புச் சுவையும்கூட நம் சுவை மொட்டுகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

உலகளாவிய உணவுத் தொடர்பு: மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இந்தியச் சமையல் கலாச்சாரத்தில் நீண்ட காலத் தொடர்புடையது வெந்தயக்கீரை. ஈரானியர்களின் மிக முக்கியமான சூப் வகையான ‘கோர்மே சப்ஜி’யில் உலர்ந்த வெந்தயக் கீரை நீக்கமற இடம்பிடிக்கிறது. வெண்ணெய் விட்டு வதக்கிய உருளைக்கிழங்கோடு சிறிதாக நறுக்கிய வெந்தயக்கீரை, பெருங்காயம் சேர்த்துத் தயாரிக்கப்படும் ‘உருளை வெந்தயக்கீரைப் பிரட்டல்’ பஞ்சாபியர்களின் முக்கிய தொடுகறி.

யவன — இந்திய உணவுத் தொடர்பில் வெந்தயக்கீரை யையும் வெந்தயத்தையும் பற்றிக் குறிப்பிட்டே ஆக வேண்டும். ஐரோப்பிய நாடுகள் பிறப்பிடமாக இருந்தாலும் பல நூற்றாண்டு களுக்கு முன்பிருந்தே இந்தியாவில் அதிகம் பயன்பாட்டிலிருந்தவை வெந்தயக்கீரையும் வெந்தயமும்.

மருத்துவ உணவு: ‘பொருமல் மந்தம் வாயுகபம்ஞ்’ எனத் தொடங்கும் அகத்தியர் குணவாகடப் பாடல் வயிற்று உப்புசம், செரியாமை, இருமல், சுவையின்மை போன்ற பிரச்சினைகளைப் போக்குவதற்கு வெந்தயக்கீரை சிறப்பானது என்பதைச் சொல்கிறது. உடலுக்குக் குளிர்ச்சியை அள்ளிக் கொடுப்பதோடு, மலமிளக்கியாகவும் இக்கீரை செயல்படுகிறது. வெந்தயக்கீரையுடன் சிறிது ஓமம் சேர்த்து அரைத்துச் சாப்பிட, செரிமான உபாதைகள் விலகுவதோடு வாய் துர்நாற்றமும் நீங்கும்.








டாக்டர்
வி.விக்ரம்குமார்

வெந்தயக்கீரையை வேகவைத்துத் தேன் விட்டு நன்றாகக் கடைந்த ‘தேன் கீரை’ கடையலை உட்கொள்ள மலம் சிரமமின்றி வெளியேறும். வெந்தயக் கீரையின் கசப்பும் தேனின் இனிப்பும் புதுமையான சுவை அனுபவத்தைக் கொடுக்கும். வாய்ப்புண், வயிற்றுப்புண், மூலத்திற்கான மருத்துவ உணவு இது.

சர்க்கரைக்கு நல்லது: ரத்தச் சர்க்கரை அளவைக் குறைக்கும் தன்மை வெந்தயக் கீரைக்கு இருப்பதாக ஆய்வுக் கட்டுரைகள் சுட்டிக்காட்டுகின்றன. அதனால், நீரிழிவு நோயாளர்களின் தட்டில் அடிக்கடி இடம்பிடிக்க வேண்டிய கட்டாயக் கீரை இது. இரும்புச் சத்து, செம்புச் சத்து, துத்தநாகச் சத்து, புரதம், நார்ச்சத்து போன்றவற்றை நிறைவாக வைத்திருக்கிறது வெந்தயக்கீரை.

வெந்தயக்கீரையோடு வெந்தயத்தையும் உணவு முறையில் சேர்த்துக்கொள்ளும்போது ரத்தக் கொழுப்பின் அளவு முறைப்படுத்தப்படுவதாகக் குறிப்பிடுகின்றன ஆய்வுகள். கொலாஜென் உற்பத்தியை அதிகரித்து, தேகத்துக்குப் பொலிவைக் கொடுக்கும் வெந்தயக்கீரை!

எப்போது விதைத்தாலும் பயன்தரவல்ல வெந்தயக்கீரை, மார்கழி முதல் மாசி வரையான காலத்தில் கனக்கச்சிதமாக வளரும். பொங்கல் பண்டிகைக் கால உணவில் வெந்தயக் கீரைக்குச் சிறப்பான இடம் உண்டு. வீட்டுத் தோட்டத்தில் அல்லது தொட்டியில்கூட மணலைக் கிளறி அதில் வெந்தயத்தைத் தூவி, ஈரப்பதத்தைத் தொடர்ந்து பராமரித்தால் ஒரே வாரத்தில் வெந்தயக்கீரையை கண்ணாரக் காணலாம். செயற்கை உரங்கள் இன்றி இயற்கைவழியில் விளைந்த குட்டிகுட்டி வெந்தயக்கீரை, உங்கள் உணவில் ஒட்டி உறவாடி நலம் உண்டாக்கும்.




வாசனையோடு கூடிய மெலிதான கசப்புச் சுவையை வெந்தயக்கீரை உணவுக்கு வழங்கும். அந்தக் கசப்பும் சுவைமிக்கது என்பதை வெந்தயக்கீரையை ருசித்தவர்கள் அறிவார்கள்!

பழக்கீரை பானம்: வெந்தயக்கீரையோடு திராட்சை, அத்திப் பழம் சேர்த்துச் சிறுதீயில் கொதிக்க வைத்துப் பானமாகத் தயாரித்து கொஞ்சம் தேனும் குடம்புளியும் சேர்த்துப் பருக செரிமானக் கருவிகள் குதூகல மடையும்.






குழம்பு வகைகளின் சுவையைக் கூட்டவும், குழம்பின் அடர்த்தியை அதிகரிக்கவும் உலர்ந்த வெந்தயக் கீரையைச் சேர்க்கும் வழக்கம் கிராமங்களில் இப்போதும் இருக்கிறது. சமையலில் உலர்ந்த கீரையைப் பயன்படுத்தும்போது ஒரு வாசனையும், பசுமையான கீரையை உபயோகிக்கும்போது வேறுவிதமான வாசனையும் வெளிப்படும். இலைகள் மட்டுமன்றி மெல்லியத் தண்டுகளையும் சேர்த்தே சமையலுக்குப் பயன்படுத்தலாம்.

பித்தம் அதிகரிப்பதன் காரணமாக ஏற்படும் தலைச்சுற்றலுக்கு வேகவைத்த வெந்தயக்கீரையை வெண்ணெய் இட்டு வதக்கிச் சாப்பிடலாம்.



சோர்வுற்ற உடலுக்கு உடனடி ஆற்றலைக் கொடுக்க இந்தப் பழக்கீரை பானத்தை முயன்று பார்க்கலாம். உலர்ந்த கீரையைப் பொடித்துத் தண்ணீரில் போட்டுக் கொதிக்கவைத்து சூடான தேநீர் போலவும் பருகலாம்.

வெந்தயக்கீரை முழுமையாக உருவாவதற்கு முன்பே, அதாவது முளை அரும்பிய (Microgreens) உடன் பொடிக்கீரையாக எடுத்து காய்கறி சாலட், சூப், துவையல் வகையில் பயன்படுத்தப் பலன்களும் சுவையும் கூடுதலாகக் கிடைக்கும். பூண்டு, மிளகு, வெங்காயம், தக்காளியோடு நறுக்கிய வெந்தயக்கீரையையும் சேர்த்துத் தயாரிக்கப்படும் சூப், சுவைமிக்கதாக இருப்பது மட்டுமன்றி, செரிமானச் சிக்கல்களையும் தீர்க்கும். குளிர்கால மாலை வேளையில் பருக ஏற்ற பானம் இது.




கீரையோடு முட்டை, தேங்காய்ப் பால் சேர்த்து நெய்விட்டுச் சமைக்கும் வித்தியாசமான கீரை உணவு உடல் சோர்வை உடனடியாக நீக்கும். வெந்தயக்கீரையோடு கசகசா, வாதுமைப் பருப்பு, கோதுமையை ஊறவைத்து எடுத்த பால், நெய், நாட்டுச் சர்க்கரை சேர்த்து லேகிய பதத்தில் செய்து சாப்பிட உடலுக்கு வலிமை உண்டாகும்.

வெந்தயக் கீரையில் இவ்வளவு நன்மைகளா!

வெந்தயக் கீரைகள் இரும்புச்சத்துப்

பொருட்களை அதிக அளவில் கொண்டு உள்ளன. இரும்புச் சத்துப் பொருட்கள் உடலில் ஏற்படும் ரத்தசோகை வராமல் தடுப்பதோடு உடலுக்கு சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியை வழங்குகின்றன.

வெந்தயக் கீரையைப் பொடியாக நறுக்கி வதக்கி



இரண்டு டம்ளர் தண்ணீர் விட்டு ஒரு டம்ளர் அளவிற்குச் காய்ச்சி, காலை மாலை அரை டம்ளர் வீதம் உண்டு வந்தால், நெஞ்சுவலி பூரணமாகக் குணமாகும்.

உடல் சூடு அதிகமாக இருப்பவர்கள் வெந்தயக் கீரை சாப்பிடலாம். இதன் குளுர்ச்சி தன்மை உடல் சூட்டை குறைத்து குளிர்ச்சியை கொடுக்கும். கபம், சளி உள்ளவர்கள் வெந்தயக் கீரை சாப்பிட்டால் விரைவாக குணமடையலாம். வெந்தயக் கீரையை வேகவைத்து, வெண்ணெயில் வதக்கிச் சாப்பிட்டால், பித்தத்தினால் வரும் மயக்கம் சரியாகும்.

பத்து கிராம் வெந்தயத்தை நெய்யில் வறுத்துச் சிறிதளவு சோம்பு, உப்பு சேர்த்து அரைத்து மோரில் கரைத்து சாப்பிட வயிற்றுப் போக்கு தீரும்.

வெந்தயக் கீரைகளை தினசரி உணவில் சேர்ப்பது உடலில் ஏற்படும் புரதக்குறைபாட்டை போக்கி வலிமை சேர்க்கும். மேலும் கண்பார்வைக் குறைவு நோய்கள் இருப்பவர்கள் வெந்தயக் கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் கண்பார்வை அதிகரிக்கும்.

வெந்தயக் கீரை நரம்பு தளர்ச்சியில் இருந்து மீண்டுவர உதவும். அதனால் நரம்பு தளர்ச்சி உள்ளவர்களுக்கு இது ஓர் சிறந்த மருந்தாகும். கீரையில் உள்ள புரதப் பொருட்களான சாப்போனின், மியூக்கலேஜ் போன்றவை பெருங்குடல் புற்றுநோய் வராமல் தடுக்க உதவுகிறது.

வெந்தயக் கீரையில் ஏ வைட்டமின் சக்தியும், சுண்ணாம்புச் சத்தும் இருப்பதால் இதை சாப்பிடும் போது மாரடைப்பு, கண் பார்வை குறைபாடு, வாதம், சொறி சிரங்கு, இரத்த சோகை ஆகியவை குணமடையும்.

வெந்தயக் கீரையின் தண்டை அரைத்து, மோருடன் குடித்துவர, வயிறு தொடர்பானப் பிரச்னைகள் தீரும். வெந்தயம், உயர் ரத்த அழுத்தம் போன்ற பிரச்சினைகளைப் போக்கும்.

கொத்துமல்லி விதைகளை ( தனியா) ஊற வைத்த நீர் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்தும். சர்க்கரை நோய் உள்ளவர்கள் இந்த தண்ணீரை தினமும் குடிக்கலாம்.

வெள்ளைப் படுதல் பிரச்னையில் அவதிப்படும் பெண்கள், கொத்துமல்லி விதைகளை ஊற வைத்த, நீரை வாரத்தில் இரண்டு முறை குடித்து வருவது நல்லது.




கொத்துமல்லி விதைகளை நீரில் போட்டு கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டி தேன் கலந்து குடித்து வந்தால் ரத்தசோகை பிரச்னையில் இருந்து விரைவில் விடுபடலாம்.

உடல் சூடு உள்ளவர்கள் வெந்தயக்கீரையை சாப்பிட வேண்டும். இதன் குளிர்ச்சி உடல் சூட்டை குறைத்து உடலில் குளிர்ச்சியை உண்டாக்கும்.

கபம், சளி உள்ளவர்கள் வெந்தயக்கீரையை தொடர்ந்து சாப்பிட்டால் குணமடைவர்.

வெந்தயக்கீரையை தினந்தோறும் உணவில் சேர்ப்பதால் உடலில் ஏற்படும் புரத குறைபாட்டை நீக்கி உடலுக்கு வலிமை சேர்க்கும். மேலும் கண் பார்வை குறைபாடு நோய்கள் இருப்பவர்கள் வெந்தயக்கீரையை தொடர்ந்து சாப்பிட்டால் கண் பார்வை அதிகரிக்கும்.

வெந்தயக்கீரை நரம்பு தளர்ச்சியிலிருந்து மீண்டு வர உதவும்.

# நம்மை

உயிர்களின் பரிணாம வளர்ச்சியில் மனிதன் தோன்றி நான்கு லட்சம் ஆண்டுகள் நிறைவு பெற்றதாகவும் மனித மூளை சிந்திக்கத் தொடங்கி ஒரு லட்சம் ஆண்டுகள் கடந்ததாகவும் சொல்லப்படுகிறது. பரிணாமத்தில் முழுமை பெற்று மனிதன் மனிதனாகி விலங்குகளிலிருந்து வேறுபட்டு 30,000 ஆண்டுகள் முழுமை பெற்றதாக ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

இந்த 30,000 ஆண்டுகளின் பிந்தைய காலகட்டத்தில்தான் பிற உயிர்களிலிருந்து வேறுபட்டு சிந்திக்கும் விலங்காக முழுமையாக பரிணமிக்கிறான் மனிதன். காடு, மலை, வானம், மழை, கடல், அருவி, சூரியன், நிலவு, நட்சத்திரங்கள் பற்றி எல்லாம் அவன் சிந்திக்கத் தொடங்கி பல ஆயிரம் ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இத்தகைய சிந்திக்கும் திறன் பெற்ற மனிதன் பல்வேறு கூறுகளை ஆய்ந்து புதுப்புது கண்டுபிடிப்புகளை உருவாக்கினாலும் அவனுக்கே சவால் விடக்கூடிய கூறுகளில் ஒன்றாக இன்றும் நீடிப்பது தன்னைப் பற்றி தானே சிந்தித்து அறிவது.


கிரேக்க தத்துவஞானி அரிஸ்டாட்டில் "உன்னை அறிவதே எல்லா ஞானத்துக்கும் ஆரம்பம்' என்று கூறினார். வாழ்க்கையை மக்கள் தாங்களே சுயமாக புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால் கேள்வி என்னவென்றால், மக்கள் உண்மையில் தங்களை எப்படி அறிவார்கள்?

மக்கள் தங்கள் உண்மையான சுயத்தை அறிவது என்பது தங்கள் உடலின் பல்வேறு பாகங்கள், தங்களின் அணுகுமுறை, தங்களின் உடல் அளவு, தங்களின் நடத்தை, தங்கள் மனம் மற்றும் தங்களைப் பற்றிய எல்லாவற்றையும் அறிந்து ஏற்றுக் கொள்வது. இது முக்கியமாக மனிதனின் அகத்தின் மீது கவனம் செலுத்துகிறது.

சில ஆண்டுகளுக்கு முன் ஒரு யோகா வகுப்புக்கு சென்று இருந்தேன். அவ்வகுப்பில் உடலை தினசரி எத்தனை முறை சுத்தம் செய்கிறீர்கள் என்ற கேள்வியை முன்வைத்தார்கள். ஓரிருமுறை என்று பதில் வந்தது பார்வையாளர்களிடமிருந்து.

அப்படியானால் இதுவரை மனதை எத்தனை முறை சுத்தம் செய்து இருக்கிறீர்கள் என அடுத்த



# உணர்வோம்!

முனைவர்
பவித்ரா நந்தகுமார்


கேள்வியை கேட்டார்கள். யாரிடமிருந்தும் பதில் இல்லை. கைப்பேசிகூட அவ்வப்போது சுத்தம் செய்யவில்லை எனில் தேவையற்ற தரவுகளால் அதன் இயக்கத்தின் வேகம் குறைகிறது. அதுபோல் நம்மை நாம் உள்நோக்கி ஆழ்ந்து பார்க்காதபோது நம் இயக்கத்தின் வேகத்திலும் தாக்கம் ஏற்படுகிறது.

பல வருடங்களாக லாபத்தில் சென்று கொண்டிருந்த ஒரு பெயர்பெற்ற நிறுவனம் சில மாதங்களாக நஷ்டத்தில் இயங்கினால் என்ன செய்வார்கள்? நிறுவனத்தின் வரவு — செலவு கணக்கிலிருந்து அந்த நிறுவனத்தின் நீள அகலம் முதல் குறுக்கு வெட்டுத் தோற்றம் வரை அலசி எடுத்து நஷ்டத்தை கணக்கிட்டு அதை தீர்க்க சில முடிவுகளை எடுப்பார்கள் இல்லையா?

அதைப்போலத்தான் நம்மை நாம் ஆழ்ந்தகழ்ந்து பார்க்கும்போது நம் பலம், பலவீனம் நமக்கே தெரிய வரும். நம்முடைய சரியான பலத்தை நாம் தெரிந்து கொள்ளும்போது அதைக் கூட்டியோ குறைத்தோ அதீத வீரியத்துடன் அதற்குண்டான பயணத்தை நாம் ஏற்படுத்திக்கொள்ள இயலும்.


ஒரு கருவியை நீங்கள் பயன்படுத்துகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த கருவி பற்றி, அது செயல்படும் விதம் பற்றி தெரிந்து வைத்துக் கொண்டால் அதை இன்னும் சிறப்பாக நீங்கள் கையாள முடியும் அல்லவா? இந்த உண்மை மனதிற்கும் பொருந்தும். ஆனால் இன்றைய உலகம் பிறரைப் பற்றி சிந்திப்பதிலும் பிறரைப் பற்றி அறிந்து கொள்ள மெனக்கெடுவதிலுமே ஆர்வமாக இருக்கிறது. தங்களைப் பற்றி யாரும் சிந்திப்பதில்லை.




என் உறவு பெண்மணி ஒருவரை வெகு காலம் கழித்து சந்திக்க நேர்ந்தது. எழுத்து பற்றியும் வாசிப்பு பற்றியும் பேச்சு வந்தபோது அவர், “திருமணத்துக்கு முன் நான் ஒரு தொடர் வாசிப்பாளி. ஒரு புத்தகத்தை முடித்ததும் அடுத்த புத்தகம் என்று தொடர்ந்து படிப்பேன்.

மறுநாள் நூலகத்தில் புத்தகங்களை திரும்பக் கொடுக்க வேண்டும் என்று வந்தால் முதல்நாள் இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருந்து புத்தகங்களை வாசிப்பேன். ஆனால் இந்த பழக்கம் திருமணத்துக்குப் பிறகு என்னிடமிருந்து காணாமல் போய்விட்டது. கடைசியாக ஒரு முழு புத்தகத்தை படித்து பல வருடங்கள் ஆகிவிட்டன’ என்றார்.




பெண்ணாக இருந்தால் கணவருக்காக, குழந்தைகளுக்காக என்று தம்மை கரைத்துக் கொள்வது போல், ஆணாக இருந்தால் மனைவிக்காக, குழந்தைகளுக்காக என்று சிலவற்றை ஒதுக்கிக் கொள்ளும் போக்கு நம் சமூகத்தில் இருக்கக்கூடிய ஒன்றுதான். ஆனாலும், நம் உடல் நலனை சீர்தூக்கிப் பார்ப்பது போல மனநலனையும் பார்க்க வேண்டியது மிக மிக அவசியம்.

இன்றைய நவீன உலகில் நம்மை நாம் சற்று உள்ளாழ்ந்து கவனிக்க வேண்டியது தேவை இருக்கிறது. என் உறவு பெண்மணி பிறருக்காகவே வாழ்ந்ததில் பலவற்றைப் பெற்று இருக்கிறார். ஆனால் தான் நேசித்த பல சங்கதிகளை வாழ்வில் தவறவிட்டிருக்கிறார். அதை காலம் கடந்து உணர்ந்தும் இருக்கிறார். இதைப்பற்றி முன்னமே சிந்தித்து இருந்தால் இரண்டையும் சமன்படுத்தக்கூடிய ஒரு மாற்று வழியை அவர் கண்டடைந்திருக்கலாம். ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு தேடல் இருக்கும். அந்தத் தேடலை உணர நம்மை நோக்கிய உற்று நோக்கல் அவசியம். நம் விருப்பு வெறுப்புகள் என்னென்ன, நம் தேவை எது என்று உணர்ந்து வாழும்போது நம் மீதே நமக்கு மிகப்பெரிய நம்பிக்கை உருவாகும். நாம் எதை நோக்கிப் பயணிக்க வேண்டும், நம் குறிக்கோளைஅடைய நாம் சென்று கொண்டிருக்கும் பாதை சரியானதா என்பன போன்ற பல கேள்விகளுக்கு விடை தெரிய வரும்.





ஏன் இந்த அகச்சிந்தனை அத்துணை அவசியம்? சிலரைப் பார்த்திருக்கிறோம். கோபம் அதிகமாக வரும். கோபம் அதிகமாக வரும் போது, தான் என்ன செய்கிறோம் என்று அவர்களுக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்த ஒருவர் தனக்கு கோபம் வரும்போது பக்கத்தில் இருக்கும் பொருளை எல்லாம் எடுத்து தூக்கி எறிவார்.

ஒரு சமயம் "ஏன் இதுபோன்ற உக்கிரமான செயலை செய்கிறீர்கள்' என நான் அவரிடம் வினவிய போது அவர், "என் பெரியப்பாவுக்குக் கோபம் வந்தால் அவர் இப்படித்தான் வீசி எறிவார். நான் அதைப் பலமுறை என் சிறுவயதில் பார்த்திருக்கிறேன். அந்தக் காட்சிகள் எல்லாம் என் மனதில் ஆழமாகப் பதிந்து போயுள்ளது. அதன் பொருட்டே எனக்கும் அப்படிப்பட்ட எண்ணம் வந்து கொண்டே இருக்கிறது என நினைக்கிறேன்' என்றார்.

அவருக்குள், "ஏன் யாரோ ஒருவர் செய்வதை நாம் செய்ய வேண்டும்? நம் இயல்பு அது இல்லையே' என்ற உணர்தல் நிகழாததுதான் அவரின் செயல்பாட்டுக்குக் காரணம்.




உளவியல் பகுப்பாய்வின் தந்தை எனச் சொல்லப்படும் சிக்மண்ட் பிராய்ட் தனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தைக் கொண்டு ஒரு விளக்கம் சொல்கிறார். அவருக்கு ஐம்பது வயது இருக்கும்போது, ஒரு ரயில் நிலையத்தில் நடந்து சென்று கொண்டிருக்கிறார். எதிரே ஒரு அழகான இளம் பெண் வந்து கொண்டிருக்கிறார். இவருக்கு ஏனோ அந்தப் பெண்ணைத் தொட வேண்டும் என்ற எண்ணம் வருகிறது.




அப்போது அவருடைய அறிவு, "உனக்கு அதிக வயதாகிறது. அந்த பெண்ணை தொட வேண்டும் என்று ஏன் கீழ்த்தரமான எண்ணம் வருகிறது? அவள் உனக்கு அறிமுகமற்ற புதியவள். எனவே அந்த எண்ணத்தை நிராகரி' என்று அறிவுறுத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் அதே வேளையில் அவர் தன் அருகில் வந்து கொண்டிருந்த அந்த பெண்ணை கண் இமைக்கும் நேரத்தில் தொட்டும் விடுகிறார்.

இந்நிகழ்வை வைத்தே பல கட்ட ஆய்வுகள் செய்து அவர் ஒரு முடிவுக்கு வருகிறார். விழிப்பு நிலையில் இருக்கும் தன் அறிவு தன்னை இவ்வளவு தடுத்தும் விழிப்பு நிலையில் இல்லாத தன் ஆழ்மனம் என்ன நினைக்கிறதோ அதை நிறைவேற்றி இருக்கிறது.







ஆழ்மனதை வெல்லக்கூடிய ஆற்றல் ஒரு மனிதனுடைய அறிவுக்கு வர வேண்டும் என்றால் நம் மனதை பல்வேறு நிலைகளில் உற்று நோக்கி பழக்கப்படுத்துதல் வேண்டும். அதற்கு முதலில் நம்மைப் பற்றிய சுய உணர்தல் முக்கியம் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

இதற்குத்தான் தியானம் பழக வேண்டும் என்று நம் முன்னோர் அறிவுறுத்தியுள்ளனர். தியானம் பழகுதல் இந்த உலக வாழ்க்கையிலிருந்து நம்மை அறுத்துவிடும் என்ற தவறான புரிதல் பலருக்கும் இருக்கிறது. முதலில் அது நீங்க வேண்டும். தியானம் பழகுவதால் நம் வாழ்க்கைக்கான சிறந்த கதவுகள் திறக்கும்.

மன ஆரோக்கியத்தை நிர்வகிப்பதற்கும், மனச்சோர்வை விரட்டுவதற்கும் நம் ஆற்றல் மற்றும் செயல்திறன் கூடுவதற்கும், நம் கவனம் மற்றும் நினைவாற்றலை மேம்படுத்துவதற்கும் வாழ்வின் சுவாரசியத்தை, சாராம்சத்தை உணர்ந்து கொள்வதற்கும் வழி அமைத்துக் கொடுக்கும். தியானம் செய்வதை ஆன்மாவுக்கான உணவு என்கிறார்கள் நவீன சிந்தனையாளர்கள்.

தியானம் செய்வது என்பது ஏதோ இளம்வயது கடந்தபின் தொடங்கி முதுமை வரை கடைபிடிப்பது என்ற எண்ணம் சமூகத்தில் நிலவுகிறது. இது தவறான கண்ணோட்டம். ஒரு குழந்தைக்கு பற்கள் முளைத்ததும் எப்படி பற்களை சுத்தப்படுத்துவது என்ற வழிமுறைகளை நாம் கற்றுத்தருகிறோமோ, அது போல் மனித மனதைப் பண்படுத்த சில நுட்பங்கள் கற்பிக்கப்பட வேண்டும்.

இன்றைய இளைய தலைமுறையினர் எதற்கெடுத்தாலும் சிடுசிடுக்கின்றனர். மன அழுத்தம் ஏற்படுவதால் பலர் தற்கொலை முடிவு வரை செல்கின்றனர். இதற்கெல்லாம் நல்லதொரு தீர்வாக நம்மை நாம் உணர்தல் இருக்கக்கூடும். ஆகவே சற்றே சிந்திக்கத் தொடங்குவோம் நம்மைப் பற்றி.

# பிரார்த்தனை

ஒன்றுமில்லா வெளியெனும்
கவசம் தந்தாய்.
ஒவ்வொன்றாய் சேர்த்து
நிரப்பிவிட்டேன்.
அகழிபோல் காத்த கவசம் தேய்ந்து,
விசைகளின் உலகோடு உராய்கின்றேன்.
தடுத்தாலும் கேட்காத
குழந்தையாக மனம்
நேரெதிராய் ஓடிச்சிரிக்கின்றது.
ஒன்றுமில்லா வெளியின்
விழி நிறைத்து
ஓராயிரம் எண்ணங்கள்
நிரப்பியது யார்?
தடதடவென கொட்டும்
மழைக்குள்ளே மறைந்திருக்கும்
அமைதியின் இடைவெளிகள்.
மழைதீர்ந்து தெளிகின்ற
வெளிபோலே என் மனதுள்ளும்
மீண்டும் வருவாயா?
ஒன்றுமில்லா வெளியின்
புன்னகையாய் என் உலகெங்கும்
விரிந்து மலர்வாயா?

ச. அனுக்ரகா


HAPPY
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
Diwali
இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்



# தமிழ் 2023

நற்றமிழரின் நாடித்துடிப்பு


## JANUARY




## FEBRUARY




## MARCH




## APRIL




## MAY




## JUNE




## JULY




## AUGUST




## SEPTEMBER




## OCTOBER




## NOVEMBER




## DECEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | | | | | |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

Email: editor@ithamil.com




அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
தீபாவளி
வாழ்த்துக்கள்
HAPPY
Diwali
FESTIVAL OF LIGHTS